வரு.74 இல. 16 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI தினகரன் වාරමංජරි
2022 ஏப்ரல் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை April 17 Sunday, 2022
16பக்கங்கள் 50/-

குறைந்தபட்ச அமைச்சர்களுடன்

## ஓரிரு நாட்களில் புதிய அமைச்சரவை



முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரண

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் குறைந்தபட்ச அமைச்சர்களை உள்ளடக்கிய அமைச்சரவை இன்னும் ஓரிரு நாட்களில்

02



03 கிளர்ச்சியை உருவாக்கி ஆட்சியை கைப்பற்றும் திட்டம்!



05 இளம் வயதில் இதயநோய் மரணம் அதிகரிப்பது ஏன்?



07 ஜனநாயக நடைமுறைகளுக்கு மாறாக தீர்வை தேட முடியாது!



09 ஆடவர் கிரிக்கெட் குழுவில் மஹேல ஜயவர்தன

மூன்றாண்டு சோகம் எம் மனங்களில்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையோருக்கு தண்டனை



அரசு உறுதியென ஜனாதிபதி உயிர்த்த ஞாயிறு தின செய்தி

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய மற்றும் முறையான விசாரணைகள் மூலம் நீதியை நிலைநாட்டுவதற்கும், தாக்குதலுக்கு காரணமான அனைவருக்கும் எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் எமது அரசாங்கம் உறுதி

02

உயிர்த்த ஞாயிறு தினம்

## தியாக வாழ்வின் பெறுமதியை வலியுறுத்தும் பண்டிகை




உயிர்த்த ஞாயிறு தின செய்தியில் பிரதமர்

இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த வெற்றியின் மகிழ்ச்சியே உயிர்த்த ஞாயிறு பண்டிகை. இது தியாக வாழ்வின் பெறுமதியை வலியுறுத்தும் பண்டிகையாகுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது உயிர்த்த ஞாயிறு தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ மக்களின் முக்கிய பண்டிகையான உயிர்த்த

02

உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துகள்



நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டுவர

# IMFஇடம் 04 பில். டொலரை எதிர்பார்க்கும் இலங்கை



நாளை திங்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க திட்டமென்கிறார் நிதி அமைச்சர் அலி சப்ரி

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை சுமார் 04 பில்லியன் டொலர் நிதியுதவியை பெற்றுக் கொள்வதற்கு எதிர்ப்பார்ப்பதாக நிதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், நாளை திங்கட்கிழமை (18) சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சர்வதேச ஊடகமொன்றுக்கு அளித்த விஷேடபேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்த இலங்கை தூதுக் குழு இவ்வார இறுதியில்

02

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டிருக்கலாம்

## சந்தேகத்தின் அடிப்படையில் 68 நபர்கள் கறுப்புப் பட்டியலில்

சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களைத் தொடர்ந்து, அத்தாக்குதல்களுடன் தொடர்புபட்டிருக்கலாமென்ற சந்தேகத்தின் அடிப்படையில், கறுப்புப் பட்டியலில் (இலங்கையில் தடை செய்யப்பட்ட நபர்கள்) 68 பேர் இணைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட

02

மக்கள் பிரதான நகருக்கு திரும்புவதற்கு

## நேற்று முதல் விசேட பஸ், ரயில் சேவைகள்



புத்தாண்டை முன்னிட்டு வெளி மாவட்டங்களுக்கு சென்ற மக்கள் மீண்டும் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களுக்கு திரும்புவதற்காக நேற்று முதல் பஸ் சேவைகள் முன்னெடுத்துள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொதுமுகாமையாளர் பண்டுக சுவர்ணஹங்ச இதனை தெரிவித்துள்ளார்.

02

## கொழும்பு வீட்டிலிருந்து வெளியேறும் மைத்திரி

அரசினால் வேறு வீடு வழங்கல்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பு பெஜட் வீதியில் அமைந்துள்ள வீட்டிலிருந்து வெளியேறவுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில், அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக

02



இந்தியாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய நிதி அமைச்சர் ஸ்ரீமதி நிர்மலா சீதாராமனை புதுடில்லியில் (13) சந்தித்து கலந்துரையாடினார். அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் எரிபொருளுக்காக இலங்கைக்கு இந்தியா வழங்கி வரும் கடனுதவி மற்றும் ஒத்துழைப்புகளுக்கு இந்திய நிதி அமைச்சருக்கு தனது நன்றிகளையும் உயர் ஸ்தானிகர் மொரகொட தெரிவித்தார்,

## தமிழர் பேரம் பேசக்கூடிய தருணம் இதுதான்



காணாமல் போனோரின் உறவுகள் கருத்து

ஓமந்தை விஷேட நிருபர்

பொது வாக்கெடுப்பு அல்லது தமிழ் மக்களின் சுதந்திர ஆட்சிக்கான பேரம் பேசலை முன்னெடுக்கவேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளதாக வவுனியாவில்

02

IMF உடனான பேச்சுவார்த்தையை பாதிக்குமாம்

## நம்பிக்கையில்லா மற்றும் குற்ற பிரேரணைகள் கையளிப்பு தாமதம்

ஒரு வாரம் பிற்போட எதிர்க்கட்சி தீர்மானம்

02

## மீண்டும் டெங்கு பரவும் அபாயம் அதிகரிப்பு



சுகாதார தரப்பினர் எச்சரிக்கை

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக மீண்டும் டெங்கு நோய் அதிகரிக்கக்கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென தேசிய தொற்று

02

எங்கள் கருத்து...

## நாட்டின் நிலைமை மேலும் மோசமடைய ஆர்ப்பாட்டங்கள் வழிவகுத்து விடக் கூடாது!

நாட்டின் பல பாகங்களிலும் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை மக்கள் நடத்தி வருகின்றனர். அவற்றிலும் குறிப்பாக தலைநகர் கொழும்பில் மக்களது தொடர் போராட்டம் சற்று உக்கிரமாகக் காணப்படுகிறது.

உண்மையில் மக்களது இப்போராட்டங்கள் எத்தகைய பின்னணியில் நடைபெறுகின்றன? இதனை மக்கள் தாமாகவே முன்வந்து நடத்துகின்றார்களா? அல்லது இவற்றின் பின்னணியில் வேறு எவராவது காணப்படுகிறார்களா? இவ்வாறான வினாக்கள் ஒருபுறம் இருந்தாலும், மக்களது இப்போராட்டங்கள் மேலும் தொடருமாக இருந்தால், நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை மேலும் மோசமடையவே வாய்ப்புள்ளது என்றே கூற வேண்டும்.

எமது நாட்டு மக்கள் தற்போது பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. குறிப்பாக மக்களது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சமையல் எரிவாயு போதுமானளவு கிடைக்காமல் போனமை, போக்குவரத்தை மேற்கொள்வதற்கு எரிபொருட்கள் பற்றாக்குறை மற்றும் பல மணி நேர மின்வெட்டு என்பவை மக்களை அரசாங்கத்தின்பால் வெறுப்படைய வைத்துள்ளன.

அரசாங்கம் நிச்சயமாக இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் கண்டு, மக்கள் அன்றாட வாழ்வை முன்னரைப் போன்று அல்லாது விடினும் ஓரளவு சுமுகமாக கொண்டு செல்வதற்கேனும் வழிவகை செய்தே ஆக வேண்டும்.

அரசாங்கம் இந்த விடயத்தில் காலதாமதம் ஏற்படுத்தியதால் மக்களது வெறுப்புணர்வை சம்பாதிக்க நேர்ந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை அரசாங்கத்துக்கு எதிரான

02

ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுக்க

## தமிழருக்கும் மனோ எம்.பி. அழைப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்தில் தமிழ் மக்களும் பங்கெடுக்க வேண்டுமென தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

இருப்பினும், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட காயம் பெரிது எனத் தெரிவித்துள்ள மனோ கணேசன், அதனாலேயே போராட்டத்தில் தமிழர்களின் பங்களிப்பு குறைவாக உள்ளதெனவும் விளக்கமளித்துள்ளார். ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பு காலிமுகத்திடலில் நடத்தப்படும் போராட்டம் 09ஆவது நாளாக இன்றும் தொடர்கிறதென்றார்.

## நாளை திங்கள் முதல் GAS உற்பத்தி வழமைக்கு

லிட்ரோ Gas நிறுவனம் அறிவிப்பு



சமையல் எரிவாயு உற்பத்தி நாளை திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படுமென லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் எரிவாயு இறக்குமதிக்கு தேவையான 10 மில்லியன் டொலரை பெற்றதாக லிட்ரோ நிறுவனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதன் கீழ், எதிர்காலத்தில் 8,500 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டுக்கு கிடைக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

02

## இலங்கைக்கு மேலும் 02 பில். டொலர் உதவி



இந்தியா வழங்குவதாக தெரிவிப்பு

உணவு மற்றும் எரிபொருளுக்காக இலங்கைக்கு மேலும் 02 பில்லியன் டொலர் நிதியுதவியை வழங்கவுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு நிச்சயமாக உதவப்போவதாகவும் நாணய பரிமாற்றம் மற்றும் கடன் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளதாக அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெளிநாட்டு செய்திச்சேவையொன்று தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதிக்காக மேலும் ஒரு பில்லியன் டொலர் கடனை இந்தியாவிடம் இலங்கை

02

காலிமுகத்திடல் தொடர் ஆர்ப்பாட்டம்;

## தமிழ் மக்களது நிதான போக்குக்கு பாராட்டு

புலம்பெயர் தமிழ் ஊடகங்களில் செய்தி

கொழும்பு காலி முகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிராக சிலர் நடத்தி வரும் தொடர் ஆர்ப்பாட்டங்களில் இலங்கை வாழ் தமிழ் மக்கள் கலந்து கொள்ளாமல் நடுநிலையான போக்குடன் நிதானமாக செயற்பட்டு வரும் விதம் குறித்து வெளிநாடுகளிலிருந்து வெளிவரும் தமிழ் ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் பலவும் பாராட்டு தெரிவித்துள்ளன.

குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழர் சார்ந்த தமிழ் கட்சிகள் எவையுமே இந்த போராட்டத்தில்

02






IMF உடனான பேச்சுவார்த்தையை பாதிக்குமாம்

# நம்பிக்கையில்லா மற்றும் குற்ற பிரேரணைகள் கையளிப்பு தாமதம்

அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை என்பவற்றை சபாநாயகரிடம் கையளிப்பதை ஒருவாரம் பிற்போடவுள்ளதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. தற்போதைய பொருளாதார இன்னல்களுக்குத் தீர்வு காணும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு அது நேரடி தாக்கம் செலுத்துமென பொருளாதார நிபுணர்கள் முன்வைத்த விடயங்களை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை என்பனவற்றை அடுத்த பாராளுமன்ற வாரத்தில் சபாநாயகரிடம் கையளிக்க எதிர்க்கட்சி திட்டமிட்டிருந்தது.

அதற்கான பிரேரணைகளில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் கையொப்பமிடும் நடவடிக்கைகள முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கையொப்பமிட்டுள்ளார். அதேநேரம், அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதன் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

## இலங்கைக்கு மேலும்...

கோரியுள்ளதாக கடந்த மாதத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. கோதுமை மா, தானிய வகைகள், சீனி, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான இலங்கையின் புதிய கடன் கோரிக்கையை நிறைவேற்றுவதாக, இந்திய அதிகாரிகள் உறு

## தமிழ் மக்களது நிதான...

தமிழ் மக்களை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்காமை அக்கட்சித் தலைமைகளின் தூர நோக்கிய சரியான பார்வையை எடுத்துக் காட்டுவதாகவும் அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந்தப் போராட்டம் எந்தவகையிலும் வெற்றி கொள்ளாது என்பதை நன்கு அறிந்த காரணத்தினாலேயே தமிழ் கட்சிகள் அவ்வாறு நடந்து கொள்வதாகவும், ஒரு சில தமிழ் கட்சிகளின் தலைமைகள் தமது எதிர்கால சுயநல தேவைகளுக்காக இவற்றில் கலந்து கொள்வதாகவும் அந்த ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. அத்துடன் இந்த ஆர்ப்பாட்டம் குறித்து அந்த ஊடகங்கள் தெரிவிக்கையில், இந்த நிகழ்வுகள், அரசியல் நோக்கற்ற தமது தனிப்பட்ட முறையிலான பழிவாங்கல்கள் நிகழ்வாக காணப்படுவதாகவும் அதற்கு எதிர்கட்சிகள் சில தூபமிட்டு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளன.

## அபாயம் அதிகரிப்பு சுகாதார...

நோயியல் நிறுவகத்தின் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார். வழமையாக ஏப்ரல் மாத நடுப்பகுதி முதல் மே, ஜுன் மாதங்கள் வரை டெங்கு பரவல் அதிகரித்து காணப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், டெங்கு நுளம்பு பரவலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டுமென தேசிய தொற்று நோயியல் நிறுவகத்தின் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்கிரம அறிவுறுத்தியுள்ளார்.

## நாளை திங்கள் முதல்...

எவ்வாறாயினும், உலக சந்தையில் சமையல் எரிவாயு விலைகள் அதிகரித்த போதிலும் இலங்கையில் விலை அதிகரிக்கப்படாமை, கடந்த இரண்டு மாதங்களாக போதிய நாணயக் கடிதங்கள் வழங்கப்படாததாலும், பண்டிகைக் காலத்தில் தேவை அதிகரித்ததாலும் தற்போது அனைத்து சமையல் எரிவாயு கையிருப்புகளும் தீர்ந்துவிட்டதாக நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. இதனால் கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் இந்நிறுவனம் 2,600 மில்லியன் ரூபா நஷ்டத்தைச் சந்தித்துள்ளது. இவ்வாறான நிலையில் எரிவாயு விநியோகம் நிறுத்தப்பட்டு நேற்று முன்தினம் இம்மாதம் 13 நாட்களில் 8,00,000 சமையல் எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நாட்டின் நிலைமை மேலும் மோசமடைய ஆர்ப்பாட்டங்கள் வழிவகுத்து விடக் கூடாது! ...

சக்திகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இன்று மக்களை அரசாங்கத்துக்கும், அரசாங்கத்தின் தலைவரான ஜனாதிபதிக்கும் எதிராக தூண்டி விட்டுள்ளன. இதுவே வெளிப்படையான உண்மை.

ஆனாலும் அரசாங்கமென்ற ரீதியில் கடன் பெற்றாவது, மக்களது பொருளாதார சுமையை குறைத்து அவர்களது அன்றாடத் தேவைகளுக்கான அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது அரசின் கடமையாகும். அந்த விடயத்தில் ஏற்பட்டு வரும் காலதாமதம், மக்களை மேலும் சலிப்படைய வைப்பதாகத் தோன்றுகிறது.

சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்ற நிறுவனங்களிடம் கடன் பெற்றாவது மக்களது தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தை சார்ந்தது. இந்த விடயத்தில் 'தூரதிருஷ்டியான பொருளாதார ஆளுமையை' கையாள அரசாங்கம் தவறி விட்டதென்று கூறப்படுவதை நிராகரிக்க முடியாமலுள்ளது. இருந்த போதிலும், அரசாங்கம் நாட்டில் தற்போது காணப்படுகின்ற பொருளாதார சுமைக்கு மேலதிகமாக இந்தியாவிடமிருந்து கடன்களைப் பெற்று தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்து, எரிபொருட்களையும் இறக்குமதி செய்து மக்களுக்கு நிவாரணத்தை வழங்கி வருகிறது. எனவே நாட்டு மக்கள் எமது நாட்டின் இன்றைய நிலைமையை நன்குணர்ந்து, பொறுமையுடன் விடயங்களைக் கையாள வேண்டும்.

எமது நாடு கொரோனா வைரஸ் தாக்கத்தினால் சுமார் இரண்டு வருடங்கள் முடங்கிக் கிடந்தது. நாடு தற்போது மீண்டெழுந்து வருகையில், உலக யுத்தமாக மாறிவிடுமோ என அஞ்சிக் கொண்டிருக்கும் ரஷ்ய உக்ரைன் நாடுகளுக்கிடையேயான யுத்தம் வெடித்தது. அந்த யுத்தமானது எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் ஆட்டம் காண வைத்துள்ளது. எனவே இன்றைய இக்கட்டான நிலைமையை மக்கள் நன்குணர்ந்து பொறுமை காப்பது அவசியம். எமது தாய்நாட்டுக்காக சில விடயங்களை விட்டுக்கொடுத்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

எதிரணியின் கொள்கையானது ஆட்சியை கைப்பற்றுவதாகவே எவ்வேளையிலுமுள்ளது. அதற்காக அவர்கள் மக்களைத் தூண்டி விட்டு எந்த எல்லைக்கும் கொண்டு செல்வதற்குப் பின்னிற்க மாட்டார்கள். 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்று நம்பி, மக்கள் ஒருபோதும் தமது நிதானத்தை இழந்து விடக் கூடாது. கடந்து வந்த காலத்தில் எந்தக் கட்சியின் அரசாங்கம் மக்களுக்கான பணிகளை உரியபடி ஆற்றியது என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கொடிய யுத்தம் இடம்பெற்ற காலத்தில் நாடு துன்பத்தில் மூழ்கி நின்ற போது அரசாங்கம் அன்றைய சவால்களை துணிவுடன் எதிர்கொண்டது என்பதை மக்கள் மறந்து விடலாகாது. 'உசுப்பி விடும்' எதிர்க்கட்சிகளின் அரசியலுக்குள் நாட்டு மக்கள் ஒருபோதும் சிக்கி விடக் கூடாது என்பதே எங்கள் கருத்தாகும்.

## சந்தேகத்தின் அடிப்படையில்...

பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் மொத்தமாக 735 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் 196 பேர் தற்போது விளக்கமறியலிலுள்ளனர். 81 பேருக்கு எதிராக கம்பஹா, கொழும்பு, கண்டி, குருணாகல், புத்தளம் நுவரெலியா, மட்டக்களப்பு மற்றும் கேகாலை மேல் நீதிமன்றங்களில் 27 வழக்குகள் இதுவரை தொடரப்பட்டுள்ளன.

இந்நிலையில் சந்தேகநபர்களில் 52 பேர் வெளிநாடுகளி லிருந்து, இலங்கை விசாரணை அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கு அமைய பயங்கரவாத மற்றும் அடிப்படைவாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டதாக சந்தேகத்தில் நாடு கடத்தப்பட்டு கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன குறிப்பிட்டார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் (12) நடைபெற்ற, உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சமூகத்தில் நிலவும் பல கருத்துக்களுக்கு தெளிவை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தகவல்களை வெளிப்படுத்திய அஜித் ரோஹன,

'எம்மை பொறுத்தவரை இத்தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி நௌபர் மௌலவியே. கடந்த 2016 ஜூன் 14 ஆம் திகதி ஸஹ்ரானுக்கு நௌபர் மௌலவி ஒரு 'பென்ட்ரைவை' கொடுத்துள்ளார். கட்டாரிலிருந்து வந்தே அவர் இதனைச் செய்துள்ளார். அதிலிருந்த விடயங்களைப் பார்த்தே ஸஹ்ரான் அடிப்படைவாதத்தின்பால் சென்றுள்ளதாக நம்பப்படுகிறது. இவ்வாறான நிலையில், தாக்குதலின் பின்னர் விசாரணையாளர்கள், வெளிநாடுகளிலிருந்த பயங்கரவாத மற்றும் அடிப்படைவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய 52 பேரை நாட்டுக்கு அழைத்து வந்து கைது செய்து விசாரித்துள்ளனர். ஐக்கிய அரபு அமீரகம், கட்டார், சவூதி அரேபியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தே இந்த 52 பேரும் அழைத்து வரப்பட்டனர். அத்துடன் இதுவரை, இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர் களின் 365 மில்லியன் ரூபா பெறுமதியான அசையும், அசையா சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன. அத்துடன் 165 மில்லியன் ரூபா பணமும் அரசுடைமையக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்டதாக சந்தேகத்தில் 68 நபர்கள், தடை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளரென தெரிவித்தார்.

## தியாக வாழ்வின் பெறுமதியை...

ஞாயிறு பண்டிகையை இன்று உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களுடன் இணைந்து இலங்கையில் வாழும் கிறிஸ்தவ மக்களும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு பண்டிகைக்கு முன்பதாக கிறிஸ்தவ மக்கள் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட புனித வெள்ளி தினத்தை அனுஷ்டித்தனர். அன்றைய தினத்தில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் அனுஷ்டித்தனர்.

அதேபோன்று தியாக வாழ்வின் பெறுமதியைப் போன்றே துணிவு மற்றும் பலத்தை வாழ்க்கையில் இணைத்துக்கொண்டு சிறந்த வாழ்க்கை பற்றி தியானிப்பதற்கு இன்றைய நாள் அனைவருக்கும் முக்கியமானதாகும்.

கிறிஸ்தவ மக்கள் விபூதிப் புதன் தொடங்கி நாற்பது நாட்கள் பல்வேறு ஒறுத்தல்களை மேற்கொண்டு செப, தப உபவாச மற்றும் புண்ணிய காரியங்களை செய்வதில் இந்த நாட்களை அனுசரிக்கின்றனர்.

அதேபோன்று சமூகத்தை அந்தகாரத்துக்குள்ளாக்கும் மோசமான சக்திகளிலிருந்து மீட்பதற்கு உயிர்த்த ஞாயிறு ஒளி மக்களுக்கு வழிகாட்டுகிறது.

சமூகத்துக்கான நீதி, மனிதத்தன்மை மற்றும் அன்புக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த இயேசு கிறிஸ்து உலகுக்கு வழங்கியுள்ள முன்மாதிரியான வாழ்க்கை மாற்றத்தை அனுபவமாகக் கொண்டு சகவாழ்வு மற்றும் அன்னியோன்ய அன்புடன் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு கிறிஸ்தவ மக்களுக்காக தாம் பிரார்த்திப்பதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் தமது உயிர்த்த ஞாயிறு தின பண்டிகை வாழ்த்துக்களையும் பிரதமர் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

## தமிழர் பேரம் பேசும் தருணம்...

தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் (15) 1881 ஆவது நாளாகவும் பிரதான தபாலகத்துக்கருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வருடப்பிறப்பையிட்டு ஏற்பாடு செய்திருந்த கவனயீர்ப்பு போராட்டத்தின்போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்□..

கொழும்பிலுள்ள தமிழ் இளைஞர்கள், சிங்கள இளைஞர்களின் புரட்சியின் மீது கொண்ட காதல், தமிழர்களுக்கு எந்த விடிவையும் கொண்டு வராது. அது தமிழர்களின் துன்பங்களை ஒழிக்காது, ஒற்றையாட்சியை மேலும் வலுப்படுத்தும்.

"கொழும்பில் ஒற்றுமை" என்ற பெயரில், இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்களிலிருந்து விடுபடுவதற்கு சிங்கள சிந்தனைக் குழுவின் உத்தியாக கூட இது இருக்கலாம். வடக்கு, கிழக்கில் எந்தவொரு தமிழர்களும் அரசாங்கத்துக்கு எதிராக பொருளாதார ஆர்ப்பாட்டம் செய்யவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இன்று பலவீனமாக உள்ளது, உணவு இல்லை, பணம் இல்லை, பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகள் முடங்கியுள்ளன. இது மற்ற நாடுகளுக்கு சந்தைப்பங்கை இழக்கிறது. இலங்கையால் வெளிநாட்டு கடனை செலுத்த முடியவில்லை. இலங்கையின் எதிர்காலம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற பணக்கார நாடுகளில் தங்கியுள்ளது.

எனவே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பொது வாக்கெடுப்பு அல்லது சுதந்திர ஆட்சிக்கான பேரம் பேசலை முன்னெடுக்கவேண்டும். வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி இந்த நாடுகளிடம் கேட்க வேண்டும். தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு, இந்த நாடுகள் இலங்கையுடன் பேரம்பேச இதுவே சிறந்த தருணம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.அல்லது அவர்களின் எம்.பி. பதவிகளை இராஜினாமா செய்வதற்கான கிளர்ச்சியை முன்னெடுத்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவுடன் தமிழர்கள் சார்பில் வாதாடக்கூடிய சில புதிய துணிச்சலான இளைஞர்களை கொண்டுவர வேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## IMF இடம் 04 பில்.டொலரை...

அமரிக்கா நோக்கி பயணிக்கவுள்ளது.

நிதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான தூதுக்குழுவே இவ்வாறு அமரிக்காவின் வொசிங்டன் நகரை நோக்கி பயணிக்கவுள்ளதுடன் அந்தக் தூதுக் குழுவில் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்த்தன ஆகியோர் உள்ளடங்குகின்றனர். இத் தூதுக் குழு, வொசிங்டன் நகரில் 05 நாட்கள் தங்கியிருந்து இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளவேண்டியநடவடிக்கைகள் தொடர்பில் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓரிரு நாட்களில்...

ஸ்தாபிக்கப்படும். இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது. அரசியல் ஸ்திரத்தன்மையிலான நிலையான அரசாங்கத்தையே சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளதாக முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

எரிபொருள், எரிவாயு மற்றும் மின் விநியோக சேவை கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு இன்னும் ஓரிரு நாட்களில் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும். 20 நாட்களுக்குத் தேவையான பெற்றோல், 08 நாட்களுக்கு தேவையான டீசல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கையிருப்பிலுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்திலும், ஒரு சிலரது தவறான பிரசாரங்களினாலும் பொது மக்கள் தேவைக்கு மேலதிகமாக எரிபொருளை சேமித்துக் கொள்கிறார்கள். மருந்துப் பொருட்கள் கொள்வனவுக்கு துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மின்விநியோக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு நாளை 18ஆம் திகதிக்கு பின்னர் நிரந்தரத் தீர்வு காண முடியுமென இலங்கை மின்சார சபையும், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவும் அறிவித்துள்ளது. சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு இம்மாத காலத்தில் நிரந்தர தீர்வு காண முடியும்.

இடைக்கால அரசாங்கம் அமைப்பது குறித்து தற்போது அரசியல் மட்டத்தில் இருவேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. இடைக்கால அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லையென பிரதான எதிர்க்கட்சிகள் வெளிப்படையாக அறிவித்துள்ளதையடுத்து இடைக்கால அரசாங்கம் குறித்து தொடர்ந்து கவனம் செலுத்துவது பயனற்றதென்றார்.


කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK
IBRD · IDA | WORLD BANK GROUP

Funded by
The European Union

பெறுகை அறிவித்தல்

சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்தினால் நிதி அளிக்கப்பட்டது

CREDIT NO. CR 5873 LK PROJECT ID NO. P156019

ASMP கொத்தணிகள் விவசாயிகளின் நிறுவனங்களை நிறுவுவதற்கு செயலக சேவைகளை பெற சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்

தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக பின்வரும் பெறுகைகளின் இறுதித் திகதியை நீடிப்பதற்கு திட்ட பெறுகைக் குழுவின் தலைவரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைமனு பிணையின் பெறுமதி/ மீளளிக்கப்படும் வைப்பு (ரூபா) |
|---|---|---|
| 1. 20 முன்னோடித் திட்டங்களுக்காக விவசாய நிறுவன செயலக சேவைகளுக்காக சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்/ Lk-MOA-PMU- 261124-NC-RFB | 3500.00 | 150,000.00 |
| 2. 20 ISP திட்டங்களுக்காக விவசாய நிறுவன செயலக சேவைகளுக்காக சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்/ Lk-MOA-PMU- 261123-NC-RFB | 3500.00 | 150,000.00 |
| TOR https://www.asmp.lk/advertisement/(document) | | |

திருத்தப்பட்ட இறுதித் திகதி 2022 ஏப்ரல் 25 ஆம் திகதி பி.ப. 2.00. விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். ஏனைய விபரங்கள் 2022 மார்ச் 25 ஆம் திகதி வெளியான விளப்பரத்தின்படி மாற்றமின்றி நீடிக்கும். மேலதிக விபரங்களை பெறுகை நிபுணர் - 0714961603 என்ற தொலைபேசி இலக்கத்தில் பெறலாம்.

**தலைவர்**
**திட்ட பெறுகைக் குழு**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்**
**கமத்தொழில் அமைச்சு, இல.: 123/2,**
**பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.**
2022.04.17


## நேற்று முதல் விசேட...

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 200 மேலதிக பஸ்களை நேற்றைய தினம் சேவையில் ஈடுபடுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று பயணிகள் போக்குவரத்தை முற்றாக வழமைக்கு கொண்டு வர முடியுமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியாக தமது சங்கத்துக்கு உரித்தான பஸ்களில் 1,500 பஸ்களை மாத்திரமே நேற்று சேவையில் ஈடுபடுத்த தீர்மானித்ததாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டீசல் இன்மையால் பஸ் போக்குவரத்தை உரிய வகையில் முன்னெடுக்க முடியாதுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரயில் போக்குவரத்தை நாளை 18 ஆம் திகதி முதல் வழமைக்கு கொண்டு வர முடியுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதுவரை தூர சேவை ரயில்கள் மாத்திரம் நேர அட்டவணைக்கு அமைய சேவையில் ஈடுபடுமென ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நாளை 18 ஆம் திகதி வரை அலுவலக ரயில்களை பயணிகளின் தேவைப்பாடுகளுக்கமைய முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்பு வீட்டிலிருந்து...

பயன்படுத்திய கொழும்பு, பெஜட் வீதியில் அமைந்துள்ள வீட்டை, ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் தொடர்ந்தும் அவருக்கு சொந்தமாக்கிக்கொள்ளும் வகையில் பயன்படுத்தி வந்துள்ளார்.

இதற்கு அமைச்சரவை ஊடாக முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு உயர் நீதிமன்றம் கடந்த மார்ச் 29 ஆம் திகதி இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

பத்மன் சூரசேன தலைமையிலான யசந்த கோதாகொட, மஹிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்களை உள்ளடக்கிய நீதியரசர்கள் குழாமே இந்த இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்தது.

இந்த இடைக்கால தடை உத்தரவு, பிறப்பிக்கப்பட்ட தினமான மார்ச் 29 ஆம் திகதியிலிருந்து நான்கு வாரங்களின் பின்னர் அமுலாகும் வித்தில் பிறப்பிக்கப்பட்டது.

அதனால் பெஜட் வீதி வீட்டில் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதியால் தங்கியிருக்க முடியாத நிலை ஏற்பட்டதையடுத்து, புத்தாண்டின் பின்னர் அவர் அவ்வீட்டிலிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பில் மற்றொரு வீட்டை அரசாங்கம் வழங்கியுள்ளதுடன், பெஜட் வீதி வீட்டை விட்டு அவர் வெளியேறி, அரசு வழங்கும் புதிய வீட்டில் தங்கவுள்ளார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்...

பூண்டுள்ளதென்பதை நான் வலியுறுத்துகிறேனென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மூன்றாண்டுகளுக்கு முன்பு நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சோகமான அனுபவம் இன்னும் நம் மனதில் நீங்காமல் இருக்கின்றதென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை உயிர்த்த ஞாயிறு தினமாகும். இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து கொண்டாடப்படும் உயிர்த்த ஞாயிறு பண்டிகை, இலங்கை மற்றும் உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் ஒரு உன்னதமான மத அனுட்டான பண்டிகையாகும்.

உயிர்த்த ஞாயிறு பண்டிகை, உள்ளத்தின் இருளகற்றி, நம்பிக்கையை வெளிக்கொணர்ந்து, வாழ்க்கையின் மாற்றத்துக்கு கிறிஸ்துவின் வல்லமையை உலகுக்கு வெளிப்படுத்துகின்றது. அது நம்பிக்கை மற்றும் விடுதலை மூலம் உலக இருள் மற்றும் விரக்தியை போக்க இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த செய்தியை நினைவுகூர்வதற்கு அனைவரையும் அழைக்கிறது.

நம்பிக்கையின் உதவியால் நாம் அவநம்பிக்கையையும் நிச்சயமற்ற தன்மையையும் கடந்து முழு உலகத்துக்கும் அன்பையும் இரக்கத்தையும் காட்ட வேண்டும் என்பதை இயேசு கிறிஸ்துவின் சிறந்த போதனைகள் நமக்கு நினைவூட்டுகின்றன. உயிர்த்த ஞாயிறின் இந்தச் செய்தி நம் வாழ்வின் இருண்ட மற்றும் நம்பிக்கையற்ற தருணங்களில் கூட நம்பிக்கையையும் தைரியத்தையும் தருகிறது. உயிர்த்த ஞாயிறு, நேர்மறை மற்றும் ஆன்மீக பலம், நம் வாழ்விலும் உலகத்திலும் நம்பிக்கையின்மை மற்றும் பாவத்தின் இருளால் ஏற்படும் சவால்களை வெற்றிகொள்ள நம் அனைவருக்கும் சக்தியை தருகின்றது.

நமது மதங்களினால் பயிற்றுவிக்கப்படும் ஆன்மீக ஒழுக்கம், கடந்த இரண்டு ஆண்டுகளாக உலகளாவிய தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது. மேலும் உலகளாவிய தொற்றுநோய் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக நமது கிறிஸ்தவ சகோதர சகோதரிகள் இந்த ஆண்டு உயிர்த்த ஞாயிறு பண்டிகையை வழமைபோன்று கொண்டாட முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

எவ்வாறாயினும், மூன்றாண்டுகளுக்கு முன்பு நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சோகமான அனுபவம் இன்னும் நம் மனதில் நீங்காமல் இருக்கின்றது. எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய மற்றும் முறையான விசாரணைகள் மூலம் நீதியை நிலைநாட்டுவதற்கும், தாக்குதலுக்கு காரணமான அனைவருக்கும் எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் எமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதென்பதை நான் வலியுறுத்துகிறேன்.

அமைதி, தைரியம் மற்றும் நம்பிக்கை ஆகிய ஆன்மீக பரிசுகளால் அனைவரின் வாழ்க்கையையும் வளப்படுத்தும் மகிழ்ச்சியான மற்றும் ஆசிர்வதிக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு பண்டிகையாக அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**'அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான உரிமை மக்களுக்கு உள்ளது. ஆனால், அமைதியான ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி நாட்டில் குழப்பத்தை ஏற்படுவதற்கு சில தரப்பினர் முயற்சிக்கின்றனர்' என முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்தும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே முன்னாள் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.**






# நாட்டில் கிளர்ச்சியை உருவாக்கி ஆட்சியை கைப்பற்றும் திட்டம்!

## முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பேட்டி

**கே: அண்மையில் நடைபெற்ற அரசாங்கக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் எவை?**

பதில்: நாட்டில் நிலவும் எரிபொருள், சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு, மின் வெட்டு உள்ளிட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. தேவையான அளவு இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், சேதன உரங்களை இறக்குமதி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. எரிபொருள் சிக்கலைத் தீர்ப்பதற்கும், இந்தியக் கடன் வரியின் கீழ் எரிபொருளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான ஒதுக்கீடுகளைக் கண்டறிய முன்னுரிமை அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் இருப்புகளில், மின்சாரத் துறைக்கு போதுமான எரிபொருளை வழங்க அறிவுறுத்தப்பட்டது. மீதித் தொகையைத் தேவையான மருந்துகளின் இறக்குமதிக்குப் பயன்படுத்துவது பற்றியும் ஆராயப்பட்டது. மேலும், புதிய அமைச்சரவை இன்னும் நியமிக்கப்படவில்லை. பாராளுமன்றத்தில் 113 உறுப்பினர்களின் ஆதரவைக் காண்பித்து அரசாங்கத்தை அமைக்க வருமாறு அரசாங்கம் பகிரங்க அழைப்பு விடுத்தது. பிரதமர் உட்பட அரசாங்கத்தை அவர்களிடம் ஒப்படைப்போம் என்று பிரதமர் கூட ஒப்புக் கொண்டார்.

இல்லையெனில் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க வாய்ப்பு உள்ளது. அப்போது கூட்டணி ஆட்சியில் இணைபவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும். சுற்றுலாப் பயணிகளின் வருகையும் வெளிநாட்டுப் பணம் அனுப்புதலும் குறைந்துள்ளன. அதேவேளை, கொவிட்19 தொற்றுநோயால் பலர் வேலை இழந்துள்ளனர். இதன் விளைவாக, உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் தாக்கம் இங்கும் உணரப்பட்டுள்ளது.

தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமான அதிகரிப்பைக் காட்டியுள்ளது மற்றும் ஒவ்வொரு மாதமும் 100,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகிறார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளியேறுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதோடு, அடுத்த மூன்று நான்கு மாதங்களுக்குள் அவர்களது பணம் நாட்டிற்கு வந்து சேரும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைக்கு உரிய நேரத்தில் தீர்வு காண முடியும்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் உதவியுடன் இந்த நெருக்கடியை எம்மால் சமாளிக்க முடியும். இருப்பினும், இந்த நெருக்கடியை சமாளிக்க சிறிது காலம் எடுக்கும். இந்த நெருக்கடியான சூழலை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை எதிர்க்கட்சிகள் அறிந்திருந்ததால், எப்படியாவது மக்களைத் தூண்டி விட்டு ஏப்ரல் 3 ஆம் திகதி வீதிக்குக் கொண்டு வந்தனர்.

**கே: பொதுஜன பெரமுனவின் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்துள்ளனர். இவ்வாறான நிலையில் அரசுக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளதா?**

பதில்: ஆம், இன்னும் அரசாங்கத்திடம் பெரும்பான்மை உள்ளது, எங்களிடம் 118 உறுப்பினர்கள் உள்ளனர். பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்தில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட்டமைக்கு நியாயமான காரணங்கள் உள்ளன. அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்தால், சில சமயங்களில் அவர்கள் மீண்டும் அரசாங்கத்துடன் கைகோர்ப்பார்கள்.

**கே: பிரதமர் பதவி விலகவில்லை என்றால், அமைச்சரவை கலைக்கப்பட்டதாகக் கருத முடியாது என சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: இராஜினாமாக் கடிதங்களைப் பிரதமரிடம் கொடுத்தது தவறானது என சட்ட நிபுணர்கள் வாதிடுகின்றனர். உண்மையில், ஜனாதிபதி எந்த நேரத்திலும் அந்தக் கடிதங்களில் கையெழுத்திடலாம் என்பதால் அவற்றை பிரதமரிடம் கொடுத்தோம். அமைச்சரவை கலைக்கப்பட்ட பின்னர் நான்கு புதிய அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அடுத்த தேர்தல் நடைபெறும் வரை அமைச்சரவை செயற்பட முடியும். உண்மையில், யாராவது 113 உறுப்பினர்கள் இணைந்து ஆட்சி அமைக்கும்வரை செயற்படும் திறன் எமக்கு உள்ளது.

நாம் அனைவரும் அமைச்சுப் பொறுப்புக்களை இராஜினாமாச் செய்ய வேண்டும் எனப் பிரதமர் முன்மொழிந்தார். அப்படியாயின் பாராளுமன்றத்தில் செயற்பட முடியாது என்பதால், பிரதமர் பதவி விலகக் கூடாது என்று நாங்கள் முன்மொழிந்தோம். எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடும் திறன் படைத்தவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தோம். கடந்த பல ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்த பல்வேறு அரசுகளின் கீழ் செயற்பட்ட அதிகாரிகளின் குறைபாடுகள் மற்றும் நிர்வாகப் பிழைகளுமே இந்த நிலைமை உருவாகக் காரணமாகும். இந்த தவறை சரி செய்ய எந்த தியாகத்தையும் செய்ய தயாராக இருப்பதாக அமைச்சரவை தெரிவித்துள்ளது.

**கே: எதிர்க்கட்சிகள் 113 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்கும் நிலையில் இல்லை. இந்நிலை தொடருமானால் நாட்டில் ஸ்திரமற்ற நிலைமை ஏற்படுமா?**

பதில்: எதிர்க்கட்சிகள் 113 உறுப்பினர்களின் ஆதவைப் பெற்று ஆட்சி அமைக்கும் நிலையில் இல்லை என்றால், அதனால்தான் கூட்டணி ஆட்சி அமைக்கக் கோரியுள்ளோம். மகாநாயக்க தேரர்கள் கூட ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் மூலம் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண கூட்டணி அரசாங்கத்தை உருவாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தேர்தலுக்குச் செல்லும் நிலையில் நாங்கள் இல்லை. மகாநாயக்க தேரர்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து, கூட்டணி அரசாங்கத்தை அமைப்பதற்கு கைகோர்க்குமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பன ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்தன. நாட்டில் நெருக்கடியான சூழலை உருவாக்கி தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நனவாக்க வேண்டும் என்பதையே அவர்கள் உண்மையில் விரும்புகின்றனர்.

**கே: பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகள் கூட்டணி ஆட்சி அமைப்பதற்கு தயாராக இல்லை என்றால், தற்போது நிலவும் நெருக்கடிக்கு என்ன தீர்வு?**

பதில்: பாராளுமன்றத்தில் சுயேச்சையாக மாறிய பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் நாங்கள் காபந்து அரசாங்கத்தை அமைக்க வேண்டும். அதுதவிர வேறு மாற்றுவழி இல்லை.

**கே: ஜனாதிபதியும் அரசாங்கமும் உடனடியாக பதவி விலக வேண்டுமெனக் கோரி தற்போது நாடளாவிய ரீதியில் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: இந்தப் போராட்டங்களுக்குப் பின்னால் சில அரசியல் நோக்கங்கள் உள்ளன. ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் வாகனத்தில் தலைக்கவசம் அணிந்த நபர் ஒருவர் ஏறிச் சென்றமை எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இந்த 'ஹெல்மெட் கும்பல்' நாடு தழுவிய போராட்டங்களுக்கு தலைமை தாங்குவதும், பிரச்சினைகளை உருவாக்குவதும் வெளிப்படையானது. ஜனநாயக ரீதியில் ஆட்சிக்கு வர முடியாத அரசியல் கட்சிகள் நாட்டில் கிளர்ச்சியை உருவாக்கி ஆட்சியைப் பிடிக்க முயல்கின்றன.

இந்தச் செயல்களின் பின்னணியில் முன்னிலை சோசலிசக் கட்சியும் உள்ளது. மேலும் அதன் உறுப்பினர்கள் நாட்டில் நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்க முயற்சிக்கின்றனர். மக்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடும் போது, அந்த இடங்களுக்கு வந்து குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். பெரும்பாலான பகுதிகளில், இந்த வெளியாட்கள் போராட்டங்களில் கலந்து கொண்டு மக்களைத் தூண்டிவிட முயற்சிக்கின்றனர். அமைதியான முறையில் போராட்டம் நடத்த மக்களுக்கு உரிமை உள்ளது. எவ்வாறாயினும், முன்னாள் 'யஹபாலன' அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் நிலவிய நிலைமையும் இந்த நிலைமையை உருவாக்குவதற்கு வழிவகுத்துள்ளதை அவர்கள் உணர வேண்டும்.

2015 இல் இருந்து பெறப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடனை மீளச் செலுத்துவதற்கு டொலர்கள் தேவைப்படுகின்றன. இன்று நாம் டொலர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். இந்த நெருக்கடியிலிருந்து விடுபட நாம் தொடங்கிய வேலைத்திட்டங்கள் வெற்றியடைகின்றன. நமது செலவினங்களைக் குறைத்து, நாட்டிற்கு தேவையற்ற இறக்குமதியை நிறுத்தியுள்ளோம். இருப்பினும், இந்த முடிவுகளைப் பார்க்க சிறிது காலம் ஆகும். இந்த நெருக்கடியில் இருந்து விடுபடுவோம் என்று எதிர்க்கட்சிகளுக்கு தெரியும். அதனால்தான் கடைசி நேரத்தில் இந்த நிலையை உருவாக்க முயன்றனர்.

> **"போராட்டங்களுக்குப் பின்னால் சில அரசியல் நோக்கங்கள் உள்ளன. ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் வாகனத்தில் தலைக்கவசம் அணிந்த நபர் ஒருவர் ஏறிச் சென்றமை எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இந்த 'ஹெல்மெட் கும்பல்' நாடு தழுவிய போராட்டங்களுக்கு தலைமை தாங்குவதும், பிரச்சினைகளை உருவாக்குவதும் வெளிப்படை! "**




# அதிர்ஷ்டமான மாதத்தில் நாம் செய்துள்ள அறுவடை!

ஏப்ரல் மாதம் நல்ல அதிர்ஷ்டமான காலமாகும். ஜோதிட சாஸ்திரம் கூறுவது போல சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு செல்வது சித்திரை மாதத்தில் ஆகும். சூரியனின் இந்த பயணத்தை முன்னிறுத்தி விழாக்களைக் கொண்டாடுவது எமது கலாசாரத்தின் ஒரு அம்சமாகும்.

சித்திரை மாதம் பிறந்தவுடன் பண்டிகைக்கான கொண்டாட்டங்கள் ஆரம்பிக்கும். மரங்கள் பூக்களால் பூத்துக் குலுங்கும். குயிலின் நாதம் புதுவருடத்தின் வருகையை சிறுவர் சிறுமியருக்கு உணர்த்தும். பயிர்களில் இருந்து அறுவடை சேகரிக்கப்படுவதுடன் தோட்டங்கள் வளமாகி தானியங்களால் நிரம்பும். பசுமை சித்திரை மாதத்தின் மகிழ்ச்சியை மேலும் அதிகரிக்கும். பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் அயலாருடன் மகிழ்ச்சியாக களிப்பது புதுவருடத்தின் பிரதான அம்சமாகும். உணவுகள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் விசேடமாகத் தயாரிக்கப்படும். சுபவேளையில் நாடு பூராவும் ஒரே நேரத்தில் பழைமையான சம்பிரதாயங்களின்படி வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

பிறந்துள்ள புதுவருடம் இதுவரை வரலாற்றில் காணப்படாத வகையில் மாறி வருகிறது. கடந்த இரண்டு வருடங்களாக நாம் எண்ணியது போல் புதுவருடம் அமையவில்லை. கொவிட் தொற்று மோசமாகப் பரவி வந்த வேளையில் புதுவருட கொண்டாட்டம் என்பது மனதில் தோன்றிய கேள்வியாகும். நோய்ப் பயம் கணிசமான அளவு இப்போது குறைந்துள்ளது. மக்கள் வாழ்க்கை சாதாரண நிலைமைக்கு வந்துள்ளது. எவ்வாறாயினும் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கும் எமது மனம் நிலையற்ற தன்மையில் உள்ளது.

எம் அனைவருக்கும் வேறுவிதமான அனுபவம் உள்ளது. விதைத்தது எமக்கு அறுவடையாகக் கிடைத்துள்ளது. ஒரு நாடாக, சமூகமாக நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. ஒவ்வொருவர் மீதும் விரல் நீட்ட முடியும். விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் அதிகமாகும். கடந்த காலம் மீண்டுமொருமுறை எமக்கு ஏற்றவாறு உருவாகாது.

எம்மால் செய்யக் கூடிய ஒன்றுள்ளது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்காலத்தை புதிதாக உருவாக்க வேண்டும். அரசியல்வாதிகளாக எடுத்த தவறான முடிவுகள் என் முன்னே உள்ளன. அறிஞர்கள், பொருளாதார நிபுணர்களின் தவறுகள் அல்லது வேண்டுமென்றே பின்பற்றிய முறைகள் தோல்விக்கு காரணமெனத் தெரிகின்றது.

சமூகத் தலைவர்கள் தங்களது பொறுப்புகளை சரியான முறையில் நிறைவேற்றவில்லை. மதத்தலைவர்கள் நாட்டில் மீள்உருவாக்கத்தை நோக்காகக் கொண்டு பின்பற்றிய முறைகள் பிழையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. சமூகத்தை புத்திசாலிகளாக்குவதில் ஊடகங்கள் வெற்றி பெற்றுள்ளனவா? சமூக ஊடகங்கள் ஏற்படுத்தியுள்ள குழப்ப நிலைமை பாரிய தொல்லைக்குக் காரணமாக அமைந்துள்ளது. இது இரகசியமான விடயமல்ல. கண்ணாடிக்கு முன்னால் நிற்க வேண்டியது அயலவரல்லர். கேள்வி கேட்க வேண்டியது முன்னால் உள்ளவரிடம் அல்ல என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். நாம் அனைவருமே ஒவ்வொரு விதத்தில் அதன் பங்குதாரர்களே.

மக்கள் சமூகம் செய்துள்ள அறுவடை பொருளாதாரப் பிரச்சினையாகும். நீங்கள் காண்பது அரசியல் குழுவின் அதிகாரம் தொடர்பான ஒன்று என்பதை நான் அறிவேன். அரசியலமைப்பு அல்லது சர்வதேச சூழ்ச்சியாக காணும் ஒரு தரப்பாரும் எம்மிடையே இருக்கின்றார்கள். கல்விமுறையில் உள்ள தவறு, வரலாற்றை மறந்து போனது போன்ற காரணங்கள் தற்போதுள்ள சிக்கலான பிரச்சினைகளுக்கு மேலதிக காரணங்கள்.

யுத்தம் மற்றும் எம் அனைவரையும் பாதிப்புக்குள்ளாக்கிய பயங்கரவாதமும் இன்னொரு புறத்தில் காரணமாக அமைந்தது எனக் கூற முடியும். சமூக நம்பிக்கை உடைந்து போனமை, புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறியமை என பல விடயங்கள் எம் முன்னால் உள்ளன. இவற்றில் ஒன்றோ அல்லது பலவோ இணைந்து இன்றுள்ள நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

ஒரு பிறழ்விலிருந்து முன்மாதிரி ஏற்படாது. அனைத்தையும் அழிப்பது சரியான மார்க்கம் ஆகாது. நாம் அனைவரும் இனி இணைந்தே தீர்வை கண்டுபிடிக்க வேண்டும். தனித்தனியாக சிந்திக்கும் முறையை விடுத்து, அதனை ஜனநாயக கட்டமைப்புக்குள் ஒன்றாக கலந்துரையாடி ஒன்றாக கணக்கிட்டு செயல்படும் முறையை ஏற்படுத்த வேண்டும். அர்ப்பணிப்பு மிக முக்கியமாகும். நாம் அனைவரும் ஒரு அடி பின்னோக்கி வைக்க வேண்டும். துரதிர்ஷ்டத்தின் முன்னால் நாம் தொடர்ந்து விவாதித்து பயனில்லை. அதிகாரத்தை பெற்றுக்கொள்ளும் கட்சியோ அல்லது நபரோ முக்கியமல்ல. பொது மக்களுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும். மக்களின் இறையாண்மையை பாதுகாக்கும் கொள்கைகள் குறித்து கவனம் செலுத்தினால் மாத்திரமே புதிய வருடம் எமக்கு அதிர்ஷ்டத்தை கொண்டுவரும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

# உயிர்ப்புப் பெருவிழா சிறப்பு மலர்

## கிறிஸ்துவின் உயிர்ப்பே கிறிஸ்தவத்தின் உயிர்நாடி

புதிதாக ஓர் ஆலயம் கட்டப்பட்ட பிற்பாடு அதனை பார்வையிட வந்திருந்த ஒருவர் ஆலயத்தை முழுமையாக பார்வையிட்ட பிற்பாடு எழுப்பிய முதல் வினா 'எல்லா ஆலயங்களிலும் சாதாரணமாக இயேசுகிறிஸ்து சிலுவையுடன் அறையப்பட்டவராகவே காணப்படுகின்றார். ஏன் இங்கு மட்டும் சற்று வழக்கத்திற்கு மாறாகவும் வித்தியாசமாகவும் சிலுவையை விட்டு விலகியவராகவும் வேறொரு வடிவம் கொண்டவராகவும் காணப்படுகின்றார்' அவரிடம் 'இயேசுகிறிஸ்து சிலுவைச்சாவினை ஏற்றுக்கொண்டார், மரணித்தார் ஆனால் இன்று அவர் உயிர்த்துவிட்டார். அவரது உயிர்ப்பின் பிரசன்னமே இன்று திருச்சபையிலுள்ள பிரசன்னமாகும்.

அதன் பிரதிபலிப்பின் அடையாளம்தான் இந்தச் சிலுவையும் உயிர்த்த இயேசுகிறிஸ்துவின் திருவுருவமுமாகும்' என்று பதிலிறுத்தேன்.

கிறிஸ்தவர்களின் அதியுன்னத நம்பிக்கை இயேசுகிறிஸ்து சாவைவென்று வெற்றி வீரராக உயிர்த்தெழுந்தார் என்பதாகும். இறைமகன் இயேசுகிறிஸ்து தாம் முன்னுரைத்தபடியே இறந்த மூன்றாம் நாளில் உடலுடன் உயிர்பெற்றெழுந்தார் என்பது கிறிஸ்தவர்களின் அசைவுறாத நம்பிக்கையாகும். இயேசுகிறிஸ்து தாம் சொன்னபடியே இறந்து மூன்றாம் நாளில் உயிர்பெற்றெழுந்தார் என்பதற்கு நற்செய்திகள் சாட்சியம் பகர்கின்றன. நற்செய்தி நூல்களைப் புரட்டிப் பார்க்கின்றபோது இரண்டு வகையான சாட்சியங்கள் அவரது உயிர்ப்பிற்கு கட்டியம் கூறிநிற்கின்றன என்பது கண்கூடு. அவை யாவன,

- ❖ இயேசுவை அடக்கம் பண்ணியிருந்த வெற்றுக்கல்லறை
- ❖ இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பின் பின்னரான விண்ணேற்றம் வரையிலான காட்சிகள்

**வெறுமையான கல்லறையும் உயிர்ப்பும்**

வாரத்தின் முதல்நாளில் அவரது கல்லறையை தரிசிக்க சென்றவர்களுக்கு அதிர்ச்சியும், பேரிடியும் காத்திருந்தன. கல்லறையின் கல் புரட்டப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது இயேசுவின் அடக்கம் பண்ணப்பட்ட உடலைக் காணவில்லை. நான்கு நற்செய்தியாளர்களும் இதனை குறிப்பிடுகின்றார்கள். மத்தேயு நற்செய்தி 28:6ம் வசனத்தில் வானதூதர் 'அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பட்டார்' என சாட்சியம் பகர்கின்றார். மாற்கு நற்செய்தி 16:6ம் வசனத்தில் இளைஞர் ஒருவர் 'அவர் உயிருடன் எழுப்பப்பட்டார், அவர் இங்கே இல்லை' என்று சாட்சியம் கொடுக்கின்றார். லூக்கா நற்செய்தி 24:6ம் வசனத்தில் இருவர் 'அவர் இங்கே இல்லை உயிருடன் எழுப்பட்டார்' என சாட்சியம் கூறுகின்றார்கள். யோவான் நற்செய்தி 20:110 வரையிலான பகுதியில் வெறுமையான கல்லறையை தரிசித்த திருத்தூதர்கள் கண்டு நம்பினார்கள் என்று பறைசாற்றப்படுகின்றது. இவற்றினூடாக இயேசுவை அடக்கம்பண்ணப் பயன்பட்ட வெறுமையான கல்லறை அவரது உயிர்ப்பிற்கு சாட்சியம் பகர்கின்றது.

**உயிர்ப்பினைத்தொடர்ந்த காட்சிகள்:**

அவரது உயிர்ப்பினைத்தொடர்ந்து விண்ணேற்றம் வரையிலான நாற்பது நாட்களின் காலப்பகுதியில் பல்வேறு விதமான காட்சிகளின் மூலம் தாம் தேர்ந்துகொண்ட திருத்தூதர்களையும், ஏனையவர்களையும் சந்தித்து திடப்படுத்தினாரென்று நற்செய்திகளிலும், திருத்தூதர்பணி நூலிலும் பல்வேறுபட்ட குறிப்புக்கள் காணப்படுகின்றன.

**திருத்தூதர்களின் திருத்தூதுரை:**

இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பினால் திருத்தூதர்கள் அதிக ஆற்றலும், வல்லமையும் பெற்றுக் கொண்டார்கள். இயேசுவின் பாடுகள், மரணத்தின் பிற்பாடு கோழைகளாக பயந்து ஒதுங்கிய திருத்தூதர்கள் உயிர்ப்பின் பின்னரான அவரது காட்சிகளால் புதுத்தெம்பும் சக்தியும் பெற்றுக் கொண்டார்கள்.

அவ்வாறு திடமாக்கப்பட்ட திருத்தூதர்கள் தாங்கள் சென்றவிடமெல்லாம் இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சாட்சியம் பகர்ந்தார்கள். பெந்தகோஸ்து அபிசேகத்தைத் தொடர்ந்து திருத்தூதர்களின் திருத்தூதுரை உலகமெங்கும் வியாபிக்கத் தொடங்கியது. அதன் தொடக்கமாக திருத்தூதர்பணி 2:3132 பகுதிகளில் திருத்தூதர் பேதுரு தனது கன்னி மறையுரையில் 'வாழ்வுக்குரியவரை நீங்கள் கொன்றீர்கள் ஆனால் கடவுள் அவரை மாட்சியுடன் உயிர்தெழச் செய்தார், இதற்கு நாங்கள் சாட்சிகள்' என்று பொருள்பட ஐயந்திரிபுற கற்பித்தார். இதுவே அனைத்து திருத்தூதர்களின் போதனையின் சாரம்சமாகியது.

**திருத்தூது மடல்களும் உயிர்ப்பும்:**

திருத்தூதர்களின் போதனையைத்தொடர்ந்து முதலில் எழுத்துருப் பெறத்தொடங்கிய திருமுகங்களும் இயேசுகிறிஸ்து உடலுடன் உயிர்த்தெழப்பெற்றார் என்கின்ற உறுதியான நம்பிக்கையுடன் எழுதப்பெற்றன. இதற்கு வலுச்சேர்க்கும் வண்ணம் திருத்தூதர் பவுல் 1கொரி 15:14 பகுதியில் 'கிறிஸ்து உயிருடன் எழுப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளாற்றதாயிருக்கும்' என்று கற்பிப்பதைக் காண்கின்றோம்.

இதனடிப்படையில் நோக்கும்போது தொடக்கத்திருச்சபையில் திருத்தூதர்களின் தூதுரையின் மையமாக விளங்கியது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பே என்றால் அது மிகையாகாது. அவ்வுயிர்ப்புச் செய்தியினை அறிவித்தமைக்காக அவர்கள் சொல்லொண்ணா துன்பங்களையும் வேதனைகளையும் சந்தித்தார்கள் என்பது திருச்சபை வரலாற்றின் உண்மைக் குறிப்புகளாகும்.

**தொடக்கத்திருச்சபை வாழ்வில் உயிர்ப்பு:**

இவ்வாறு திருத்தூதர்களின் போதனையால் கட்டிக்காக்கப்பட்டு, தொடக்கத்திருச்சபையாரின் நம்பிக்கையால் வளர்த்தெடுக்கப்பட்டுவந்த இயேசுகிறிஸ்து எனும் நம்பிக்கை பல்வேறு காரணிகளால் வரலாற்றில் சிதைக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒருபுறம் மறைக் கலாபனைகளால் கிறிஸ்தவ விசுவாசம் சுக்குநூறாக்கப்பட மறுபுறம் தப்பறையான போதனைகளால் (போதகங்கள்) அலைக்கழிக்கப்பட்டன. ஆயினும் அவற்றிக்கெல்லாம் திருச்சபை புறமுதுகிட்டு ஒடிவிடவில்லை. மாறாக இறையாவியானவரால் வழிநடத்தப்பட்ட திருச்சபை அவற்றை துணிவுடன் எதிர்கொண்டன. அவ்வாறு திருச்சபை செயல்பட்டமைக்கான ஒரே காரணம் உயிர்த்த ஆண்டவர்மீது கொண்டிருந்த அசைவுறாத நம்பிக்கையாகும்.

அத்தகைய நம்பிக்கையில் தோன்றியதுதான் நிசேயா பொதுச்சங்கம் (கிபி 325) வழங்கிய விசுவாசப் பிரமாணமாகும். அவ்விசுவாசப் பிரமாணத்தின் இயேசுகிறிஸ்து குறித்த கூற்றுக்களிலொன்று '□அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்' என்பதாகும். இங்கே திருத்தூதர்களின் நம்பிக்கை முழுத்திருச்சபையின் நம்பிக்கையாக மாறிவிட்டது. இதுவே இன்று அனைத்து கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாக மாறவேண்டும்.

அத்தகைய திருச்சபையின் விசுவாசத்தின் தொடர்ச்சிதான் உலகெலாம் பரந்து வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் கொண்டாடுகின்ற ஞாயிறு உயிர்ப்புக் கொண்டாட்டமாகும். ஒரு கிறிஸ்தவனுக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு இல்லாமல் கிறிஸ்தவ வாழ்வு இருக்கமுடியாது. எனவேதான் ஒவ்வொரு ஞாயிறு கொண்டாட்டமும் உயிர்ப்பின் ஞாயிறாகும்.

இதனை'கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்தே உருவான திருத்தூதர்களின் மரபுப்படி திருச்சபை பாஸ்கா மறைநிகழ்ச்சியை ஒவ்வோர் எட்டாம் நாளாகிய ஞாயிறன்று கொண்டாடுகின்றது. எனவே இந்நாள் ஆண்டவருக்குரிய நாள் அல்லது ஆண்டவரின் நாள் என அழைக்கப்படுவது முறையே' என்று இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருவழிபாடு கொள்கைத் திரட்டின் 106ம் இலக்கம் சுட்டிக்காட்டுகின்றது. இதனூடாக திருச்சபையின் ஞாயிறு வழிபாடு ஓர் உயிர்ப்பு விழாக் கொண்டாட்டம் என்பது புலனாகின்றது.

**இன்றைய பார்வையில் உயிர்ப்பு:**

அடுத்து எழுகின்ற கேள்வி யாதெனில் இத்தகைய திருச்சபை மரபிலும், வாழ்விலும் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக கட்டியெழுப்பப் பட்டு வந்துள்ள இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பு விசுவாசமானது இன்றைய காலகட்டத்தில் எவ்வாறு உள்ளதென்பதாகும்.

அனேகமான இடங்களில் அவதானிக்கப் படுகின்ற விடயம் யாதெனில் தவக்காலம் (விபூதிப்புதன்) தொடங்கிய காலம்முதல் உயிர்ப்பு ஞாயிறு வரையிலான காலப்பகுதியில் அனேக கிறிஸ்தவர்களின் வெளியரங்க வாழ்வில் பல்வேறுபட்ட மாறுதல்கள் உற்று நோக்கப்படுகின்றன. உதாரணமாக மாமிச உணவுத்தவிர்ப்பு, நாற்பது நாட்கள் உபவாசம் மேற்கொள்ளல், புகைத்தல் மற்றும் மதுபானம் அருந்துவதை தவிர்த்தல், நாளாந்த திருப்பலி, சிலுவைப்பாதை மேற்கொள்ளல், கல்வாரித் திருத்தலங்களுக்கு திருப்பயணம் மேற்கொள்ளல், இல்லங்களில் அமைதியையும், நல்லுறவையும் பேணுதல், பிறரோடு நல்லுறவினை வளர்த்துக்கொள்தல் இவைபோன்ற இன்னும்பல மெச்சத்தக்க செயல்கள் நடந்தேறுகின்றன.

ஆனால் இவையாவும் வெறும் நாற்பது நாட்கள் காட்சிகளே. ஒருவிதத்தில் இவை யாவும் இயேசுகிறிஸ்துவை சிலுவையிலறைய மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாக மாறிவிடுகின்றன. மறுபுறத்தில் அவரது உயிர்ப்பின் பிற்பாடு அதாவது உயிர்த்த ஞாயிறின் பிற்பாடு வாழ்வுநிலை தலைகீழாக மாறிவிடுகின்றது. 'பழைய குருடி கதவைத் திறடி' என்கின்ற நிலைக்குத் திரும்பி விடுகின்றது.

இங்கே இயேசு இறக்க இவர்கள் உயிர்க்கின்றார்கள். மறுபக்கத்தில் கிறிஸ்து உயிர் பெற்றெழ அவர்கள் இறந்து விடுகின்றார்கள். இவர்கள் மீண்டும் உயிர்பெற்றெழ இன்னுமொரு தவக்காலம் (நாற்பது நாட்கள்) தேவைப்படுகின்றது. இங்கு இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பு வாழ்க்கையாக மாறுவதைவிடுத்து வாடிக்கையாகிப் போய் விட்டது. அதன்விளைவு ஈஸ்டர் பெருவிழா ஒவ்வொரு ஆண்டும் வந்துபோகின்ற நாட்காட்டி (கலண்டர்) திகதியாகி விட்டது. அது



வாழ்வோடு சங்கமிக்கவுமில்லை. வாழ்வினைத் தொடவுமில்லை.

முன்னாள் திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் நம்பிக்கை ஆண்டினை ஏற்படுத்தியபோது அதற்கான நோக்கத்தினை பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.'நம்பிக்கைத் தளர்ச்சியினைப் போக்கவும் நம்பிக்கை வாழ்வினை அறிந்து, வாழ்ந்து, வழங்கவுமே யாகும்.' அந்தவகையில் கிறிஸ்தவ நம்பிக்கையின் மையம் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பேயாகும். கிறிஸ்தவத்திலிருந்து 'உயிர்ப்பு' என்று ஒரு பகுதியாக பிரித்தெடுத்துவிட்டு கிறிஸ்தவ நம்பிக்கையினை அடையாளம் காண முடியாது. கிறிஸ்தவத்திலிருந்து உயிர்ப்பினை அகற்றுவதுஅதன் முழு உருவத்தையே அழித்து விடுவதாகிவிடும். இயேசுகிறிஸ்துவின் மரணத்தின்மீதான வெற்றியின்றி, உயிர்ப்பின்றி அவரது போதனை, சாதனை, ஏன் புதிய ஏற்பாட்டிலிருந்தும் எதனையும் கண்டுபிடிக்க முடியாது. தொடக்கத் திருச்சபையில் உயிர்த்த ஆண்டவரைக்குறித்த மறையுரையைவிட வேறு எதுவுமே அங்கு இருக்கவில்லை.

அத்தகைய மகோன்னதமான உயிர்ப்பும் சாட்சியமும் இன்று கிறிஸ்தவ விசுவாசிகள் மத்தியில் தேவைப்படுகிறது. இயேசுகிறிஸ்து மாட்சியுடன் உயிர்த்தெழுந்தார். அவர் வல்லமையுடன் இன்று சமூகங்களில் வாழ்கின்றார். அவரது உயிர்ப்பின் பிரசன்னத்தால் திருச்சபையின் வாழ்வுக்கு வளம்சேர்க்க முனைதல் பொருத்தமானதாகும்.

ஒன்றித்த திருச்சபையாய் கிறிஸ்தவத்தின் உயிர்நாடியாகிய கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு சாட்சியம் பகருங்கள்.

அருட்தந்தை
யு. யு.நவரெட்ணம் (நவாஜி)...
(முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்)

## இயேசுவோடு நாமும் உயிர்த்தெழுவோம்

இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பின் விளைவாக நாமும் உயிர்த்தெழுந்தவர்களாக இருக்கின்றோம் என்று தூய பவுல் அடியார் பறைசாற்றுகிறார். உயிர்ப்பு விழாவை மையமாக வைத்து மண்ணுலக உயிர்ப்பு மற்றும் விண்ணுலக உயிர்ப்பு பற்றி சிறிது நாம் சிந்திப்போம்.

**மண்ணுல உயிர்ப்பு**

விண்ணுலக உயிர்ப்பு என்பது செத்துப் பிழைத்தல் என்று பொருள். அரசன் முதல் ஆண்டிவரை ஏழை முதல் பணக்காரன் வரை ஒவ்வொரு மனிதனுக்கும் இத்தகைய உயிர்ப்பை அனுபவிக்காமல் இந்த உலகிலிருந்து உயிர் துறக்க முடியாது. காரணம் மண்ணுலக உயிர்ப்பு என்பது வாழ்வின் ஓர் அங்கம்.

அடுத்த வேளை உண்ண உணவு இல்லை என்ற போது தன்னிடம் இருக்கும் விதைநெல்லை எடுத்து விதைத்து விட்டு அதன் விளைச்சலுக்காக பசியோடு காத்திருக்கும் விவசாயிகளின் அனுபவம் செத்துப் பிழைத்தவரின் அனுபவமே. .

தன் பிள்ளைக்காக பத்து மாதம் தவம் இருந்து பத்தியம் காத்து தன் உயிரையே பணயம் வைத்துப் பிள்ளையை இந்த உலகிற்கு அறிமுகம் செய்யும் தாய்மார்களின் பிரசவ வேதனை அவர்களுக்குச் செத்துப் பிழைத்த அனுபவமே.

.நாம் அனைவருமே பல நேரங்களில் பல இடங்களில்செத்துப்பிழைத்தல் அனுபவத்தை அனுபவித்திருப்போம். விவிலியத்தின் பல பக்கங்களில் பார்க்கிறோம். துன்பங்கள் துயரங்கள் எதிர்காலக் கனவுகள் வேதனைகள் சாவுகள் மத்தியில் இஸ்ரயேல் மக்கள் இத்தகைய செத்துப் பிழைத்தலை அனுபவித்துள்ளார்கள். கண்ணுக்குத் தெரியாத காணான் தேசத்தைக் காணப் போகின்றோம். என்ற எண்ணத்தோடும் ஆசையோடும்



சென்ற மக்களுக்குப் பார்வோன் மன்னனின் படைகளும் செங்கடலும் இடையூறாக இருந்த போது பல துன்பங்களை அந்த மக்கள் அனுபவித்திருப்பார்கள். மண்ணுலக உயிர்ப்பு என்றால் என்னவென்று இரத்தம் மனித உரியின் அடையாளம் என்று கூறுகிறது.லேவியர்ஆகமம் (17;14)

தன்னுடைய உடலில் இருந்து பன்னிரெண்டு ஆண்டுகளாக இரத்தத்தை இழந்து அதாவது, உயிரை அணுஅணுவாக இழந்துவந்த அந்தப் பெண்ணுக்குத் தெரிந்திருக்கும் மண்ணுலக உயிர்ப்பு என்றால் என்னவென்று. தன்பிள்ளையை இழந்து விட்டு அழுகையோடும் அங்கலாய்ப்பொடும் இருந்த குடும்பத்தினரைப் பார்த்து ஏன் இந்த அமளி ஏன் இந்த அழுகை என்று கேட்டதோடு அல்லாமல் அந்த சிறுமியை "தலித்தாகூம்" என்று சொல்லி உயிர்ப்பித்தார் இயேசு. அன்று அந்த வீட்டாருக்குத் தெரிந்திருக்கும் மண்ணுலக உயிர்ப்பின் அனுபவம். ஆனால் இத்தகைய உயிர்ப்பைவிட மேலான உயிர்ப்பு நம் ஆண்டவர் இயேசுவின் வி்ணணுலக உயிர்ப்பு.

**விண்ணுலக உயிர்ப்பு**

விண்ணுலக உயிர்ப்பு என்பது மண்ணுலக உயிர்ப்பைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. எனவேதான் இத்தகைய விழாவை நாம் எல்லாவற்றிற்கும் முதன்மையான விழாவாகக் கொண்டாடுகிறோம். காரணம் முகம் தெரியாத கிராமத்தில் பாமரப் பெண்ணுக்கு (மரியாள்) மகனாகப் பிறந்து முப்பது ஆண்டுகள் தன் தந்தையோடு தச்சுவேலை செய்து மூன்று ஆண்டுகள் பணியாற்றி பணித்தளத்தில் பல சவால்களை சந்தித்து எருசலேம் ஆயத்தைப் பார்த்து இதை இடித்து தரை மட்டமாக்குங்கள். அதை நான் மூன்றே நாளில் கட்டயெழுப்புவேன் என்று தன் உடலையும் உயிர்ப்பையும் பற்றி சொன்னதோடு நில்லாமல் சாவே உன்வெற்றி எங்கே சாவே உன்கொடுக்கு எங்கே? என்றவராய் உயிர்த்தெழுந்தார் ஆண்டவர் இயேசு.

மூன்று ஆணிகளால் இயேசுவின் கதையை முடித்துவிட்டோம் என்று ஆர்ப்பரித்தது கொள்ளையர் கூட்டம். ஆனால் இறப்பை இறுதிக் கட்டமாக கொள்ளாமல் உயிர்த் தெழுந்தார் இயேசு. எனவேதான் உயிர்ப்பு விழவை எல்லாவற்றிற்கும் முதன்மையான விழாவாக கொண்டாடுகிறோம்.

உயிர்ப்பு ஒரு அனுபவம் இந்த அனுப

அம்புறோஸ் பீற்றர்...

வத்தை சீடர்களும் புனித பவுலடியாரும் எம்மாவுஸ் மற்றும் தமஸ்கு நகருக்கு செல்லும் வழியில் அனுபவித்திருக்கிறார்கள்.

அதன் பயனாகத்தான் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எங்களால் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது என்று புனித பேதுரு கூறுகிறார். இத்தகைய உயிர்ப்பின் சாட்சிகளாக செயற்பட திருச்சபை நம்மை அழைக்கின்றது.

கடவுளின் உயிர்ப்பு எம் கண்முன்னே படம்பிடித்துக்காட்டப்படவில்லை என்றாலும் நம்முடைய விவிலியமும் பாரம்பரியமும் இறைவனின் உயிர்ப்பை ஆணித்தரமாக சொல்லுகின்றன. இந்த உயிர்ப்பின் அனுபவத்தை நாம் மற்றவர்களுக்குப் பறைசாற்றவில்லை என்றால் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையும் சீடர்கள் பறைசாற்றிய நற்செய்தியும் பொருளற்றதாக மாறிவிடும். (1 கொரி. 15:14)

இயேசுவின் உயிர்ப்பை நாம் மற்றவர்களுக்குப் பறைசாற்றவும் வாழுகின்ற வாழ்க்கையைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும். நம்முடைய அன்றாட வாழ்க்கையின் வழியாகவும் செயற்பாடுகள் மூலமாகவும் வார்த்தைகளின் வாயிலாகவும் அறிவிக்க வேண்டும். எனவே நாம் அன்பு,சமாதானம், ஒற்றுமை, நேர்மை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்போம். இடம் பெயர்ந்து வரும் அகதிகளுக்கு தஞ்சம் அளிப்போம். மனிதாபிமானத்தை நமது ஆடையாக அணிந்துகொள்வோம். பணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்த்து இரக்கத்திற்கு இடம்கொடுப்போம்.

அன்னை தெரசாவை நம் வாழ்வின் அடிப்படையாகவும் முன்மாதிரியாகவும் கொண்டு ஏழைகள், சிறுவர்கள், சாலையோரப் பணியாளர்கள் போன்றவர்களை நம் குடும்ப வட்டத்தில் சேர்த்துக் கொள்வோம். அப்போதுதான் நாம் இயேசுவின் உயிர்ப்பின் பங்காளர்களாக பறைசாற்ற முடியும். சாவுக்குப்பின் மறு வாழ்வு உண்டு என்பதை நம்புவோம்.

இயேசுவின் உயிர்ப்பை எம்வாழ்வின் மூலம் பறைசாற்றுவோம்.

# தமிழ் அரசியல் கட்சிகளுக்கு போர்த்தேங்காயாக மாறிப்போன 13 ஆவது திருத்தம்!!

**வேண்டா வெறுப்புக்கு பிள்ளையை பெற்று காண்டா மிருகம் என பெயர் வைத்த கதையாகியுள்ளது இலங்கையின் 13வது அரசியலமைப்பு திருத்தம்.**

இலங்கையில் தமிழர்கள் உரிமை கோரி போராட்டம் ஆரம்பித்து யுத்தம் உக்கிர நிலையை அடைந்திருந்த நிலையில் 1987ஆம் ஆண்டு இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்திய மாநில அரசுகளுக்கு ஒப்பான சட்டமாகா தமிழ் மக்களுக்கான தீர்வாக, அப்போதைய இந்தியப் பிரதமர் இராஜீவ்காந்தி மற்றும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரால் தமிழ் மக்களின் சம்மதம் இல்லாமல் உருவாக்கப்பட்டது 13 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம்.

இலங்கையில் 13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும், அன்று விடுதலைப்புலிகளால் அம்முறைமை நிராகரிக்கப்பட்டு அதன் விளைவாக இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் போர் மூண்டதன் காரணமாக தமிழ் மக்கள் பாரிய உயிர், உடைமை அழிவுகளை சந்தித்தனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட 13வது திருத்தம் தொடர்பான எந்தவிதமான விளக்கங்களும் தமிழ் மக்களுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இந்தியா மற்றும் அமெரிக்க வல்லாதிக்க சக்திகளுக்கு இடையில் ஏற்பட்ட பனிப்போர் தமிழ் மக்களை பகடைக்காயாக்கியதுடன், கடந்த 30 வருடங்களாக இலங்கை தேசம் போர்க்களமாக மாற்றப்பட்டு, இலங்கை மைந்தர்கள் மோதிக்கொண்டு மடிந்துபோனார்கள்.

இலங்கை அரசுக்கு எதிராக தமிழ் இளைஞர்களுக்கு பயிற்சிகளையும், ஆயுதங்களையும் வழங்கிய இந்திய அரசு இலங்கையில் தனது நலனுக்காக பெரும் போர்களத்தை உருவாக்கி இளைஞர்களை பலியிட்டது.

வல்லாதிக்க சக்திகளின் சர்வதேச அரசியலை, இலங்கை மக்களுக்கு அறிவுறுத்த முடியாத தேசிய அரசியல் தலைமைகள் தங்கள் இருப்பைத் தக்க வைப்பதற்கான சுயநல அரசியலுக்காக. இனவாதம் எனும் எண்ணையை ஊற்றி இலங்கை தேசத்தை எரிய விட்டனர்.

விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் அரசியல் தோல்வியாக மாறி 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் முடிவிற்கு கொண்டுவரப்படவிருந்த தருணத்தில், அமெரிக்க கப்பல் தமிழ் மக்களை காப்பாற்ற வரும் என்ற விடுதலைப்புலிகளின் அறிவிப்பு தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறாக சர்வதேச வல்லாதிக்க சக்திகளின் போராட்டகளமாக மாற்றப்பட்ட இலங்கை தேசம் அவர்களின் நலனுக்காக சின்னாபின்னப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே இன்றும் இலங்கையில் உருவாக்கப்படும் அரசியல் போராட்டங்களை பார்க்க முடியும்.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் தேசிய தலைமைகள் ஒன்றிணைந்து 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு கோரி இந்தியாவிற்கு கடிதம் ஒன்றினை அனுப்பியிருந்தனர். உண்மையில், இந்திய இலங்கை ஒப்பந்தமானது இலங்கையில் பயன்பாட்டிலுள்ளது. அண்மைக்காலமாக இலங்கை அரசாங்கம் 13ஐ இல்லாது ஒழிக்க நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் கடந்த வருடம் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் அமெரிக்க சார்பு நாடுகளால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், 13 வது திருத்தச்சட்டத்திற்கு அமைவாக மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கையானது இலங்கை அரசாங்கத்துக்கு தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியிருந்தது.

ஆகவே தமிழ் தேசிய கட்சிகள் 13 வது திருத்தச் சட்டத்தை தங்கள் அரசியலுக்காக கையிலெடுத்து உருட்டிவிளையாடி வருகின்றனர். தேர்தல் அரசியலுக்காக தமிழர்கள் 13 ஐ தீர்வாக கோருகிறார்கள் என்கின்ற மாயை கட்டியெழுப்பப்படுகின்றது. தமிழ் தேசிய பரப்பில் தமிழ் அரசியல் தலைமைகள் ஒருங்கிணைய வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. 13 வது திருத்தச்சட்டத்தை கையிலெடுத்து அதை ஒரு தீர்வாக இந்தியாவிடம் முன்வைப்பதாக காட்டி தங்கள் மாயஜால வித்தையை ஆரம்பித்துள்ளது கூட்டமைப்பு. இருந்தபோதும் இந்த ஒருங்கிணைவு அரசாங்கத்திற்கு ஒரு தலைவலியாக மாறியுள்ளது.



இதனைத்தொடர்ந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியானது இந்தியாவின் 13 வது திருத்தம் தீர்வில்லை அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என தெரிவித்து பிரச்சாரங்களை மேற்கொண்டதுடன், ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தை கூட்டி எதிர்ப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இலங்கை நாட்டின் ஜனாதிபதி ஒரே நாடு ஒரே சட்டம் தமிழருக்கு 13 வது திருத்தமோ, தீர்வோ தேவையில்லை அவர்களுக்கு அபிவிருத்தி மாத்திரமே தேவையாக இருக்கின்றது என தெரிவித்துள்ளார். இந்நிலையில் சிங்கள பேரினவாதிகளும் 13ஐ எதிர்த்து வருகின்றார்கள். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் எதிர்க்கின்றது. 13 வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையின் கீழ் தேர்தல் வந்தால் போட்டியிடுவோம் ஆனால் 13 ஐ எதிர்ப்போம் என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தெரிவித்து வருகின்றது. இது எப்படி இருக்கிறது என்றால் 'நானும் ரவுடிதான் ஜெயிலுக்கு போறன்' என்ற காமெடிதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

தமிழ் தேசிய பரப்பில் தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளை கபளீகரம் செய்வதற்கும், தங்கள் சுயநல அரசியலை முன்னெடுப்பதற்கும் பாதைகள் தேவைப்பட்டது. சாக்கடையானது ஒரே கால்வாயில் பயணித்தால் என்ன இரண்டாக பிரிந்து பயணித்தால் என்ன சாக்கடை சாக்கடைதானே. அகில இலங்கை தமிழ் காங்கிரசானது, கூட்டமைப்பைபின் செயற்பாடுகளை பிழையாக காட்டி தனது அரசியலை முன்னெடுத்து வருகின்றது.

தமிழர் தேசிய அரசியல் பரப்பில் ஒன்றிணைந்தால் வாக்கு வங்கியில் பிரச்சினை ஏற்படும் எனவே யார் தமிழர்களை காப்பாற்றுவது என்ற போட்டியில் பொது எதிரியை மறந்து தங்கள் அரசியல் செயற்பாட்டை முன்னெடுத்து தமிழ் மக்களை குழப்பி வருகின்றார்கள்.

உண்மையில் இலங்கை அரசாங்கமானது இரண்டில் மூன்று பெரும்பான்மையை கொண்டுள்ளது. அதனால் அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும், இதன்காரணமாக தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குள்ளாகும். கடந்த தேர்தலில் இனவாதத்தை முன்வைத்து ஆட்சியை பிடித்த அரசாங்கம், தொடர்ந்து சிங்கள மக்களை தன்பக்கம் வைத்திருக்க அரசியல் யாப்பில் மாற்றத்தை உண்டுபண்ண வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அரசியல் யாப்பை மாற்றவேண்டுமானால் அதற்கு முட்டுக்கட்டையாக உள்ள 13 வது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும். 13 வது திருத்தச்சட்டம் வேண்டுமா? வேண்டாமா? என்பதற்கு அப்பால் தமிழ் தலைமைகள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும் தமிழ் மக்கள் இந்த நாட்டின் மரபு வழி வந்த ஒரு தேசிய இனம் ஆகவே தமிழ் மக்களின் இருப்புக்கு ஆபத்து ஏற்படாமல் தமது அரசியல் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். வல்லாதிக்க சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் நின்றுகொண்டு 'ஆர்றா ராமா ஆர்றா' என குரங்காட்டம் போடக்கூடாது.

இந்தியா தனது குழந்தையான 13 வது திருத்தச்சட்டம் ஒரு போதும் இலங்கையிலிருந்து நீர்த்து போவதற்கு அனுமதிக்காது. ஏனென்றால் இந்தியா இந்துசமுத்திர பிராந்தியத்தில் தவிர்க்க முடியாத ஒரு சக்தி என்பதனை முதலில் உணர வேண்டும். மற்றது இந்தியாவின் இருப்புக்கு ஆபத்து வரும் என்றால் உலக வல்லரசு நாடுகள் பார்த்துக்கொண்டிருக்காது காரணம் பொருட்களை இறக்குமதி செய்யவும் ஏற்றுமதி செய்யவும் மிகப்பெரும் சந்தையாக திகழ்கிறது இந்தியா. அடுத்து இந்தியாவை தாண்டி தென்னாசியாவில் அரசியல் நகராது எனவே 13 வது திருத்தத்தை இந்தியாவின் அனுமதி இல்லாமல் செயலிழக்க செய்ய முடியாது. இலங்கை அரசானது ஒரு நெருக்கடியை நோக்கி நகர்ந்துவரும் நிலையில் தொடர்ச்சியாக இந்திய அரசானது நிதி உதவிகளை செய்து வருகின்றது. தமிழர்களின் அரசியலில் சலசலப்பை உண்டு பண்ணுவதற்கும், அவர்களை பிரித்து கையாள்வதற்கும், சிங்கள எதிர்க்கட்சிகள் மற்றும் இனவாதிகளை திருப்திபடுத்த கையிலெடுக்கப்பட்டுள்ள ஆயுதம்தான் 13வது திருத்தம் ஆக இந்த நிகழ்ச்சி நிரல் யாருடையது என்பது வாசகர்களின் சிந்தனைக்கு.

இந்தியா போன்ற வல்லாதிக்க சக்திகளினால் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் பின்னால் பயணிக்கும் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக அரசியல் பின்னடைவுகளையே பெற்றுத்தருவார்கள். இந்தியா ஒருபோதும் ஈழத்தமிழர்களை அரவணைத்து பயணிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படவில்லை, இலங்கை அரசாங்கத்துடன் புதிய ஒப்பந்தங்களை எதிர்காலத்தில் கைச்சாத்திடுவதற்கான வாய்ப்புக்களும், சர்வதேச நாடுகளால் ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளையும், நீதியையும் இந்தியா தடுக்கக் கூடிய வாய்ப்புக்களே அதிகமாக காணப்படுவதால் இலங்கை அரசானது இந்தியா குறித்தோ அல்லது தமிழ் தேசிய தலைமைகளின் கூக்குரல் குறித்தோ அலட்டிக்கொள்ளாது.

இலங்கையில் குறிப்பாக தமிழ் தேசிய பரப்பில் பயணிக்கும் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து ஒன்றாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை சர்வதேசத்தின் முன் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு அடிப்படையாக நடைபெறும் தேர்தல்களில் தமிழ் தலைமைகள் தமிழ் மக்களின் நலனுக்கு முன்னுரிமை வழங்கி ஒற்றுமையாக தேர்தலில் வெற்றிபெற்று சர்வதேச சக்திகளுக்கு தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் அவர்களுக்கான உரிமைகள் வழங்கியே ஆக வேண்டும் என்ற கோசத்தை முன்வைக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் இலங்கை இந்திய மீனவர்கள் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாத இந்தியா ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வை வழங்கி விடும் என நினைத்தால் அது அரசியல் அறியாமை அல்ல தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு அரசியல் மோசடியாகவே இருக்கும்.

**எம்.ஜி.ரெட்ன காந்தன்...**

# இளம் வயதில் இதயநோய் மரணம் அதிகரிப்பது ஏன்?



**இளவயதினர் மத்தியில் இதயநோய் பாதிப்புகள் அதிகரித்து வருவதற்கு பல்வேறு காரணிகளை மருத்துவ உலகினர் முன்வைக்கின்றனர். கொரோனா நோய்த் தொற்றின் முதல் மற்றும் இரண்டாம் அலைகளைத் தடுப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தியதால் இதர நோய்களை கண்காணிக்கும் பணிகள் குறைந்துவிட்டன. இதயநோய் மரணங்கள் ஏற்படுவதற்கு இது ஒரு காரணம்' என்கின்றனர் சுகாதாரத்துறை வல்லுநர்கள். கொரோனா தொற்றுப் பரவல் என்பது படிப்படியாக குறைந்து வருகிறது.**

அதேநேரம், கொரோனா காரணமாக பெருகி வரும் இணை நோய்களால் பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். குறிப்பாக, இளவயதினர் மத்தியில் இதயநோய் மரணங்கள் அதிகரித்து வருவது என்பது கூடுதல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. உடற்பயிற்சியினை மேற்கொள்ளும்போதும் நண்பர்களுடன் உரையாடும்போதும் திடீரென இளவயதினருக்கு ஏற்படும் மாரடைப்புகளுக்கு பல்வேறு காரணங்களை மருத்துவத்துறையினர் முன்வைக்கின்றனர்.

தொற்றா நோய்கள் (NCD) மூலம் வரக்கூடிய இறப்பு விகிதம் என்பது 63 சதவீதமாக உள்ளது. குறிப்பாக 30 முதல் 70 வயது வரையில் உள்ளவர்களில் 23 சதவிதம் பேருக்கு இதன்மூலம் இறப்பு நேருவதற்கு வாய்ப்பு உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்க்கரை குறைபாட்டைப் பொறுத்தவரையில் நான்கில் ஒருவருக்கும் (25 சதவீதம்) ரத்தக் கொதிப்பு என்பது மூன்றில் ஒருவருக்கும் (33 சதவீதம்) உள்ளது எனவும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

அதிலும், தொற்றா நோய்களால் ஏற்படும் பாதிப்பு என்பது பெண்களைவிட ஆண்களுக்குத்தான் அதிகம் எனவும் கூறப்பட்டுள்ளது. உடல்ரீதியாக இயங்காமல் இருப்பது, உணவு முறை மாற்றம் (அதிக துரித உணவு பயன்பாடு, அதிக உப்பை சேர்ப்பது, காய்கறிகள், பழங்களை சாப்பிடுவது குறைந்தது) மது மற்றும் புகை, மனஅழுத்தம் ஆகியவற்றை பிரதான காரணங்களாக இந்த ஆய்வு முன்வைக்கிறது. நாம் உண்ணும் உணவில் 3 முதல் 5 கிராம் உப்பை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், துரித உணவுகளில் 10 முதல் 15 கிராம் அளவுக்கு உப்பு உள்ளது. உணவில் உப்பு அதிகமாக இருந்தால் சுவை இருக்கும். ஆனால் அவை உடலுக்கு மிகவும் கேடு விளைவிப்பவை. மேலும், சுற்றுச்சூழல் சீர்கேடும் சர்க்கரை, இதயநோய் பாதிப்புகள் அதிகமாவதற்குக் காரணம்.

தமிழ்நாட்டில் 50 சதவீதம் பேருக்கு சர்க்கரை குறைபாடும் ரத்த அழுத்தமும் இருப்பதே தெரிவதில்லை. அப்படியே தெரிந்தாலும் நோய்க்கான மருந்து எடுத்தும் அவை கட்டுப்பாட்டில் இல்லை. சர்க்கரை குறைபாட்டுக்காக அரசு வழங்கும் மருந்துகளிலும் தரம் இருப்பதில்லை. ஆனால், தனியாரிடம் வாங்கும் மருந்துகளில் சர்க்கரை நோயோடு ரத்தக்கொதிப்பும் கட்டுக்குள் வருகிறது கடந்த இரண்டு வருடங்களாக தொற்றா நோய்களான (NCD) நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், அஸ்துமா, புற்றுநோய், இதய நோய் ஆகியவை அதிகரித்து வருகின்றன. கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா நோய்த் தொற்றைத் தடுப்பதில் கவனம் செலுத்தியதால் இதனை கண்காணிக்கும் பணிகள் என்பது குறைந்துவிட்டன. இது மிக முக்கியமான காரணம்.

அடுத்ததாக, கொரோனா காலத்தில் அதற்குண்டான உரிய சிகிச்சைகளை எடுத்துக் கொள்வது போன்றவை குறைந்துவிட்டன. இதனால் சர்க்கரை குறைபாடும் ரத்தக் கொதிப்பும் அதிகமாகிவிட்டது'' என்கிறார்.

``கொரோனாவால் ஏற்பட்ட மனஅழுத்தம் என்பது முக்கியமானது. கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களும், `இரண்டு, மூன்று மாதங்களுக்குப் படியேறக் கூடாது' எனப் பல அறிவுறுத்தல்களை வழங்கினோம். இதனைக் கடைபிடிக்காமல் இருந்ததும் இதயநோய் பாதிப்புக்கு முக்கிய காரணம். மனஅழுத்தம் அதிகரித்ததால் சர்க்கரை குறைபாடும் வந்துவிட்டது.

கொரோனா காலத்தில் வீட்டில் இருந்தபடியே வேலை பார்த்தனர். இதனால் உடல் உழைப்பு இல்லாமல் இருந்ததை ஒரு காரணமாக எடுத்துக் கொண்டாலும் எதாவது ஒரு வேலையை செய்து கொண்டுதான் இருந்தார்கள். மக்களிடம் ஏற்பட்ட நிதிச் சுமையும் மன அழுத்தத்துக்கு ஒரு காரணம். மதுவின் பயன்பாடும் அதிகரித்துவிட்டது. மது அருந்திய நபரால் அவரது குடும்பம், நண்பர்கள் எனப் பல தரப்பினரும் பாதிக்கப்பட்டனர்.

வண்ண வானவில்
ஏப்ரல் மாத இதழ் இப்போது கடைகளில்...



ஆனந்த விகடன், குமுதம் இல்லை எனக் கவலை வேண்டாம் இருக்கவே இருக்கிறது வண்ண வானவில்!
வாசியுங்கள், வாசிக்க வாங்கிக் கொடுங்கள்

# நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பொறுமை, அமைதி அவசியம்

**நாட்டில் அந்நிய செலாவணி இழப்பு உள்ளிட்ட பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முழுமையான முயற்சிகளை எடுத்து வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்குத் தெரிவித்திருந்தார். மக்களின் பிரச்சினைகள் குறித்து உரிய புரிதல் அரசாங்கத்துக்கு இருப்பதாகவும், இந்த மோசமான நிலையிலிருந்து மீள்வதற்கு அனைவரும் இணைந்து செயற்படுவது அவசியம் என்றும் பிரதமர் கூறியிருந்தார்.**

'வீதியில் இறங்கி நடத்தப்படும் போராட்டத்தின் ஒவ்வொரு நிமிடத்திலும் டொலர்கள் இழக்கப்படுகின்றன. எனவே மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு முன்னர் நாட்டை அழிவிலிருந்து மீட்க வேண்டும்' என்றும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

எதிர்க்கட்சியினருக்கு ஆட்சியமைக்க வருமாறு விடுத்த அழைப்பை, அவர்கள் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால், மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் என்ற ரீதியில் ஆட்சியமைத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றும் பிரதமர் தெரிவித்திருந்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருப்பதை நாம் மறுக்க முடியாது. இதில் முக்கிய விடயமாக மத்திய வங்கிக்கு புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். மத்திய வங்கியின் பிரதி ஆளுநராகவிருந்த கலாநிதி நந்தலால் வீரசிங்ஹவை ஜனாதிபதி மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்துள்ளார்.

நீண்ட கால அனுபவத்தைக் கொண்ட இவர், சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றியவர் என்பதால் நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்வார் என்ற நம்பிக்கை பெரும்பாலானவர்கள் மத்தியில் காணப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் 17 ஆவது ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ, மத்திய வங்கி அரசியல் தலையீடு இன்றி சுயாதீன நிறுவனமாக இயங்கும் என்ற உறுதிமொழியை வழங்கினார். தான் அரசியல்வாதிகளுக்குப் பணியாற்ற வரவில்லையென்றும், நாட்டு மக்களுக்கே பணியாற்ற வந்திருப்பதால் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க வங்கி அரசியல் தலையீடு இன்றி சுதந்திரமாக செயற்பட இடமளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"நாட்டின் உண்மையான பொருளாதார நிலைமையை மக்களுக்கு எடுத்துக் கூறி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கட்டுப்பாடு இல்லாத வாகனம் பள்ளத்துக்குள் வேகமாகச் செல்வதைப் போல உள்ளதை, உடனடியாக கட்டுக்குள் கொண்டுவர முடியாது. மக்கள் மேலும் சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதன் பின்னரே மீட்சியை எதிர்பார்க்க முடியும்" என்றும் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ தெளிவாகக் கூறியிருந்தார்.

## போராட்டத்தின் ஒவ்வொரு நிமிடத்திலும் பெருமளவு டொலர்கள் இழப்பு!



Nandalal Weerasinghe

## மத்திய வங்கியின் புதிய ஆளுநர் வகுத்துள்ள உடனடித் திட்டங்கள்!

கடந்த காலங்களில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்புக்களைப் போல இலங்கையும் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்திருந்தது. எனினும், இதிலிருந்து மீளக்கூடியதாக இருந்த நிலையில் மீண்டும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. தற்போதைய சிக்கலில் இருந்தும் மீளமுடியும் என்ற நம்பிக்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், மத்திய வங்கியின் நாணய சபைக்குப் புதிய உறுப்பினர்களையும் அவர் நியமித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறுவது குறித்த கலந்துரையாடல்களை நடத்துவதற்கு நிதியமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ, புதிய திறைசேரி செயலாளர் உள்ளிட்ட குழுவினர் அமெரிக்கா செல்லவுள்ளனர். நாளை 18ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் கலந்துரையாடல்கள் ஐந்து நாட்கள் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தொடர்பில் பல தரப்பினரும் வலியுறுத்தி வந்த நிலையில் அரசாங்கத்துக்கும், நாணய நிதியத்துக்கும் இடையில் நடைபெற்ற பூர்வாங்க கலந்துரையாடல்களின் வரைபு கடந்த வாரம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறித்த வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தார். இதற்கு இணங்கிய அரசாங்கம், குறித்த வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது மாத்திரமன்றி, இது குறித்து சபை ஒத்திவைப்பு விவாதமொன்றையும் நடத்தியிருந்தது.



நாடு தற்பொழுது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறக் கூடிய உதவி ஓரளவுக்கு நன்மை அளிக்கும் என்பதே பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது. நாட்டின் ஒட்டுமொத்தப் பிரச்சினைக்கும் இது முழுமையான தீர்வாக அமையாவிட்டாலும் உடனடிப் பிரச்சினைகளை சமாளிக்க முடியும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும். அதேநேரத்தில், குறித்த கடன் உதவியை வழங்க நாணய நிதியம் ஏற்றுக் கொண்டால் அவர்களால் விதிக்கப்படும் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்த வேண்டியது கட்டாயமாகவிருக்கும். நாடு முழுமையான அழிவை நோக்கிச் செல்வதை விட நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பின்பற்றி நாட்டை மீட்சிப் பாதைக்குக் கொண்டு வருவதே தற்போதைய தேவையாகும்.

## சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதை தவறெனச் சொல்வதால் மட்டும் பயனில்லை. ஆலோசனைகளே இன்றைய வேளையில் பிரதானம்

இவ்வாறான பின்னணியில், முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை அரசு செல்லும் முயற்சி குறித்து விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

# சீனாவின் 'கடன் பொறி இராஜதந்திரம்' இந்தியாவிடம் பலிக்கப் போவதில்லை!

**இரு வருட கால கொரோனா பாதிப்பு காரணமாக சுற்றுலாத்துறை உட்பட இலங்கைக்கான தேசிய வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிகரித்து வருகின்ற பணவீக்கம், தொடர்ந்து குறைந்து வரும் வெளிநாட்டு இருப்புகள், டொலர் பற்றாக்குறை என பல காரணிகளுக்கு மத்தியில் இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.**

கடும் பொருளாதார நெருக்கடி, அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியில் இலங்கை மாத்திரமன்றி பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகள் பொருளாதாரத்தில் சரிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இந்த நாடுகளில் விலைவாசி அதிகரிப்பு, பணவீக்கம், பொருளாதார நெருக்கடி, வெளிநாட்டு இருப்புகள் சரிவு என்பது பொதுவான விஷயங்களாக இருந்தாலும், அதனையும் தாண்டி ஒரு பொதுவான விஷயத்தைக் கவனிக்க வேண்டியுள்ளது. அதுதான் சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டம்.

இந்த மூன்று நாடுகளின் பொருளாதார சரிவுக்கு முக்கிய காரணம் சீனா என்றும் சர்வதேச பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அதாவது சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டம்தான் மறைமுகமாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென அவர்கள் கூறுகின்றனர்.

'சீனாவின் கடன் பொறி இராஜதந்திரம்' என்று இத்திட்டத்தை பொருளாதார வல்லநர்கள் குறிப்பிடுகின்றனர். உலக நாடுகளை கடன் வலையில் சிக்க வைத்து சீனா தனது பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்ளும் தந்திரத்தைக் கையாள்கின்றது என்று அவர்கள் கூறுகின்றனர். சீனாவின் இந்த திட்டத்தின் கீழ் பல நாடுகள் பொருளாதார சரிவை எதிர்நோக்கும் அபாயம் உள்ளதாக அவர்கள் எச்சரிக்கின்றனர்.

சீனாவின் ஜனாதிபதி ஜி ஜின்பிங் 2013 ஆம் ஆண்டில் 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தை செயல்படுத்துவதாக அறிவித்தார். இந்தத் திட்டத்தின் நோக்கம் மேற்கு நாடுகளுக்கும், ஆசிய நாடுகளுக்கும் இருக்கும் வர்த்தக பற்றாக்குறையை மேம்படுத்துவதே என்றும் கூறப்பட்டது.

'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தின் மூலம், உலக நாடுகள் பலவற்றையும் தங்கள் நாட்டுடன் சீனா இணைக்கும். இதன் மூலம் வீதிப் போக்குவரத்தினை அண்டை நாடுகளுடன் மேம்படுத்தும். கப்பல் போக்குவரத்தினையும் மேம்படுத்தி சீனாவின் துறைமுகங்களை உலக நாடுகளுடன் இணைக்கும். பொதுவாக சொல்ல வேண்டுமெனில் சீனாவின் துறைமுகங்கள், விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், வீதி மார்க்கம் என அனைத்துத் தரப்பினையும் அண்டை நாடுகளுடன் சீனா இணைத்துக் கொள்ளும்.

இதன் மூலம் உலக நாடுகள் எளிதில் தங்களது சரக்குப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியும். இதன் மூலம் சீனா பல நாடுகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும் என நம்புவதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



ஆனால் சீனாவின் அறிக்கை வேறுவிதமாக இருக்கின்றது. இந்தத் திட்டத்தில் தனக்கு எந்தத் தனிப்பட்ட நோக்கமும் கிடையாது என சீனா கூறி வருகின்றது. உலகளாவிய நாடுகள் மேம்படும் போது, அதில் சீனாவும் மேம்படும் என்றும் அந்நாடு கூறி வருகின்றது. ஆனால் இதன் பின்னணியில் சீனாவின் இராஜதந்திரம் இருக்குமோ என்ற அச்சம் தொடர்ந்து மற்ற நாடுகளுக்கு இருந்து வருகின்றது.

இந்தத் திட்டத்தினை செயல்படுத்த அண்டை நாடுகளுக்கு கடன் கொடுப்பதாகவும் சீனா தெரிவித்தது. ஆனால் இதற்காக அண்டை நாடுகள் தங்கப் பத்திர உத்தரவாதத்தில் கையெழுத்திட வேண்டும். உதாரணத்திற்கு பாகிஸ்தானுக்கு 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்திற்கு பெரும் தொகைக் கடனாக வழங்கப்பட்டது.

இதேபோல இந்தத் திட்டத்தில் ஆப்கானிஸ்தான், கஜகஸ்தான் வழியாக மேற்கு நோக்கியும், மலேசியா, ஹொங்கொங், வட கொரியா என கிழக்கு நோக்கியும், இலங்கை வழியாக தெற்கிலும் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.



## சீனாவிடம் கடன் பெறுவதைத் தவிர்த்துள்ள நேபாளத்துக்கு வந்துள்ள புதிய நெருக்கடிகள்!

'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்திற்கு கடன் மட்டும் அல்ல, தேவையான தொழில்நுட்பங்கள், மனித வளங்கள் என அனைத்தும் தருவதாக சீனா ஒப்புக் கொண்டுள்ளது. எனினும் இது குறித்தான ஒப்பந்தங்கள் எதுவும் வெளிப்படையாக இல்லை என்பதே அண்டை நாடுகளுக்கு அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதில் வட்டி வீதமும் அதிகம் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தில்தான் 70 நாடுகள் முதலீடு செய்ய ஒப்புக் கொண்டுள்ளன. ஒருபுறம் இதன் மூலம் உலகளாவிய வணிகத்தை மேம்படுத்த முடியும் என்றாலும், அமெரிக்காவும், இந்தியாவும் இதற்கு ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இதனை அமெரிக்கா 'கடன் பொறி இராஜதந்திரம்' என்று வர்ணித்து வருகிறது. ஏனெனில் இது வளர்ந்து வரும் நாடுகளுக்கு அதிக கடனை கொடுத்து, கடனை கட்ட முடியாமல் தவிக்கும் போது அந்த நாட்டின் வளங்களை பெற்றுக் கொள்ளும் செயல் என்றும் கூறப்படுகிறது.

மொத்தத்தில் வறிய நாடுகளை கடன் வலையில் விழ வைத்து அதன் மூலம் அவர்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் எனவும் கருதப்படுகிறது.

இது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் 2020 ஆம் ஆண்டு, ஒரு கூட்டத்தில் சீனாவின் இராஜதந்திரம் பற்றி பேசியிருந்தார். "வளர்ச்சி கூட்டாண்மை என்ற பெயரில் நாடுகள் சார்பு கூட்டாண்மைக்கு தள்ளப்பட்டுள்ளதை வரலாறு நமக்கு கற்பித்துள்ளது" என அவர் கூறியிருந்தார்.

இதேவேளை இலங்கை தனது கடனை திரும்பச் செலுத்துவதில் எந்த சலுகையையும் சீனா வழங்க மறுத்து விட்டது. சீனாவுக்கான மொத்த கடன் வீதம் 8 பில்லியன் டொலராகும். இது இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் ஆறில் ஒரு பங்காகும் என்ற தகவலும் உள்ளது. சீனா கடனை மறுசீரமைப்பு செய்யவில்லை.

பாகிஸ்தானிலும் இதே நிலைதான் உள்ளது. பாகிஸ்தானில் ' பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்திற்காக 27.3 பில்லியன் டொலர்கள் கடனுதவியை சீனா வழங்கியுள்ளது. ஏற்கனவே கடன் நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் பாகிஸ்தானில், கொரோனா இன்னும் நிலைமையை மோசமாக்கியிருந்தது. தற்போது அங்கு அரசியல் பிரச்சினை நிலவுகின்றது.

மொத்தத்தில் இது போன்ற பல நாடுகளில் தனது திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது சீனா. இவற்றில் லாவோஸ், ஜாம்பியா, கிர்கிஸ்தான் உள்ளிட்டவையும் அடங்கும். இவற்றில் 13,000 இற்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு, சுமார் 843 பில்லியன் டொலர் கடன் திட்டங்களை ஆய்வு செய்துள்ளதாகவும், இதனை 165 நாடுகளில் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும் இவற்றில் கவனிக்கதக்க ஒரு விஷயம் என்னவெனில் நேபாளத்தில் ஒரு திட்டம் கூட செயல்படுத்தப்படவில்லை. நேபாளம் இதுவரையில் கடன் பிரச்சினையில் பெரிதாகச் சிக்கவில்லை. மானிய உதவிகளின் மூலம் திட்டங்களை தேடுவதாக நேபாளம் தெரிவித்துள்ளது. அத்தோடு கடன் வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளது. மேலும் அப்படியே கடன் வாங்கினாலும் அதற்கு 2% மேலாக வட்டி இருக்கக் கூடாது என்றும் நேபாளம் கூறியுள்ளது. அதேபோல திரும்பச் செலுத்தும் காலமும் ஆசிய வளர்ச்சி வங்கி அல்லது உலக வங்கி வழங்கும் அவகாசத்தைப் போல் இருக்க வேண்டும் என நேபாளம் கோரியுள்ளது.

ஆனால் நேபாளத்துக்கு இந்த முடிவு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. சமீப காலமாக நேபாளில் இருந்து சீனாவுக்கு ஏற்றுமதி 14.7% குறைந்துள்ளது. அதே போல முன்னறிவிப்பு எதுவும் இன்று சமீபத்தில் நேபாளில் முற்றுகை நடவடிக்கையை சீனா முன்னெடுத்தது. இதற்கிடையில் 'கொரோனா தடுப்பு நடவடிக்கை' என்பதன் பேரில், நேபாளத்தின் வர்த்தகர்களுக்கு சீனா தடை விதித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. மொத்தத்தில் நேபாளத்தை வணிக ரீதியாக ஒடுக்கும் நடவடிக்கையில் மறைமுகமாக சீனா ஈடுபட்டிருக்கலாமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.




## 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தை முன்வைத்து 70 நாடுகளை இலக்கு வைத்துள்ள சீனா!

இவை இவ்வாறிருக்க இந்தியா தற்சார்பு இந்தியாவினை வலுப்படுத்த விரும்புகிறது. அதற்காக நடவடிக்கையிலும் இறங்கியுள்ளது. எனினும் அண்டை நாடான இலங்கையிலும் மனிதாபிமான உதவிகளை செய்து வருகின்றது. நேபாளத்துக்கும் உதவிகளை செய்து வருகின்றது. இவ்வாறான செயல்பாடுகளை கவனிக்கும் போது, இந்தியாவுக்கு எந்த மாதிரியான பிரச்சினையை சீனா கொடுக்கப் போகிறதோ என்ற அச்சம் இந்தியாவுக்கு உள்ளது.

எவ்வாறாக இருந்தாலும் சீனாவின் இராஜதந்திரம் இந்தியாவிடம் பலிக்கப் போவதில்லை என்பதே இந்திய பொருளாதார நிபுணர்களின் நம்பிக்கையாக இருக்கின்றது.

சாரங்கன்...

**எரிபொருள் தட்டுப்பாடு, விலைவாசி அதிகரிப்பு உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையானது அரசாங்கத்துக்கும், அரசியல்வாதிகளுக்கும் எதிரான மக்கள் போராட்டமாக மாறியுள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நாடு எதிர்கொண்ட பாரிடிய நெருக்கடியான சூழல் இது எனக் கூறலாம்.**



# ஜனநாயக நடைமுறைகளுக்கு மாறாக தீர்வை தேட முடியாது!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அரசுக்கும், ஆட்சியாளர்களுக்கும், ஒட்டுமொத்த அரசியல்வாதிகளுக்கும் எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போராட்டக்காரர்களின் பிரதான கோரிக்கை ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதாகக் காணப்படுகிறது. இந்தக் கோரிக்கை சாதாரண மக்களினால் முன்வைக்கப்பட்டதொன்று என்பதை விட, அரசியல் மயப்படுத்தப்பட்ட கோரிக்கை என்றே கூற வேண்டும்.

இதனை விடவும் பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற கருத்து போராட்டத்தில் ஈடுபடுவோரால் முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறான கோரிக்கைகள் எந்தளவுக்கு அரசியலமைப்புக்குச் சாதகமானவை என்பது குறித்த கேள்வி காணப்படுகிறது.

ஜனாதிபதி தனது சொந்த விருப்பின் பேரில் இராஜினாமாக் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்து விட்டு விலகிச் செல்ல முடியும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பிரதமர் ஜனாதிபதியாகப் பதவியேற்க வேண்டும். இருந்தாலும் பிரதமருக்கு ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு அரசியலமைப்பு ரீதியில் தடை காணப்பட்டால், ஒருமாதம் என்ற குறுகிய காலப்பகுதிக்கு சபாநாயகர் ஜனாதிபதியின் கடமைகளை ஆற்ற முடியும்.

ஒரு மாத காலத்துக்குள் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையுடன் ஒருவர் ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே அரசியலமைப்பின் ஏற்பாடுகள் என சட்ட வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். தற்போதைய நிலையில் எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது தேசிய மக்கள் சக்தியோ பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மையை நிரூபித்து புதிய ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் இல்லை. எனவே, ஜனாதிபதியைப் பதவி விலகக் கோருவது நடைமுறையில் எந்தவொரு தீர்வையும் வழங்கப் போவதில்லை.

## ஜனாதிபதியைப் பதவி விலகுமாறும், பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் வீட்டுக்குச் செல்லுமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்வைக்கின்ற கோரிக்கையின் பின்னணியில் அரசியல் நிகழ்ச்சித் திட்டம்!

மறுபக்கத்தில், பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையும் ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்படுகிறது. 225 பேரையும் உடனடியாக பாராளுமன்றத்தை விட்டு அனுப்புவது என்பது சாத்தியமற்ற விடயம். அரசியலமைப்பையோ அல்லது ஜனநாயக வரம்புகளையோ மீறி எழுந்தமானமாக நடந்து கொள்ள முடியாது. எமது நாட்டுக்கென ஜனநாயக நடைமுறைகள் உள்ளன.

சுதந்திரத்துக்குப் பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டு மக்கள் விரக்தி அடைந்துள்ளார்கள் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அவ்வாறான பின்னணியில் தமக்கு உண்மையில் சேவையாற்றக் கூடியவர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கான அதிகாரமும் வாக்காளர்களாகிய மக்களிடமே காணப்படுகிறது.

## அரசியலமைப்புக்கு முரணாக செயற்படுமாறு பலவந்தப்படுத்தி, ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வதால் பயன் கிடைக்கப் போவதில்லை!

இவ்வாறான நிலையில் தற்பொழுது பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரையும் வீட்டுக்கு அனுப்பி விட்டால் நிலைமை சரியாகிவிடுமா? நிச்சயமாக இல்லை. எனவே தற்பொழுது பதவியில் உள்ள ஜனாதிபதியுடன் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி இடைக்கால அரசாங்கத்தை அமைத்து குறுகியகால மீட்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதே காலத்தின் தேவையாக உள்ளது. அரசியல்வாதிகள் பலர் இதனை வலியுறுத்துகின்றனர்.

ஒட்டுமொத்த நாடும் சிக்கலான நிலைமைக்கு முகங்கொடுத்திருப்பதால் எதிர்க்கட்சிகள் தற்பொழுது அரசியல் இலாபம் தேட முயற்சிக்காது இணைந்து தீர்வொன்றைக் காண்பதற்கு முன்வர வேண்டும் என்பதுதான் நேர்மையாக சிந்திப்போரின் எண்ணமாகும்.

இது இவ்விதமிருக்க, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் மீண்டும் வலுப்பெற்றுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவினால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும், அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைவரும் இதனை ஒழிப்பதாகக் கூறியே ஆட்சியைக் கைப்பற்றியிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க, தற்போதைய பிரதமரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாகக் கூறிய போதும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அவர்கள் தவறியிருந்தனர்.

இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து சில மாதங்களில் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைத்து அவற்றைப் பாராளுமன்றத்துக்கு வழங்கியிருந்தார். '19 ஆவது திருத்தம்' எனும் பெயரில் இதற்கான அரசியல் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புத் திருத்தத்தினால் பாராளுமன்றத்தில் குழப்பநிலை ஏற்பட்டமை நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். அவசர அவசரமாக அரசியலமைப்பைத் திருத்துவதனால் எமக்கு ஏற்பட்ட அரசியல் அனுபவத்தையும் கருத்தில் கொண்டு, மீண்டுமொரு அவசர திருத்தத்துக்குச் செல்வது பற்றி நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டும். தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராக அழுத்தம் கொடுப்பதற்காக அரசியலமைப்பை அவசர அவசரமாகத் திருத்துவது எதிர்காலத்தில் வேறு பிரச்சினைகளுக்கு வித்திடலாம் என்று சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர். டி.சில்வா குறிப்பிடுகின்றார்.

அதேநேரம், பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலொன்றுக்குச் செல்ல வேண்டுமென்ற கருத்தும் ஒரு சிலரினால் முன்வைக்கப்படுகிறது. இருந்தபோதும் தற்பொழுது நாட்டில் காணப்படும் பொருளாதார சூழ்நிலையில் தேர்தலொன்றுக்குச் செலவிடுவதற்குப் போதிய பணம் இல்லை. எனவே தேர்தலொன்றுக்குச் செல்வதும் சாத்தியமானதாக அமையாது. அவ்வாறு தேர்தல் நடத்தினாலும் தற்பொழுதுள்ள அரசியல்வாதிகளுக்கு மாற்றீடாக புதியவர்களைத் தேர்ந்தெடுக்க மக்களுக்குப் போதிய காலஅவகாசம் கிடையாது.



## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி முன்னெடுக்கப்–படுகின்ற போராட்டங்களை சாதகமாக்கி அரசியல் பின்னணி கொண்ட கும்பல்களால் வன்முறைகள்!

எனவே, தற்பொழுது பாராளுமன்றத்தில் உள்ளவர்களைப் பயன்படுத்தி, நாட்டின் ஜனநாயகத்தை எதிர்காலத்தில் பலப்படுத்தக் கூடிய மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் பற்றியே ஆர்ப்பாட்டக்காரர்கள் சிந்திக்க வேண்டும். அதேபோல மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இதனைப் பற்றிய சிந்தனையுடன் ஆக்கபூர்வமான தீர்வொன்றைத் தேடுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனை விடுத்து, மக்கள் போராட்டங்களைத் தமக்கு சாதகமாக்கி, தேவையற்ற வன்முறைகளை உருவாக்கி குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிப்பது நாட்டை மேலும் பாதாளத்துக்கே தள்ளும். கடந்த சில நாட்களில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்களில் சில தீய சக்திகள் ஊடுருவி வன்முறையை உருவாக்குவதற்கு எடுத்த முயற்சிகளையும் நாம் காணக் கூடியதாகவிருந்தது. இவ்வாறான வன்முறைச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது எதிர்க்கட்சியில் உள்ள அரசியல்வாதிகளின் பிரதான பொறுப்பாகும்.

இது இவ்விதமிருக்க, ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தும், அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தும் கொழும்பு, கண்டி, தங்கல்லை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கொழும்பிலும் ஊர்வலமொன்று கடந்த செவ்வாயன்று இடம்பெற்றிருந்தது. இந்த ஆர்ப்பாட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.



## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் உருவெடுக்கும் ஆர்ப்பாட்டங்கள்!

'ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னர் பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலப் பகுதியிலேயே பயங்கரவாதம் நாட்டிலிருந்து தோற்கடிக்கப்பட்டது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டமையாலேயே நாடு காப்பாற்றப்பட்டது' என போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். எனவே ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிப்பது எமது கடமை என்று ஆர்ப்பாட்டம் நடத்தியோர் தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான போராட்டம் தீவிரமடையும் அறிகுறியும் தென்படுகின்றது.

இதேவேளை கொவிட்19 தொற்றுநோய் இலங்கையை மாத்திரமன்றி உலக நாடுகள் அத்தனையையும் கடுமையாகப் பாதித்திருந்தது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து இலங்கை மீளாத சந்தர்ப்பத்தில் கொவிட்19 தொற்றுநோய் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பேரிடியாக வந்தது. உலகத் தொற்றுநோயின் தாக்கம் நாட்டின் பொருளாதாரத்தை கடுமையாகப் பாதித்தது.

தற்பொழுது எதிர்கொள்ளும் விலைவாசி அதிகரிப்புப் போன்ற பிரச்சினைகள் இலங்கை மாத்திரமன்றி உலக நாடுகள் பலவும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகும். அவற்றுடன் நின்று விடாது, ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் நடைபெற்று வரும் யுத்தம் உலக எரிபொருள் விலையில் தாக்கத்தைச் செலுத்தியது. எரிபொருள் விலையேற்றம் என்பது இலங்கை மாத்திரமன்றி மேலைத்தேய நாடுகள் கூட எதிர்கொள்ளும் பிரச்சினையாகும். எனவே, நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பிரச்சினையை ஒவ்வொருவரும் அரசியலாக்காது அனைவரும் இணைந்து நாட்டின் முன்னேற்றத்துக்காக தீர்வொன்றைக் காண முன்வர வேண்டும். இதற்கான பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கும் உண்டு என்பதை மறந்து விடக் கூடாது.

**'அவசர அவசரமாக அரசியலமைப்பைத் திருத்துவதனால் எமக்கு ஏற்பட்ட அரசியல் அனுபவத்தை கருத்தில் கொண்டு, மீண்டுமொரு அவசர திருத்தத்துக்குச் செல்வது பற்றி நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டும். தற்போதைய ஆட்சியாளர்களுக்கு எதிராக அழுத்தம் கொடுப்பதற்காக அரசியலமைப்பை அவசர அவசரமாகத் திருத்துவது எதிர்காலத்தில் வேறு பிரச்சினைகளுக்கு வித்திடலாம்' என்று கூறுகின்றார் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி.சில்வா**

# லயக்குடியிருப்பு தனி வீடாகும் திட்டம்

## தீர்க்கமான கொள்கையும் இல்லை; அக்கறையும் இல்லை



இ.தொ.கா.வின் அன்றைய தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் நீண்டகாலமாக தோட்டத் தொழிலாளர் குடியிருக்கும் வீடுகளுடன் காய்கறித் தோட்டங்களும் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

தோட்டங்களை தனியார் கம்பனிகளிடம் கையளிக்கும்போது தொழிலாளரின் குடியிருப்புக்களையும் காய்கறித் தோட்டங்களையும் கம்பனி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரக்கூடாது என இ.தொ.கா வலியுறுத்தியது. அந்த அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

ஏற்கனவே அரசாங்கம் கொள்கையளவில் தோட்டக் குடியிருப்புக்களும் காய்கறித் தோட்டங்களும் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்குவதை ஏற்றுக் கொண்டிருந்தது. தொடர்ந்து மேற்கொண்டு வந்த நடவடிக்கைகளின் காரணமாக அரசாங்கம் வீடமைப்பு நம்பிக்கை நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்து இ.தொ.காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த அனைத்து தொழிலாளர்களின் குடியிருப்புக்களும் 31.05.1993 அன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமாகும். இந்தக் குடியிருப்புக்கள் ஒவ்வொரு குடும்பத் தலைவர்களுக்கும் சொந்தமாக்கப்பட வேண்டும்.

இ.தொ.காவின் அயரா முயற்சியின் பயனாக தோட்டக் குடியிருப்புக்கள் தொழிலாளர்களுக்கே சொந்தமாகும்.

இது 1993ம் ஆண்டு இ.தொ.காவின் அப்போதைய உப தலைவராக இருந்த மறைந்த ஏ.எம்.டி. இராஜன் கையெழுத்திட்டு சகல தோட்டக் கமிட்டித் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் கொட்டகலை பிளாண்டேசன் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் கையெழுத்திட்ட 27.4.1993 திகதியுடன் கூடிய 50/1993 இல. சுற்றுநிருபம் ஒன்றும் சகல தோட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

இன்று 28 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று கூறியவாறு குடியிருப்புக்களும் காய்கறித் தோட்டங்களும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக்கப்பட்டுள்ளதா? இன்றுவரை அது சாத்தியப்படவே இல்லை. தொழிலாளர் வசித்துவரும் குடியிருப்புக்களும் காய்கறித் தோட்டங்களும் சொந்தமாக்கப்படுவதை விடுத்து வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள மா, பலா, தென்னை மற்றும் வேலியில் நாட்டப்பட்டுள்ள தீக்குச்சி (கினிகூறு) போன்ற மரங்களில் விளையும் பயன்களை மட்டுமே அனுபவித்து வரும் இவர்கள் தமது தேவையின் நிமித்தம் இந்த மரங்களை வெட்டிப் பயன்படுத்தவோ அல்லது குடியிருப்புக்களில் விழுந்து ஆபத்தை உண்டுபண்ணும் நிலையில் காணப்படும்போது வெட்டி அகற்றவோ அனுமதிக்கப்படுவதில்லை.

இதனால் பல தடவைகள் அறிவித்த பின்னர் வந்து மரங்களை வெட்டி அகற்றும் தோட்ட நிர்வாகங்கள் பயிரிடப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒரு பங்கை தானும் வழங்க முன்வருவதில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் முன்னாள் இராஜாங்க அமைச்சரான வீ. இராதாகிருஷ்ணன் ம.ம. முன்னணியின் இங்கிரிய அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோது இவ்வாறு வெட்டி அகற்றப்படும் மரங்களில் ஒரு பங்கை பயிரிடப்பட்டவர்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இராதாகிருஷ்ணன் தெரிவித்திருந்தார். ஆனால் அதுவும் சாத்தியப்பட்டதாக இல்லை.

தோட்ட நிர்வாகங்கள் குறிப்பாக பெறுமதி வாய்ந்த பலாமரங்கள் மீது குறிவைத்து மிகவும் தந்திரமான முறையில் அவற்றை வெட்டி எடுத்துச் செல்லும் ஒரு உபாயத்தையே இன்றுவரையில் கையாண்டு வருகின்றன. தொழிற்சங்கங்களும் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இந்தப் பிரச்சினை தொடர்பாக தலையிட்டு தொழிலாளர் சார்பாக நன்மை பெற்றுக்கொடுக்கும் எந்தவொரு தீர்க்கமான நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லையென்பது கவலைக்குரியதாகும்.

இனி தோட்டத் தொழிலாளர்களுக்கான வீட்டுத்திட்டம் குறித்து ஆராய்ந்து பார்க்கும்போது வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் தோட்டத் தொழிலாளரின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதா?

சுபீட்சத்தை நோக்கிய தற்போதைய அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2022 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் தோட்டத் தொழிலாளரின் வீட்டுத் திட்டத்துக்கென 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மூன்று வருட காலத்தில் லயன் குடியிருப்புக்கள் ஒழிக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளரின் வீட்டுத் திட்டத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்த 500 மில்லியன் போதுமானதா? தற்போதைய நிலையில் இந்தத் தொகையில் எத்தனை வீடுகள் அமைக்க முடியும்? சுமார் 300 வீடுகள் அளவில் அமைப்பதற்குப் போதுமானதாக இருக்கும்போது லட்சக்கணக்கான லயன் குடியிருப்புக்கள் இல்லாதொழிக்கப்படும் என கூறப்படுவது சாத்தியமாகுமா? அதுவும் மூன்றுவருட காலத்துக்குள் லயன்களை இல்லாதொழிக்கப்படும் என்பதை நம்பமுடியுமா?

தீவிபத்தினால் எரித்து அழிந்த வீடுகள் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிப்புக்குள்ளான பாதிப்பை எதிர்நோக்கியுள்ள லயன் குடியிருப்புக்களுக்கு பதிலாக ஆரம்பிக்கப்படும் சில வீடுகளை அமைத்துக் கொடுக்கவே மூன்று வருடங்களுக்கு மேலான காலத்தை எடுக்கும்போது ஒரு லட்சம் வரையிலான லயன் குடியிருப்புக்களை மூன்றுவருட காலத்தில் இல்லாதொழித்து புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறப்படுவது பெரும் விந்தையே.

2014ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் போது அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவினால் பெருந்தோட்ட மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி அப்போதைய தோட்டத் தொழில் அமைச்சராக இருந்த களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தலைமையில் களுத்துறை, அகலவத்த, டெல்கித் தோட்டம் லெண்ட்ஸ்கேப் பிரிவில் 23.10.2018 முதலாவது வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவந்த நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஒவ்வொரு வீடும் 12 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதுடன் மாவட்டத்தின் மொகமதியா, அஷ்க்வெளி, ஹெடிகல்ல ஆகிய தோட்டங்களிலும் முன்னுரிமை அளித்து இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டதுடன் அன்றைய தினம் தெனியாய பகுதியிலும் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு அமைதியான முறையில் குறிப்பிடத்தக்க சேவையாற்றி வருகின்றனர். வியர்வை சிந்தி உடல் உழைக்கின்றனர். பெருந்தொகையான அந்நிய செலாவணியை இந்த நாட்டுக்குப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். எனவே பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றோம் என முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அப்போது தெரிவித்திருந்தார்.

வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு இன்று எட்டு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாது கைவிடப்பட்டு மறந்த ஒரு விடயமாகி விட்டது.

இடிந்துவிழும் நிலையில் உள்ள மிகவும் பழைய லயன் குடியிருப்புக்களிலேயே பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்த நிலையில் பொழுதைக் கழித்துவருகின்றனர்.

நல்லாட்சியின்போது 2017ல் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு மற்றும் தீ விபத்துக்களினால் சேதமான குடியிருப்புக்களுக்குப் பதிலாக ஆரம்பிக்கப்பட்ட பல வீட்டுத்திட்டங்கள் இன்று வரையில் பூர்த்தி செய்யப்படாது அரை, குறை நிலையில் கிடப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள, கொபவெல தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட 21 குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டம் ஒரு சிறந்த உதாரணமாகும். இங்கு 13 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் எஞ்சிய வீடுகள் அமைக்கப்படாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதுடன் இதில் ஏதோ மோசடி இடம்பெற்றுள்ளதாக பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், அமைச்சின் மேலதிக செயலாளராக இருந்த எச்.பி. சுமணசேகர, இ.தொ.காவின் கணபதி கனகராஜ், பரத் அருள்சாமி மற்றும் களுத்துறை மாவட்டத்துக்குப் பொறுப்பான செந்தில் தொண்டமான், காலி ட்ரஸ்ட் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுவந்த போதிலும் எந்தவொரு பலனும் ஏற்படவில்லை.

பெருந்தோட்டப் பகுதியில் வாழ்கின்ற தோட்ட மக்களுக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் வீடுகள் தேவைப்படும் நிலையில் 2020ம் ஆண்டுக்கு முன்னர் 25 ஆயிரம் வீடுகளைக்கட்டி முடிப்பேன். இந்த வீடுகளைக் காட்டியமைத்த பின்னரே மக்கள் மத்தியில் வாக்கு கேட்க வருவேன் என நல்லாட்சியின் மலைநாட்டு புதிய கிராமம் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராக இருந்த பி. திகாம்பரம் 2018 ஒக்டோபர் 13ம் திகதி பண்டாரவளை பூனாகலை அம்பிட்டிகந்த தோட்டத்தில் அமைக்கப்பட்ட 157 வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வின்போது தெரிவித்திருந்தார். இவர் கூறியவாறு 25 ஆயிரம் வீடுகளைக் கட்ட முடிந்ததா?

மலையக மக்களுக்கு வீடமைப்பு முக்கியமில்லை. காணி உரிமையே அவசியம். காணி இருந்தால் வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியும். அந்த வசதிகள் அவர்களுக்கு இருக்கின்றன. அதனால் அந்த மக்களுக்கு வீடு வழங்குவதை விட அவர்களுக்குச் சொந்தமான காணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது கட்சியின் இலக்கும் அந்த மக்களுக்கு காணி பெற்றுக்கொடுப்பதே என ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். லயன்முறை ஒழிக்கப்படும், தனி வீட்டுத் திட்டம், மாடி வீட்டுத் திட்டம், கொன்கிறீட்டிலான வீட்டுத்திட்டம், இந்திய அரசின் உதவியின் வீட்டுத் திட்டம் என்றெல்லாம் கூறப்படும்போது மலையக மக்களுக்கு வீடமைப்பு முக்கியமில்லை. காணி உரிமையே தேவையாகும் என கூறியிருந்தது மலையக மக்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தியது.

நாம் எவ்வளவுதான் பேசினாலும் பெருந்தோட்டத்துறை தொழிலாளர் சமூகத்தை இந்நாட்டின் முக்கியமானதோர் சமூகப் பிரிவாகவோ பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்யும் ஒரு பிரிவினராக ஏற்று அங்கீகரிக்கும் மனப்பக்குவம் இன்னும் ஏற்படவில்லை. அவர்களும் இந்த நாட்டுக்கு உரியவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதில் உள்ளொன்று வைத்து புறமொன்றைப் பேசி புறக்கணிக்கப்பட்டு வரும் போக்கு இருந்து வருவதையே உணரமுடிகிறது.

இங்கிரிய மூர்த்தி...

# பெருந்தோட்ட சுகாதார சேவை தேசிய சுகாதார சேவையோடு இணைக்கப்படல் வேண்டும்

சமகால பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்கள் விலையேற்றம், உணவு பொருட்கள் தட்டுப்பாடு என பெருந்தோட்ட மக்களும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஏலவே இங்கு வறுமை, மந்தபோசனம், சுகாதார சீர்கேட்டினால் ஆரோக்கியமற்ற சூழ்நிலையே நிலவுகிறது. பெருந்தோட்ட சுகாதார நிலைமை பற்றிய பிந்திய தகவல்களை தற்போது பகிர்ந்து கொள்வது உசிதமானது.

மலையகத்தில் போஷாக்கின்மை என்பது பாரிய பிரச்சினையாக விளங்குகின்றது. ஏனைய சமூகங்களை விட மலையக சமூகம் மந்த போசன பாதிப்பினை வெகுவாகவே அநுபவித்து வருகின்றது. அத்தியாவசிய ஊட்டச்சத்து பற்றாக்குறை நிலவுவதால் முழு சமூகமே இளம் வயதிலேயே முதுமைத் தோற்றத்தை அடைந்து விடுவது சர்வசாதாரணம். இதனால் உள உடல் அபிவிருத்தி என்பது கேள்வி குறியாகின்றது. அத்துடன் சுகாதார மேம்பாடு என்பது முற்றிலுமே தொய்வடைந்து போயுள்ளது.

பெருந்தோட்டத்துறை மக்களின் வாழ்வில் அடிப்படை சுகாதார வசதிகள் கூட முறையாக வழங்கப்பட வில்லை. நாட்டில் பிற சமூகங்கள் அனுபவிக்கும் பொது சுகாதார வாய்ப்புகள் தோட்ட மக்களுக்குக் கிடைப்பதில் பல்வேறு சிக்கல்கள் தடைகளே இதற்குக் காரணம். மலையக மக்கள் தமது சகல தேவைகளுக்கும் தோட்ட நிர்வாகங்களையே நம்பியிருக்கின்றார்கள். தோட்ட முகாமைத்துவத்தின் கீழிருந்து முற்றாக விடுபட்டு முக்கிய நீரோட்டத்தில் கலக்கும் சந்தர்ப்பம் இன்னும் வந்தபாடில்லை.

பெருந்தோட்டத்துறையை சார்ந்த 50 மருத்துவமனைகள் காணப்படுகின்றன. இவற்றுள் 27 மருத்துவமனைகள் அரசு பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. மொத்தமாக 179 பிரசவ விடுதிகள், 266 மருந்தகங்களும் இங்கு உள்ளன. ஆனால் தேவையான அளவு மருத்துவர்கள், தாதிகள் இல்லை, மருந்துகள் இல்லை, அம்பியுலன்ஸ் வசதி இல்லாத நிலையில் தோட்ட லொறிகளையே நம்ப வெண்டிய நிலை. சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலையில் இங்கு நிலவும் வறுமை உச்சமடைந்து செல்கின்றது. வாழ்வாதார பற்றாக்குறையால் போஷாக்கு நிறைந்த உணவு பற்றி நினைத்து பார்க்கவே முடியாதுள்ளது.

இன்று மலையகத்திலிருந்து சோகை, மூளைக்காய்ச்சல், கர்ப்பிணி மரணம், சிசு மரணம் அதிகரித்துச் செல்லும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. இத்துடன் சிறுவர் மந்த போசனம் பெரும் பாதிப்பினை உருவாக்கி வருகின்றது. இது நாட்டின் ஏனைய பகுதிகளிலும் காணப்பட்டாலும் கூட கூடிய பாதிப்பினை அடையும் மாவட்டங்களில் நுவரெலியா மாவட்டமே முதன்மை பெறுகின்றது. இரண்டாம் இடம் மொணராகலை மாவட்டத்துக்கு.

குழந்தையின் வளர்ச்சி மட்டத்தின் கணிப்பின் பேரிலேயே மந்தபோசன நிலை மதிப்பிடப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கையொன்றின்படி நுவரெலியா மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட ஒட்டுமொத்த குழந்தைகளில் 40 வீதமானவை வளர்ச்சியின்மை பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளது. 25.3 வீத குழந்தைகள் எடைகுறைவுடனும் 10.5 வீத குழந்தைகள் உயரத்திற்கேற்ப நிறையின்றியும் காணப்படுவதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



2000 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் பெருந்தோட்ட பகுதிகில் வாழ்ந்த 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 34 சத வீதமானோர் வளர்ச்சி குன்றியவர்களாக காணப்பட்டார்கள.; நுவரெலியா மாவட்டத்தில் மட்டுமின்றி முழு மலையகத்தையுமே சத்து குறைபாடு ஆக்கிரமித்துள்ளதை அறியமுடிகின்றது. இங்கு குறைந்த ஆயுட்காலம் கொண்ட ஒரு சமூகமாக மலையக சமூகம் மாறி வருகின்றது. மந்த போசனம் பெரும் சவாலாக அதிகரித்துச செல்கின்றது. ஒரு பக்கம் வறுமை, இன்னொரு பக்கம் அபிவிருத்திக்கான அத்திவாரம் இன்மை போதிய சுகாதார நடைமுறைகளுக்கான வதிகள் இல்லாமையால் சுகாதார பழக்கவழக்கங்கள் முற்றாக கடைபிடிக்க முடியாத அவல நிலை.

மது பாவனை, புகைத்தல், வெற்றிலைப்பாவனை இங்கு மிகை. சத்;தான உணவுக்கான அவசியம் பற்றிய விழிப்புணர்வு கிடையாது. தோட்ட மக்களுக்கான சுகாதார சேவை வழங்கும்; நிகழ்ச்சி நிரல் தேசிய சுகாதார நெறிமுறைகளோடு இணைந்ததாக இல்லை. பாதுகாப்பு, கழிவு நீர் வசதிகள், சுத்தமான குடி நீர், தனித்தனி வீட்டு வசதிகள் இங்கு அவசரதேவையாக உள்ளன. தேர்ச்சி பெற்ற மருத்துவர் சேவை வழங்கப் படுவது முக்கியம். மலையகத்தில் போதைவஸ்த்து பாவனையும் அதிகரித்துச் செல்லும் அறிகுறியும் தெரிகின்றது. எனவே மக்களுக்கு தெளிவூட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துவது இன்றியமையாதது.

பெருந்தோட்டத் துறையின் சுகாதார மேம்பாடு மற்றும் மந்தபோசன நிலையிலிருந்து மீட்சி சம்பந்தமான தனியான செயல் திட்டம் உருவாக்கப்படுவதன் மூலம் மட்டுமே ஆரோக்கியமான விளைவுகளை எதிர்பார்க்க இயலும். இதில் வறுமைக்கான வடிகால் தேடும் வழி முறைகளும் உள்ளடக்கப்படுவதே உகந்தது. இத்துடன் கடின உழைப்பின் காரணமாக தடிமன், இருமல், தோற்பட்டை வலி, முதுகெலும்பு பாதிப்பு, இரத்த அழுத்தம், இரும்பு சத்து குறைவு, இளைப்பு போன்ற பாதிப்புகளுக்கு தாய்மார் ஆளாகின்றனர். இதனால் தாயப்;பாலுட்டல் இங்கு முழுமையாக நடைபெறுவதில்லை. கடும் உழைப்பாளர்களாக இம்மக்கள் இருக்கின்றார்கள்.

எனினும் அதற்கேற்ற வருமானம் இ;ல்லை. இதனால் கர்ப்பகாலத்திலும் பிரசவத்தின் பின்னரும் இவர்களுக்கு சத்தான உணவு கிடைப்பதில்லை. எனவே பிறக்கும் குழந்தைகள் மாதாந்த சராசரி வளர்ச்சி வீத தரவுகளில் பின் தங்கிய நிலையை அடைகின்றது.

இன்றும் கூட தோட்ட மக்களில் அதிகமானோர் கழிவறை வசதிகள் இன்றி கஷ்டப்படுகின்றார்கள். வீட்டு முற்றத்திலிருக்கும் வடிகான்கள் உடைந்து பட்டு காணப்படுகின்றன. போதாக் குறைக்கு லயங்களைச் சுற்றி தேயிலை மலைகள் காடுகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. இதனால் சுகாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் அற்றுப் போய்க்கொண்டிருக்கின்றன.

சுத்தமான காற்றோ, குடிநீரோ கிடைப்பது அரிது. நெருக்கமான லயக்காம்பிராக்களையொட்டி முன்பக்கமாகவோ பின்பக்கமாகவோ அதனைப் பெருப்பித்து கட்டுவதும் சமையல் போன்றத் தேவைகளுக்காக குடிசைக்காம்பிராக்களை அமைப்பதும் நடைபெறுவதால் மேலும் நெருக்கடி அதிகரிக்கின்றது. சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகின்றது.

ஆய்வொன்றின்படி பெருந்தோட்ட மக்கள் வாழும் லயங்கள் மனித வாழ்வுக்க ஏற்புடையது அல்ல என்று நிறுவப்பட்டுள்ளது. சுற்றாடலும் மிக மோசமான பக்கவிளைவுகளை ஏற்படுத்த ஏதுவாகவே இருக்கின்றது.

மனிதர்களோடு ஆடு, மாடு, நாய், கோழி, பூனை போன்ற விலங்கினங்களும் நெருங்கி வாழும் சூழலில் சுகாதார நலன்கள் கேள்விக் குறியாகின்றன. சிறியவர்கள், பெரியவர்கள், ஆண்கள் பெண்க;ள் பேதமின்றி சகலருமே சுகாதார பழக்க வழக்கங்களில் போதிய கரிசனை காட்டுவதாயில்லை.

பெருந்தோட்ட மக்களின் சுகாதார சேவை தேசிய சுகாதார சேவையோடு இணைக்கப் படாமையே இதற்கு அடிப்படை காரணம். இம்மக்களின் சுகாதார நலனைக் கவனிக்க தகுதிவாய்ந்த சுகாதார அதிகாரிகள் இல்லை. தோட்ட நலன்புரி உத்தியோகத்தர் என்னும் பதவியிலிருக்கும் ஆட்கள் சுகாதாரம் சம்பந்தப்பட்ட அநுபவசாலிகள் அல்ல.

எனவே இவர்களால் முறையான சுகாதார சேவைகளை வழங்க முடியாது. பாதுகாப்பற்ற குடிநீர், கழிவு நீர் தேக்கம், இரசாயன பாவனை, முறையாக அகற்றப்படாத குப்பைக் கூலங்கள், ஒழுகி வழியும் கூரைகள என்பன இங்கு சுகாதார நலன்களுக்கு சவால்விடுக்கும் சங்கதிகளாகும்.

இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணமாக இருப்பது பெருந்தோட்ட மக்கள் இன்னும் பிறரில் தங்கி நிற்க்கும் மனோபாவமும் அதனை நீட்சி செய்யும் தோட்டக் கட்டமைப்பு முறமையுமேயாகும். ஏனெனில் எதற்கெடுத்தாலும் அதை தோட்டம் செய்யட்டும் என்று வாழ்ந்து பழகிவிட்; டார்கள். அத்துடன் கிராம மக்கள் நகரத்தில் வாழ்வோரது சுகாதார சேவைகள் கிரமமாக நடைபெற பிரதேச சபைகள் பொறுப்பேற்கின்றன. தவிர வாழ்விட சூழல் இங்கு விரிவாக அமைவதால் சன நெருக்கடி ஏற்படுவதில்லை. தவிர இங்கு வாழும் மக்களது சுகாதார சேவைகள் யாவும் தேசிய ரீதியில் ஒருங்கினைக்கப்படுவதால் போதிய கவனம் செலுத்தப்படும் நிலமை தோன்றியுள்ளது. எதிர்வரும் காலங்களில் பிரதேச சபைக்கூடான வரப்பிரசாதங்களை தோட்ட மக்களும் பெறும் வாய்ப்பு ஏற்படுவதால் அதனை பெற இம்மக்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

பல்வேறு காரணிகளால் பெருந்தோட்டங்கள் காடுகளாகி வருகின்றன. சிறுத்தைகளும் விஷஜந்துகளும் குளவி என்பன தொழிலாளர்களை அச்சுறுத்துவதோடு மரணத்தையும் ஏற்படுத்துகின்றன. இவைகளின் தொல்லைகளிலிருந்து மக்களை பாதுகாக்க தோட்ட நிர்வாகங்கள் அக்கறை காட்டுவது இல்லை. தற்போதைய நிலையில் தோட்ட மக்களின்; குடி நீர் வசதி, மலசலக்கூடம், குப்பைக்கூலங்கள் அகற்றல்,பாதையமைத்தல், பாதை செப்பனிடல் போன்றத் தேவைகளை தோட்டத் நிர்வாகங்கள் செய்யப்போவதில்லை. எனவே தமது தேவைகளை தாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டியதொரு கட்டாயம் ஏற்பட்டு வருகின்றது. இதற்காக பிரதேச சபைகளின் சேவைகளைப் பெற வேண்டிய நிலை தோன்றியுள்ளது. உண்மையில் தோட்ட மக்களின் சுகாதார மேம்பாடு ஒரு நீண்ட கால வேலைத் திட்டமாகவே இருக்கப்போகின்றது.

தற்போது தனித்தனி வீடுகள் என்ற கொள்கையின் கீழ் மலையகத்தின் ச கல வாழ்விடங்களும் கிராமங்களாக மாறுவதற்கு நீண்டகாலம் எடுக்கும். அதுவரை மக்களினது சுகாதார சேவைகள் கவனிக்கப்பட வேண்டுமாயின் தேசிய ரீதியிலான சுகாதார கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படுவது அவசியமானதொன்று. இதே நேரம் பிரதேச சபைகளுக்கூடான பயன் பாடுகள் பாரபட்சமின்றி பெருந்தோட்ட பகுதிகளுக்கும் கிடைக்கும் வகையில் சகல தடைகளையும் தகர்த்தெறிய வேண்டிய அவசியம் உள்ளது.

பன் பாலா...

# விளையாட்டு



## சர்வதேச கிரிக்கெட் சபையின்

# ஆடவர் கிரிக்கெட் குழுவில் மஹேல ஜயவர்தன

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், தற்போதைய கிரிக்கெட் பயிற்சியாளருமான மஹேல ஜயவர்தன சர்வதேச கிரிக்கெட் சபையின் ஆடவர் கிரிக்கெட் குழுவின் உறுப்பினராக இணைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

மொத்தம் ஐந்து பேர் அடங்கிய இந்த கிரிக்கெட் குழுவில் மஹேல ஜயவர்தன, முன்னாள் கிரிக்கெட் வீரர் ஒருவரினை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் உறுப்புரிமை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவராக காணப்படும் ஜெய் சாஹ்வும், இந்த குழுவில் உறுப்பினராக மாறியிருக்கின்றார். ஜெய் சாஹ் கிரிக்கெட் சபை ஒன்றினை பிரதிநிதித்துவம் செய்கின்ற வகையில் ஐ.சி.சி. இன் கிரிக்கெட் குழுவில் உறுப்புரிமை பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுதவிர நியூசிலாந்து கிரிக்கெட் பயிற்சியாளர் கேரி ஸ்டேட், மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த கிரிக்கெட் போட்டி நடுவர் ஜோயல் வில்சன் மற்றும் மெர்லிபோன் கிரிக்கெட் கழகத்தினை (Marylebone Cricket Club) பிரதிநிதித்துவம் செய்கின்ற ஜேமி கோக்ஸ் ஆகியோரும் இந்த குழுவில் இடம்பெற்றிருக்கின்றனர். ஐ.சி.சி. இன் கிரிக்கெட் குழுவானது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு தேவையாக இருக்கும் சில முக்கிய ஆலோசனைகளை வழங்கும் ஒரு அமைப்பாக காணப்படுகின்றது.

இந்த கிரிக்கெட் குழு முன்னதாக வழங்கிய ஆலோசனைகளுக்கு அமைய 2022/23 இற்கான கிரிக்கெட் பருவகாலத்தில் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிகளின் போது பொதுவான போட்டி நடுவர்களும் (Neutral Umpires), ஒருநாள் மற்றும் ரி 20 போட்டிகளில் சொந்த மைதான போட்டி நடுவர்களும் (Home Umpires) பயன்படுத்தப்படுவர் என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே, கொவிட்19 வைரஸ் தொற்று காரணமாக டெஸ்ட் போட்டிகளின் போது அணிகள் தங்களது சொந்த மைதான போட்டி நடுவர்களை உபயோகம் செய்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரீஎஸ்எஸ்ஏ அனுசரணையில் திருகோணமலையில் முதன் முறையாக 16வயதின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி





(திருகோணமலை குறூப் நிருபர்)

திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அண்மையில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இச்சுற்றுப்போட்டிக்கு ரீஎஸ்எஸ்ஏ லண்டன், சன்ரைஸ் உதைபந்தாட்டக் கழகம் லண்டன் மற்றும் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம், லண்டன் ஆகிய அமைப்புகள் அனுசரணை வழங்கியிருந்தனர். திருகோணமலை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட அபிவிருத்திச் சங்கம் மற்றும் ட்றின்பினிட்டி உதைபந்தாட்ட அக்கடமி ஆகியன இணைந்து இச்சுற்றுப் போட்டியை ஒழுங்கமைப்பு செய்திருந்தன. திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளும் வகையில் இச்சுற்றுப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைவாக சுற்றுப்போட்டியில் இருபது பாடசாலைகள் கலந்து கொண்டிருந்தன.

இருபது பாடசாலைகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சுற்றுப்போட்டியின் முதலாவது சுற்று லீக் முறையிலும் அதற்கடுத்த சுற்றுக்கள் விலகல் முறையிலும் நடைபெற்றன.

ஸ்ரீ கோணஸ்வரா இந்துக் கல்லூரி, அல்பத்தா ம.வி, ஜமாலியா ம.வி, சாம்பல்தீவு தமிழ் ம.வி, புனித சூசையப்பர் கல்லூரி, மொஹம்மதியா ம.வி,செல்வி அம்பாள் ம.வி, விபுலாந்தா கல்லூரி, அல் ஹம்றா ம.வி, கலைமகள் ம.வி, நிலாவெளி கைலேஸ்வரா ம.வி, புனித சவேரியர் ம.வி, ஆத்திமோட்டை தமிழ் ம.வி, அல்அஸ்ஹர் மு.ம.வி, செல்வநாயகபுரம் ம.வி, றோயல் கல்லூரி, விக்னேஸ்வரா ம.வி, உவர்மலை விவேகானந்தா கல்லூரி, சாஹிரா கல்லூரி, அல் – மின்ஹாஜ் ம.வி ஆகிய பாடசாலை அணிகள் இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டன. ஒரே நேரத்தில் ஐந்து போட்டிகள் நடைபெறக்கூடிய வகையில் போட்டிகள் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையானது இச்சுற்றுப்போட்டியின் மற்றுமொரு சிறப்பம்சமாக அமைந்திருந்தது. திருகோணமலை மாவட்டத்தில் இவ்வாறு 16 வயதின் கீழ் பாடசாலை மாணவர்களுக்காக முதன் முறையாக நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டி இதுவாகும். எனவே, திருகோணமலை உதைபந்தாட்ட வரலாற்றில் கூடுதலான எண்ணிக்கையான மாணவர்கள் இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டமையானது ஒரு சிறப்பம்சமாக விளங்குகின்றது.

இச்சுற்றுப்போட்டிக்கு நந்தராஜா, பகீதரன்,மோகன், வாசு,இரகுநாதன் உட்பட லயன்ஸ் கழகமும் தங்களது ஒத்துழைப்புக்களை வழங்கி சுற்றுப்போட்டியைச் சிறப்பித்தனர்.

## கிழக்கு மாகாண ரக்பி யூனியன் அங்குரார்ப்பணம்



(மாளிகைக்காடு குறூப், அட்டாளைச்சேனை மத்திய நிருபர்கள்)

கிழக்கு மாகாண ரக்பி யூனியன் அங்குரார்ப்பணம் மற்றும் 2022/2024ம் ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு நிகழ்வுகள் கல்முனை ஸாஹிறா கல்லூரி (தேசிய பாடசாலை) கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, ரக்பி விளையாட்டு அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், கிழக்கு மாகாண ரக்பி யூனியனின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.போஷகர்கள் றிஸ்லி இல்யால், தலைவர், இலங்கை ரக்பி, எம்.எம். அப்துல் மஜீட், ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் முன்னாள் தேசிய ரக்பி அணி வீரர்.

ஆலோசகர்கள்: என்.எம். நௌபீஸ், கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர். என்.புள்ளநாயகம், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர். ஆயுட்கால உறுப்பினர் சம்ரத் பெர்னாண்டோ, இலங்கை ரக்பி கவுன்சில் உறுப்பினர். தலைவர் கலாநிதி, திருமதி சந்ரகாந்தா மகேந்திரநாதன், தாவரவியல் துறைத்தலைவர், கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தலைவர், இலங்கை பல்கலைக் கழக விளையாட்டு அசோசியேஸன். பிரதித் தலைவர் எம்.ஐ.ஜாபிர், அதிபர், கல்முனை ஸாஹிராக் கல்லூரி.



## 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்

# இலங்கையின் இரும்பு மனிதர் மொஹமட் அஸான்

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நிறைவுக்கு வந்த 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான டெகத்லன் எனப்படுகின்ற 10 அம்சப் போட்டிகளில் பங்கேற்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மொஹமட் அஸான் 7,172 புள்ளிகளை எடுத்து தங்கப் பதக்கம் வென்றார்.

இதன்மூலம் குறித்த போட்டிப் பிரிவில் 7,000 புள்ளிகளைக் கடந்த இரண்டாவது இலங்கை வீரராக சாதனை படைத்து அஸான் வரலாற்றில் இடம்பிடித்தார். முன்னதாக 2018ஆம் ஆண்டு டெகத்லன் தேசிய சம்பியனான அஜித் கருணாதிலக 7,355 புள்ளிகளை எடுத்து இலங்கை சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, 2018ஆம் ஆண்டு முதல் தேசிய ரீதியில் நடைபெற்று வருகின்ற டெகத்லன் போட்டி நிகழ்ச்சியில் தொடர்ச்சியாக பங்குகொண்டு வருகின்ற அஸான், தேசிய அளவில் தங்கப் பதக்கமொன்றை வெற்றி கொண்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

10 வகைப் போட்டி நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக (100 மீற்றர், 110 மீற்றர் தடை தாண்டல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், குண்டு எறிதல், 400 மீற்றர், தட்டெறிதல், கோலூன்றிப் பாய்தல், ஈட்டி எறிதல், மற்றும் 1,500 மீற்றர்) நடைபெறுகின்ற ஆண்களுக்கான டெகத்லன் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இதில் 100 மீற்றர் (11.31 செக். – முதலிடம்), நீளம் பாய்தல் (7.16 மீற்றர் – இரண்டாமிடம்), குண்டு எறிதல் (12.72 மீற்றர் – முதலிடம்), ஈட்டி எறிதல் (54.25 மீற்றர்– இரண்டாமிடம்), 1,500 மீற்றர் (4 நிடங்கள். 42.69 செக் – முதலிடம்), தட்டெறிதல் (38.43 மீற்றர் – முதலிடம்), கோலூன்றிப் பாய்தல் (4.30 மீற்றர் – முதலிடம்), 400 மீற்றர் (51.90 செக். – முதலிடம்), 110 மீற்றர் சட்டவேலி ஓட்டம் (14.90 செக். – முதலாமிடம்), உயரம் பாய்தல் (1.81 மீற்றர் – இரண்டாமிடம்)

ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு அஸான் திறமைகளை வெளிப்பத்தினார். இதன்படி, 7,172 புள்ளிகளை எடுத்து இம்முறை 100ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கத்தை வென்றார்.

கிழக்கு மாகாணம் நிந்தவூரைச் சேர்ந்த மொஹமட் அஸான், பாடசாலைக் காலத்தில் நீளம் பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தி வந்தார். இறுதியாக, 2016ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் பங்குகொண்டு நீளம் பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் போட்டிகளில் மாகாண மட்ட சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட பிறகு 2017ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் இயந்திரவியல் மற்றும் பொறியியல் படைப்பிரிவில் அஸான் இணைந்துகொண்டார்.

இலங்கையின் மெய்வல்லுனர் விளையாட்டுக்கு புத்துயிர் கொடுத்து வருகின்ற ஒரே அமைப்பு தான் இலங்கை இராணுவம். இன, மத, மொழி வேறுபாடின்றி திறமையான வீரர்களுக்கு வாய்ப்பளித்து வருகின்ற இலங்கை இராணுவத்தில் இணைந்துகொண்ட அஸான், நீளம் பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் போட்டிகளை கைவிட்டு மெய்வல்லுனர் போட்டிகளில் மிகவும் கடினமான போட்டி நிகழ்ச்சியான டெகத்லனை தெரிவுசெய்தார். அப்போது அஸானுக்கு 20 வயதாகும்.

கிரிக்கெட் விளையாட்டில் துடுப்பாட்டம், பந்துவீச்சில் இரண்டிலும் சிறப்பாக செயல்படக்கூடிய, திறமைகளை வெளிப்படுத்துகின்ற வீரர்களை சகலதுறை வீரர் என்பது போல, மெய்வல்லுநர் விளையாட்டில் டெகத்லன் போட்டியில் ஈடுபடுகின்றவர்களை சகலதுறை வீரராக அல்லது இரும்பு மனிதராக அழைப்பார்கள்.

தொடர்ச்சியான பயிற்சிகள், தொடர் உபாதைகள் என பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில், இலங்கையின் பிரதான மெய்வல்லுனர் தொடரான தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் 100ஆவது அத்தியாயத்தின் இரும்பு மனிதராக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மொஹமட் அஸான் மகுடம் சூடியிருக்கிறார்.

கிழக்கு மாகாண மெய்வல்லுநர் விளையாட்டு வரலாற்றில் டெகத்லன் போட்டியில் இவ்வாறானதொரு திறமையை வெளிப்படுத்திய முதலாவது மற்றும் ஒரேயொரு வீரராக அஸான் வரலாற்றில் இடம்பிடித்துவிட்டார். இலங்கையின் டெகத்லன் போட்டிகள் வரலாற்றில் தேசிய சம்பியனாக தெரிவாகிய முதல் தமிழ் பேசுகின்ற வீரரும் இவர் தான்.

இந்த வெற்றியை அடைவதற்கு மொஹமட் அஸான் கடந்து வந்த பாதையை சற்று திரும்பிப் பார்த்தால், 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற இராணுவ தொண்டர் படையணி மெய்வல்லுநர் போட்டியில் முதல் முறையாக களமிறங்கி வெள்ளிப் பதக்கம் வென்றார். டெகத்லன் போட்டியில் அஸான் வென்ற முதல் பதக்கம் இதுவாகும்.

தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர், பாதுகாப்பு சேவைகள் மெய்வல்லுநர் போட்டித் தொடர் மற்றும் இராணுவ மெய்வல்லுநர் தொடர்களில் பங்குகொண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்ற அவர், இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் அறிவிக்கப்பட்ட தேசிய அணியில் முதல் முறையாக இடம்பிடித்து அசத்தினார்.

2019ஆம் ஆண்டு உபாதையினால் பாதிக்கப்பட்ட அஸானுக்கு தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்க முடியாமல் போனது. எனினும், உபாதையிலிருந்து பூரண குணமடைந்து ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் தேசிய மட்டப் போட்டிகளில் அவர் களமிறங்கினார். இதில் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மெய்வல்லுநர் சம்பியளன்ஷிப்பில் வெண்கலப் பதக்கம் வென்ற அவர், அதே ஆண்டு நடைபெற்ற இராணுவ மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

டெகத்லன் போட்டியில் தொடர்ச்சியாக வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்று வந்த அஸான், முதல் முறையாக 2021ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவ மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் தங்கப் பதக்கம் வென்று அனைவரது கவனத்தையும் பெற்றுக்கொண்டார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இராணுவ மெய்வல்லுநரில் பெற்றுக்கொண்ட வெற்றியை இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் தக்கவைத்துக் கொள்கின்ற வாய்ப்பு அஸானுக்கு கிட்டியது. அதுவும் டெகத்லன் போட்டிகளில் இலங்கையின் தேசிய சம்பியனாக வலம் வந்து கொண்டிருக்கின்ற அஜித் கருணாதிலகவை 2 போட்டி நிகழ்ச்சிகளில் வீழ்த்திய அவர், ஒட்டுமொத்தத்தில் 7 போட்டிகளில் முதலிடத்தைப் பிடித்து 7,000 புள்ளிகளைக் கடந்த ஒரு வரலாற்று சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்று சாதித்துள்ளார்.

திறமை இறைவன் தந்த பரிசு. ஆனால் கடின உழைப்பால் மட்டுமே வெற்றியடைய முடியும் என்பதை இன்று அஸான் நிரூபித்துக் காட்டியுள்ளார். அதேபோல, தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் மாத்திரம் தான் எப்போதும் வெற்றியைத் தரும் என்பதையும் அஸாம் உண்மைப்படுத்தியுள்ளார்.

அஸானின் திறமையை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்கு வகித்த அவரது பயிற்சியாளர்களையும் கட்டாயம் ஞாபகப்படுத்த வேண்டும். அவரது பாடசாலை காலத்தின் போது பயிற்சியாளராக அம்பாறை மாவட்ட மெய்வல்லுநர் பயிற்சியாளரான தாஜுதீன் செயல்பட்டிருந்ததுடன், தற்போதைய பயிற்சியாளராக ரோஹித பெர்னாண்டோ செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கொழும்பு தேசிய அருங்காட்சியகம்

19ஆம் நூற்றாண்டில், உலகில் பல நாடுகளில் தத்தமது பாரம்பரிய மரபுகளை மீட்டெடுத்து பாதுகாப்பதற்காக பல்வேறு அமைப்புகள் உருவாக்கின. அதுபோல ஐரோப்பிய காலனித்துவ எஜமான நாடுகளும் தமது கட்டுப்பாட்டுக்குள் இருந்த நாடுகளில் இருந்து அத்தகைய பாரம்பரியச் சின்னங்களையும், அடையாளங்களையும், தத்தமது நாடுகளுக்கு எடுத்துச் சென்று (கொள்ளையடித்துச் சென்றன என்றும் கூட சொல்லலாம்) தமக்குசொந்தமாக ஆக்கிக்கொண்டன. இத்தகைய பழங்கால,கலாசார கலைப்பொருட்ககளை நிரந்தர அருங்காட்சியங்களை அமைத்து அவற்றில் வைத்து காட்சிப்படுத்தத் தொடங்கினர். இதில் பிரித்தானியா முதன்மை வகித்தது. இவ்வாறு பிரித்தானியாவில் உள்ள ஓக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் அருங்காட்சியகம்1 683 இலும், 1793இல் பிரான்சிலும் நிரந்தர அருங்காட்சியகங்கள் உருவாகின.

ஆனால் அருங்காட்சியகம் என்கிற கருத்து இலங்கையில் நமக்குப் புதிதானதல்ல. கி.மு3ஆம் நூற்றாண்டுக்கு முன்பே இந்தநாட்டில் அருங்காட்சியகம் என்ற கருத்து பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகளை மகாவம்சம் முன்வைக்கிறது. சங்கமித்தவின் ஸ்ரீ மகா போதி விஜயத்தை நினைவு படுத்தும் விதமாக மரமும் கப்பலின் பாகங்களும் தேவநம்பியதிஸ்ஸ மன்னன் காலத்தில் காட்சிப்படுத்தப்பட்டதாக மகாவம்சம் கூறுகிறது.

ஆனால், நம் நாட்டில் நவீன அருங்காட்சியகக் கருத்தாக்கம் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தான் பரவியது. 1850களில், ரோயல் ஆசியடிக்சொசைட்டி (ராஜரீக ஆசிய கழகம்) பிரிட்டிஷ் ஆட்சியின் போது பல்வேறு ஐரோப்பிய அரசு ஊழியர்களால் கைப்பற்றப்பட்ட மதிப்புமிக்க கலைப் பொருட்களையும் பல்வேறு கலைச் சின்னங்களையும் சேகரித்து வைத்திருந்தது. இந்தக் கழகம் இலங்கையின் தேர்ந்த முதன்மை ஆய்வாளர்களையும் புத்திஜீவிகளையும் கொண்ட முக்கிய அமைப்பாக இயங்கி வந்தது. நாட்டின் சிவில் அதிகாரிகள், ஆட்சியாளர்கள் மட்டுமன்றி ஆளுனர் வரை இதில் அகங்கம் வகித்தார்கள்.

இந்த கழகம் சேகரித்து வைத்திருந்த தொல்பொருட்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக நிரந்தர அருங்காட்சியகத்தை நிறுவுமாறு அரசிடம் ரோயல் ஏசியாடிக்சொசைட்டி கோரிக்கை விடுத்த போதிலும், அதுசாத்தியமாகவில்லை.1872 இல் இலங்கையின் ஆளுநராகப் பதவியேற்ற வில்லியம் ஹென்றி கிரகரி (Sir William Henry Gregory), பழமைகளின் பெறுமதியை உணர்ந்தவர். அவர் ரோயல் ஆசியடிக்சொசைட்டியின் கோரிக்கையை போற்றினார். அதன்படி, செப்டம்பர் 25, 1873 அன்று ஆளுநர் கிரிகரியால் இதற்கான ஒரு பிரேரணை சட்ட மன்றத்தில் முன்வைக்கப்பட்டது, ஆனால் அது சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனால், அவர் விடுவதாயில்லை. ஆளுநரின் கடின உழைப்பாலும், தனிப்பட்ட அர்ப்பணிப்பாலும் இறுதியாக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அருங்காட்சியகம் கட்டுவதற்கான ஏழு ஏக்கர் பரப்பைக் கொண்ட இலவச நிலத்தை கவர்னர் தேர்ந்தெடுத்து அதை வடிவமைக்கும் பணியை பொதுப் பணித்துறையின் கட்டிடக் கலை மற்றும் கட்டிடக்கலை நிபுணரான ஜேம்ஸ் ஜி. ஸ்மித்தரிடம் (James G.Smither)இடம் ஒப்படைத்தார். இத்தாலிய கட்டடக்கலை பாரம்பரியத்தின் அடிப்படையில் அழகாக வடிவமைத்து முடித்தார் ஜேம்ஸ். அருங்காட்சியக கட்டிடத்தின் கட்டுமானம் 1873 இல் தொடங்கப்பட்டது. கட்டட நிமாணப் பணிகள் மரிக்கார் எஸ் பெரேராவிடம் ஒப்படைக்கப்பட்டன. எப்.வைன் (F.Vine)அப்பணியில் முக்கிய பாத்திரமாக மாறினார். அருங்காட்சியக் கட்டடம் கட்டும் பணி தொடங்கி அனைத்து பணிகளையும் கவர்னர் கிரகரி நேரில் பார்வையிட்டு வந்தார்.


அருங்காட்சியகம் அமைக்கப்படுவதற்காக பங்களிப்பு செய்த ஆங்கிலேய ஆளுநர் வில்லியம் ஹென்றி கிரிகஹி

இறுதியில் கொழும்பில் இலங்கையின் பிரதான அருங்காட்சியகம் 1877ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதியன்று பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது. கட்டிடத்தின் கட்டுமான செலவு அப்போது 119,993.93 ரூபாய் ஆகும். இந்த அருங்காட்சியகம் பொதுமக்களுக்கு திறக்கப்பட்ட போது, அதில்சுமார் 1,200 கலைப்பொருட்களும் இயற்கை அறிவியல் மாதிரிகளும் இருந்ததாக அறிய முடிகிறது. ஆ ளுநர் கிரகரியின் அர்ப்பணிப்பையும் ஆதரவையும் நினைவுபடுத்தும் அடையாளமாக அருங்காட்சியக வளாகத்தில் அவரது வெண்கலச்சிலை பின்னர் நிறுவப்பட்டது.

தேசிய அருங்காட்சியகத்தின் முதல் இயக்குனர் எமரால்ட் ஹேலி ஆவார். அவர் 1877 முதல் 1901 வரை அப்பதவியில் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து கலாநிதி ஆர்தர்விலீ (1902 1909), மற்றும் கலாநிதி ஜே. பியர்சன் (1910 1933), கலாநிதி மெல்பாஸ் (1933 1939) ஆகியோர் அப்பதவியை வகித்தனர். அப்பதவியை முதலில் வகித்த இலங்கையர்; கலாநிதி.பி. இ. பி. தெரணியகல (1939 1965). பியர்சன் இயக்குனராக பணியாற்றிய காலத்தில் அருங்காட்சியகத்தில் மேற்கொள்ளப்படுகிற ஆய்வுகளைத் தொகுத்து வெளியிடுவதற்காக ஸ்போலியா சிலோனிகா (Spolia Zeylanica)என்கிற ஆய்வுச் சஞ்சிகையை வெளியிட்டார்.

1942ஆம் ஆண்டு சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இல. 31 ஆம் ஆணை சட்டத்தின் சட்டத்தின் கீழ் கொழும்பு அருங்காட்சியகம் தேசிய அருங்காட்சியகமாக மாறியது. கண்டி, யாழ்ப்பாணம், இரத்தினபுரி ஆகிய இடங்களில் தேசிய அருங்காட்சியகங்கள் அதே கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டன. தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்களம் 1944 இல் நிறுவப்பட்டது. பிற்காலத்தில் அருகாட்சியகத்துக்கு மேலும் பல தொல்லியல் பொருட்கள் வந்தடைந்தன. அவற்றைப் பேணுவதற்கான இடப்பற்றாக் குறையால் 1907ஆம் ஆண்டு முதல், அக்கட்டிடத்தின் அசல் வடிவமைப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில், அருங்காட்சியக கட்டடம் அவ்வப்போது விரிவுபடுத்தப்பட்டு வந்தது. இயற்கை அறிவியல் மாதிரிகளின் எண்ணிக்கைவேகமாக அதிகரித்து வந்ததால், இயற்கை அறிவியல் அருங்காட்சியகத்தின் தேவையும் அதிகரித்து வந்தது. அதன்படி, அப்போதைய அருங்காட்சியக இயக்குநர் கலாநிதிபி. எச். டி. எச். டி சில்வா கொழும்பு அருங்காட்சியகம் அமைந்துள்ள இடத்தில் தேசிய இயற்கை வரலாற்று அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன் பணிமே 1972இல் தொடங்கியது. இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் செப்டம்பர் 26, 1986 அன்று பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது. அறிவியல், தொழில்நுட்ப அருங்காட்சியகம் அமைக்க 1977ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும், அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

தற்போது கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் 100,000க்கும் மேற்பட்ட கலைப் பொருட்கள் உள்ளன. அருங்காட்சியகத்தின் பிரதான நுழைவாயிலுக்குள் நுழைந்தும், வரலாற்றுச் சிறப்புமிக்க தோலுவில சமாதிசிலையைக் காணலாம். 1815 ஆம் ஆண்டு இலங்கை இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர் வின்ட்சர் மாளிகையில் வைக்கப்பட்டிருந்த கண்டி மன்னரின் அரச மகுடமும், சிம்மாசனமும், இன்னும் பிற கலைப்பொருட்களும் தற்போது கொழும்பு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு அருங்காட்சியக நூலகமும் அருங்காட்சியகத்தின் வழித்தடத்துடன் இணைத்துச் செல்லும் வரலாற்றைக் கொண்டுள்ளது. அருங்காட்சியக நூலகம் ஜனவரி 1, 1877 அன்று கொழும்பு அருங்காட்சியகம் திறக்கப்பட்ட அதே நாளில் திறக்கப்பட்டது. ரோயல் ஏசியாடிக் சொசைட்டி அப்போது சேகரித்து வைத்திருந்த அரிதான நூல்களும் அவ்வமைப்பின் வெளியீடுகளும் இங்கே பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் 1885க்குப் பின்னர் பிரசுரிக்கப்பட்ட சகல வெளியீடுகளும் இங்கே பேணப்பட்டு வருகின்றன. கி.மு.வுக்கு முற்பட்ட பல ஓலைச் சுவடிகளும், செப்பேடுகளும் கூட இங்கே உள்ளன. சுமார் 3500க்கும் அதிகமான ஓலைச்சுவடிகள் இங்கே உள்ளன. 1977 வரை இலங்கையில் வெளியான ஆறு லட்சத்துக்கும் அதிகமானநூல்கள், வெளியீடுகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என எல்லாம் இங்கே உள்ளன. அருங்காட்சியகத்தின் வெளிப்பக்கமாக வலதுபுற பின் மூலையில் இதன் வாசல் உள்ளது. பல ஆய்வாளர்கள் பயன்படுத்திவரும் முக்கிய நூலகமாக இது திகழ்கிறது. இடப் பற்றாக்குறையின் காரணமாக 1977 க்குப் பிந்திய வெளியீடுகள் சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள தேசிய நூலகதில் பேணப்பட்டு வருகின்றன.


கொழும்பு அருங்காட்சியகம்
கொழும்பு தேசிய அருங்காட்சியகம்

மிக அரிதான பழைய நூலகங்களைக் கொண்ட இந்த நூலகம் ஆசியாவின் பழமையான நூலகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பிரபல தொல்லியல் ஆய்வாளர் எச். சி. பி. பெல், டபிள்யூ.ஏ, த.சில்வா, சொலமன் டயஸ் பண்டாரநாயக்க (எஸ். டபிள்யூ ஆர். டீ பண்டார நாயக்கவின் தந்தை) ஆகியோரின் புத்தக சேகரிப்புகளும் இன்னும் பல பிரபல ஆய்வாளர்களின்/ அறிஞர்களின் தனிப்பட்ட சேகரிப்புகளும், தொகுப்புகளும் அருங்காட்சியக நூலகத்திற்கு வழங்கப்பட்டு அவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன.


இரண்டாவது உலகப் போர் காலத்தில் அருங்காட்சியகம் ஜப்பானியரின் தாக்குதலுக்கு உள்ளாகுமானால் நாட்டின் முக்கியமான வரலாற்று அடையாளங்களை இழந்துவிடக்கூடும் என்கிற பீதியில் இங்கிருந்த தொல்லியல் பொருட்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு வேறொரு இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. போர் முடிந்தததுமே மீண்டும் அவை கொண்டு வரப்பட்டன. இதனால் சில பொருட்கள் சேதமுற்றதாகவும் கூறப்படுகிறது.

புறக்கோட்டையில் பிரின்ஸ் வீதியில் உள்ளமிகப் பழமையான டச்சு கட்டடத்தில் உள்ள அருங்காட்சியகமும் ஒரு வரலாற்று கட்டிடமாகும். சன நெருக்கடிமிக்க சந்தைப் பகுதியில் பலரதும் கவனத்தை ஈர்க்காதபடி அது இருந்தாலும், அது மிகவும் முக்கியமான வரலாற்று நினைவுச் சின்னமாகக் கொள்ளலாம். அதிர்ஷ்டவசமாக அரசு இன்றும் அதை அருங்காட்சியகங்களில் ஒன்றாக கவனமாகப் பேணி வருகிறது. நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் 1981 இல் புதுப்பிக்கப்பட்ட இக்கட்டடம் பின்னர் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது.

இந்தக் கட்டடம் 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இலங்கையின் அப்போதைய டச்சுகவர்னர் தோமஸ்டிவான்ரீ (Thomas De Van Rhee 1693) இங்கே வசித்துவந்தார், பின்னர் அதை கிழக்கிந்திய கம்பெனிக்கு (VOC) விற்றார். VOC அக்கட்டடத்தை தேவாலயமாகவும் அனாதை இல்லமாகவும் பராமரித்து வந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இந்த டச்சு ஆளுநர் இல்லம் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

அதாவது, இராணுவ மருத்துவமனை, ஆயுதக்கிடங்கு, பொலிஸ் பயிற்சிமையம், தபால் அலுவலகம் என்பன இங்கே இயங்கின. டச்சு மரச்சாமான்கள், பல்வேறு மர வேலைப்பாடுகளுடன் கூடிய தளபாடங்களும் உணவுப் பாத்திரங்கள் உள்ளிட்ட பல முக்கியமான கலைப்பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கட்டடம் அமைந்துள்ள உள் பகுதியில் பழமையான கிணறு ஒன்று இன்றும் உள்ளதை காணலாம்.

கொழும்புக்கு பாடசாலை சுற்றுப் பிரயாணங்களை ஒழுங்கு செய்யும்போது பெரும்பாலும் மாணவர்களை கொழும்பு தேசிய அருங்காட்சியகத்துக்கும் அழைத்து வருவது வழக்கம். நாளாந்தம் மாணவர்களும், உல்லாசனப் பிரயாணிகளும் ஏராளமாக வந்துபோகும் இடம் இது. 145 ஆண்டுகளையும் கடந்து பழமைபேணி காத்த கம்பீரத்துடன் நிற்கிறது கொழும்பு அருங்காட்சியகம்.




## மேஷம்

ராசிக் கட்டங்களில் அமர்ந்திருக்கும் கிரகங்கள் அத்தனையும் யோசிக்காமல் உங்களுக்கு நன்மையை செய்யப் போகின்றன.உங்கள் ராசிநாதன் செவ்வாய் 11ல் அமர்ந்திருக்கிறார். எதைத் தொட்டாலும் துலங்கும். வீடு மனைகள் வாங்க பணத்தை கொடுப்பார். குரு மங்கள யோகத்தோடும் அமர்ந்திருக்கின்ற குரு பகவானும் உங்களுக்கு தேவையானது எல்லாம் தவறாமல் செய்வார். மங்கல காரியங்கள் நடக்க மனப்பூர்வமாக ஆசி வழங்குவார். பத்தாம் இடத்து சனி தொழிலை கெட்டியாக பிடித்துக் கொள்வார். வியாபாரம் மிகச் சிறப்பாக நடக்கும். 12ஆம் இடத்தில் உள்ள சூரியன் தான் சற்று பாதகத்தை தருவார். மனதுக்கும் சூடு ஆகாது உடம்புக்கும் சூடு ஆகாது. கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள் லாபத்தை தருவார்.

## ரிஷபம்

பத்தாம் இடத்தில் அமர்ந்திருக்கும் ராசிநாதன் எக்குத்தப்பான பலன்களை அள்ளித் தரப் போகிறார். வரன் தள்ளிப் போனவர்களுக்கு தரமான இடத்தில் திருமணம் அமையும். பொன் பொருள் சேர்க்கை குறைவிருக்காது. நல்ல இடங்களில் நகர்ந்து செல்லுகின்ற சந்திரபகவான் உங்களுக்கு நன்மையை அள்ளித் தரப் போகிறார். இரண்டுக்குரிய புதன் அறிவுத் திறமையால் காரியத்தில் வெற்றி பெற வைப்பார். 7 1/2 குரிய மங்களன் தான் சற்று மங்கிப் போய் இருக்கிறார். பாதுகாப்பாக இருப்பார். பாக்கிய ஸ்தானத்தில் இருக்கும் சனிபகவான் தந்தையாருக்கு மருத்துவச் செலவு செய்ய வைப்பார். அலைச்சலை அதிகப்படுத்தி சுகத்தை குறைத்துக் கொடுப்பார்.

## மிதுனம்

கிரகங்களின் தளபதி சூரியன் பத்தில் வலுவாக அமர்ந்திருக்கிறார். புதனும் சேர்ந்திருக்கிறார். அரசாங்க வேலைகளுக்கான தேர்வுகள் எழுதுங்கள். அதற்குரிய பலனை கண்டிப்பாக சூரியனும் புதனும் தருவார்கள். சோகமாக நடந்த தொழிலை லாபமாக மாற்றி உங்களை குஷி படுத்துவார்கள். சந்திர பகவானும் உங்களுக்கு சாதகமாக பயணிக்கிறார். வியாபாரம் வெற்றிகரமாக நடக்கும். போட்டி பந்தயங்கள் வெற்றி தரும். சூதாட்டங்களில் ஈடுபட வேண்டாம். ஓடிப் போனவனுக்கு ஒன்பதில் குரு என்ற பழமொழி உண்டு. வெளிநாட்டுப் பயணங்கள் வெற்றிகரமாக அமையும். நண்பர்களிடம் கேட்டது கிடைக்கும். உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வீடு மனைகளில் முதலீடு பண்ண செவ்வாய் உதவி செய்வார். அதன் மூலம் நல்ல லாபம் கிடைக்கும்.

## கடகம்

வளர்ச்சிகளை சீராக அள்ளித் தருகின்ற சந்திரனை அதிபதியாக கொண்ட கடக ராசி அன்பர்களே…

கிரகங்களின் நகர்வுகள் உங்களுக்கு ஏற்ற தாழ்வுகளை தந்தாலும் இந்த வாரத்தில் சிறப்பான பலன்களையும் காணப்போகிறீர்கள். பெற்ற தாயே பிள்ளையை அடிப்பதைப் போல் ராசியின் அதிபதியே சின்னச்சின்ன கோளாறுகளை கொடுத்தாலும் மற்ற கிரகங்கள் அரவணைத்துச் செல்லும்.தகப்பனார் சொத்தில் வில்லங்கம் ஏற்பட்டு அதற்கான வழக்குகள் நீதிமன்றத்தில் நிற்கும். 9ஆம் இடத்து சூரியன் உங்களுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்த முயற்சி செய்வார். வம்பு வழக்குகள் இருந்து எட்டி நில்லுங்கள். எதிர்பாராத உதவிகள் மூலம் வியாபாரத்தில் வெற்றி பெறுவீர்கள். பணிவாக நடந்து பண வரவை பெருக்குங்கள். எட்டாம் இடத்தில் இருக்கும் குருவும் உங்களுக்கு சாதகமாக இல்லை.

## சிம்மம்

எட்டாம் இடத்தில் இருக்கும் சூரியன் ஏற்ற இறக்கமான பலன்களையே கொடுப்பார். கடும் எதிர்ப்புகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். பணம் கொடுக்கல் வாங்கல் எழுத்து மூலமாக நடக்கட்டும். வளர்பிறை சந்திரன் உங்கள் வாட்டத்தை போக்குவார். விருந்து நிகழ்ச்சிகளில் விரும்பி கலந்து கொள்வீர்கள்.செல்லப் பிராணிகள் வளர்ப்பதில் நம் கவனத்தை செலுத்துவீர்கள். களத்திர ஸ்தானத்தில் நிற்கும் செவ்வாய் கலகங்களை உண்டு பண்ணுவார். கணவன் மனைவி உறவில் கசப்புகள் தோன்றலாம். காரகன் காரகம் ஏறிடில் காரக பாவ நாஸ்தி. திருமணப் பேச்சுக்கள் தடைப்படும். அல்லது தள்ளிப்போகும்.குருவின் பார்வை உங்கள் ராசியில் படுவதாலும் கேந்திரத்தில் இருப்பதாலும் தொழில் துறைகளில் நல்ல லாபம் கிடைக்கும்.

## கன்னி

ஏழாமிடத்தில் ஏற்றமுடன் காணப்படும் சூரியன் வெற்றிக்கு மேல் வெற்றி தருவார். அரசாங்க வேலைகள் அனுகூலமாக நடக்கும். அரசியல்வாதிகள் பலத்தைப் பெருக்கிக் கொள்வார்கள். ஜென்ம ராசியில் சந்திரன் வரும்போது சிறுசிறு பிரச்சினைகளை உண்டு பண்ணுவார். அதே நேரத்தில் வியாபாரத்திற்கு உறுதுணையாக இருப்பார். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உறவினர்களின் வருகை சந்தோசத்தை கொடுக்கும். ஆறாமிடத்து செவ்வாய் தொழிலை நேர்த்தியாக நடத்துவார். வியாபாரிகளுக்கு இந்த வாரம் கொண்டாட்டம். எதிர்ப்புகள் இருந்த இடம் தெரியாமல் போகும். ராசி அதிபதி புதன் நீச்சமாக இருந்தாலும் கெடுபலன்களை தரமாட்டார். மறுநாள் இடம் மாறுகிறார்.புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். கொடுக்கல் வாங்கல் சரளமாக இருக்கும்.

## துலாம்

தர்ம அதர்மங்களுக்கு ஏற்ப பலன்தரும் சுக்கிரனை அதிபதியாகக் கொண்ட துலாம் ராசி அன்பர்களே…

ஆறாமிடத்து சூரியன் உங்களுக்கு அற்புதமான பலன்களை கொடுப்பார். அலைச்சல் மிகுதியாக இருந்தாலும் அனுகூலமும் அதிகமாகும். சந்திரனின் நகர்வுகள் நல்ல பலனைத் தரும். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருக்கும் செவ்வாய் புதிய வாகனங்கள் வாங்க வைப்பார். தடைகள் தாண்டி வெற்றி பெறுவீர்கள். 5 இல் இருக்கும் சுக்கிரனால் தொழில் அமோகமாக நடக்கும் பங்கு பரிவர்த்தனை சிறப்பாக இருக்கும். கணினித்துறையில் கணிசமான லாபம் 4ஆம் இடத்து சனியால் இரும்பு, உணவு தொழில் சிறப்பாக நடைபெறும்.

## விருச்சிகம்

கேந்திராதிபதியான சூரியன் கோணத்தில் அமர்ந்து உங்களுக்கு அற்புதமான பலன்களை அள்ளித் தரப் போகிறார். அரசாங்க உதவி கிட்டும். அரசு வேலையில் இருப்பவர்கள் அதிக பலன்களைப் பெறுவார்கள்.சந்திரனின் பயணங்கள் ஏற்ற இறக்கத்தை தரும். வியாபாரம் நல்ல முறையில் நடக்கும் உரிய லாபம் கிடைக்கும். சுகஸ்தானத்தில் செவ்வாய். வியாபாரத்தை அமோகமாக நடத்துவார். கடல் கடந்து செல்லும் வாய்ப்பு உருவாகும். ஐந்தாம் இடத்தில் இருக்கும் புதனால் தாய்மாமன் உறவில் விரிசல் ஏற்படும். கேந்திரத்தில் இருக்கும் குருவால் தொழில் மேன்மையடையும். புதிய தொழில் தொடங்கலாம். வியாபாரம் அமோகமாக நடக்கும். நாலாம் இடத்தில் சுக்கிரன். மண வாழ்க்கைக்கு வழிவகுக்கும். தடைபட்ட திருமணம் நடக்கும்.

## தனுசு

வினைப்பயனை அறுக்கின்ற வியாழ பகவானை அதிபதியாக கொண்ட தனுசு ராசி அன்பர்களே…

9 க்குரிய சூரியன் நாலாம் இடத்தில் அமர்ந்து இருக்கிறார். தூரதேச பயணங்கள் அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும். மனைவி மக்கள் மகிழ்ச்சிகரமாக இருப்பார்கள். உஷ்ணம் சம்பந்தமான நோய்கள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.சந்திர பகவானின் சஞ்சாரம் அவ்வளவு சாதகமாக இல்லை. மூன்றாம் இடத்தில் செவ்வாய். ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத வகையில் சகோதரர் மூலம் உதவி கிடைக்கும். கவிழ்க்க நினைத்த விரோதிகள் கவிழ்ந்து போவார்கள். நான்காம் வீட்டில் இருக்கும் புதன் தன தான்ய விருத்தி களை ஏற்படுத்துவார். தாய்வழிச் சொத்து வந்து சேரும்.

## மகரம்

வியூகங்கள் மூலம் வெற்றிகளை காணும் மந்தனின் ஆதிக்கம் கொண்ட மகர ராசி அன்பர்களே….

மனதிற்கு இதமான செய்திகள் வந்து சேரும். எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும். நண்பர்களின் உதவி உண்டு. சந்திர பகவானின் சஞ்சாரம் வாரக்கடைசியில் வலுவிழந்து காணப்படுகிறது. பலன் சற்று மட்டுப்படும். இரண்டாமிடத்தில் செவ்வாய். எதிரிகளிடம் மோதல், போட்டிப் பந்தயங்களின் சறுக்கல் போன்றவை ஏற்படும். விபத்துக்கள் நேராமல் கவனமுடன் இருங்கள்.மூன்றாம் இடத்து புதன் செலவுகளை அதிகரிப்பார். அடுத்த நாள் சரி செய்வார். மனைவி மக்கள் மூலம் மகிழ்ச்சி.வாக்கு ஸ்தானத்தில் குரு. தொழிலில் வெற்றி. வியாபாரத்தில் விருத்தி. கணவன் மனைவி உறவு மேம்படும்.

## கும்பம்

சாணக்கியத்தனத்தால் சாதனை புரியும் சனிபகவானை அதிபதியாகக் கொண்ட கும்ப ராசி அன்பர்களே…

இரண்டாம் இடத்தில் இருக்கும் சூரியன் கொஞ்சம் கெடு பலன்களைத் தருவார். சொன்ன சொல் தவறக் கூடாது. பணம் நகைகள் பத்திரம். சந்திரனின் இட மாற்றம் வியாபாரத்திற்கு உறுதுணையாக இருக்கும். நினைத்த காரியங்களை நடத்தி வைப்பார். செவ்வாய் ஒன்றாம் இடத்தில். அரசாங்க பகை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காரியத் தடை உண்டாகும். புதன் 2,3 ஆம் இடத்தில் பெண்களால் பணவிரயம். பெற்றோர்களுக்கு மருத்துவச் செலவு. நண்பர்களால் பொருளுதவி. ஜென்ம குரு உங்களுக்கு சாதகமாக இல்லை. செய் தொழில் மாற்றம் உண்டாகும். வீண்கவலையும் அலைச்சலும் ஏற்படும். ஆனால் ஒன்றாம் இடத்தில் இருக்கும் சுக்கிரன் இதை ஈடு கட்டுவார்.

## மீனம்

பார்வையால் பலன்களை அள்ளித்தரும் குரு பகவானை அதிபதியாக கொண்ட மீனராசி அன்பர்களே….

சூரியன் ஜென்ம ராசியில் இருக்கிறார். அனாவசியமான கோபம் கூடாது. நல்ல மனிதர்களின் பகை வேண்டாம். சந்திர பகவானின் நகர்வுகள் உங்களுக்கு நல்ல பலனைத் தரப்போகிறது. வியாபாரம் மேம்படும். வேலைவாய்ப்புகள் பெருகும். சந்தோஷம் நிலவும்.செவ்வாய் பன்னிரெண்டாம் இடத்தில். இது அவ்வளவு நல்லதல்ல.

கணவன் மனைவி உறவில் பாதிப்பு. கவலைகளை ஒதுக்கி வையுங்கள். 2,3 இல் புதன். பெண்கள் வகையில் எச்சரிக்கை தேவை. மேல் அதிகாரிகளின் ஆதரவு குறைவு. தேவையில்லாத பணச்செலவு உண்டாகும். உங்கள் ராசிநாதன் பன்னிரண்டாம் இடத்தில்மங்கல காரியங்களுக்கு செலவு செய்வீர்கள் வரவை விட செலவு அதிகம்.

# 'இறை சோதனை நன்மைக்கே'

'கூய் காய்.... ம் ம் ஆ ஆ!' இப்படியாக கூக்குரலில் அவலச் சத்தம் கேட்டு அடிவளவில் புல்லு பிடுங்கிக் கொண்டிருந்த சகாதேவன் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தான். தன் மகன் திரவியம் தான் கூப்பாடு போடுகிறான் என்று உடனடியாகவே முன்னறையைத் திறந்து பார்த்தான். மகன் திரவியம் நாய்க்குக் கட்டும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அதை இழுத்து அறுக்கும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது புரிந்தது. அவன் குரலையும் எழுப்பி அபிநயம் பிடித்து அவலப்பட்டு ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான் அந்த வாய் பேச முடியாத ஊமை! சிறுபராயத்தில் இருந்தே வளர்த்துவிட்ட அந்தத் தகப்பனுக்கு மகனின் ஒவ்வொரு அசைவுக்கும் அர்த்தம் தெரியும். மலம் சலம் வெளியேற்ற இயற்கைத் தேவையை நிறைவேற்ற அவதிப்படுகிறான், என்பதை உடனடியாகவே புரிந்து கொண்டு சங்கிலி கட்டை அவிழ்த்து விட்டு தொங்கலை தான் பிடித்துக் கொண்டார். திரவியம் கூய் கூய் என்று கூப்பாடு சத்தம் போட்டபடி முன்னே பாய்ந்து பாய்ந்து நடந்து கொண்டிருந்தான். தகப்பன் சகாதேவன் சங்கிலியை பிடித்தபடி அவனோடு இழுபட்டுக் கொண்டு போனார்.

திரவியம் மலசல கூடத்துள் உள்ளிட்டான். இவர் வெளியே சங்கிலியோடு காவலிருந்தார். அவன் மலம் கழிக்கும் போதும் கூப்பாடும் கூக்குரலும் ஓய்ந்தபாடில்லை. வெளியே விடுமாறு சங்கிலியை இழுத்து சைகை காட்டினார். அவன் வெளியே வந்து அடைப்புக்குள் போனான். இவர் கழுவி விட்டு சுத்தப்படுத்தி விட்டார். பிறகு கால் சங்கிலியோடு இழுபட்டு கிணற்றடிப்பக்கம் போயினர் இருவரும். அங்கே தந்தை மகற்காற்றும் உதவியென்று.... பல்லுத்தீட்டி முகம் கழுவி தண்ணி இறைத்து குளிப்பாட்டி மாற்றுடை உடுத்தி இழுத்துக்கொண்டு வந்து அதே அறையில் கட்டிப் போட்டார்..... அதன் பிறகு அவனுக்காக தான் தயாரித்து வைத்திருந்த சாப்பாட்டுத் தட்டை நீட்டுவார். அவன் ஏதோவெல்லாம் அபிநயம் பிடிப்பான். இவையெல்லாம் அவருக்கு சர்வ சாதாரணமானவைதான். பழக்கப்பட்டுப் போனவை தான்...... அவர் சாப்பாட்டை தன் கையால் கிள்ளிக் கிள்ளி ஊட்டிக்கொண்டே இருப்பார். அவன் திருப்தி தெரிவித்ததும் அவன் முகம் தடவி தோள் தடவி படுக்கையில் கிடத்தி விட்டு சங்கிலியால் பழையபடி பிணைத்து விட்டு அறைக் கதவையும் சாத்தி விட்டு வெளியேறினார், தன் மற்றக் கருமங்களை கவனிப்பதற்கு.

சகாதேவன் கதையே பரிதாபமானது தான். எந்தத் தந்தையும் அனுபவித்திருப்பாரோ என்பது கேள்விக்குறிதான்?..... இரண்டு ஆண்பிள்ளைகளை ஈன்றுவிட்டு தாயார் பரகதி அடைந்துவிட்டார். அப்போது மூத்தவனுக்கு ஏழுவயதிருக்கும். இளையவனுக்கு மூன்று வயதுதானிருக்கும். பிறவியிலேயே வாய் பேச முடியாத ஊமைப்பிள்ளை அவன். பிள்ளையின் மழலை மொழியைக் கூட கேட்க முடியாத பாவியாக போய்ச் சேர்ந்துவிட்டாள், அந்தத் துர்ப்பாக்கியம் பிடித்த தாய்!

சகாதேவன் நகர்ப்பகுதியில் ஒரு மூலையில் சிகையலங்கரிப்பு நிலையம் வைத்து தொழில் புரிந்து வந்தவர். மூலையில் சின்னதாக அந்த நிலையம் (சலூன்) அமைந்திருந்தாலும் நல்லாக தொழில் நடந்து வந்தது. அழகுபடுத்தும் அந்த கலையில் மிக திறமைசாலி அவர். வருபவரை எல்லாம் முகமலர்ச்சியோடு வரவேற்று இனிமையாக கதை பேசி நேரம் போவதே தெரியாமல் இருக்க வைத்து விடுவார். அவர் தொழில் திறமை பலரை காக்க வைத்துவிடும். போனாலும் மீண்டும் தேடி வரவைக்கும்!....... எப்படியோ தனிய நின்று உழைத்து குடும்பத்தையும் நல்லபடியாக பார்த்து, சொந்தமாக காணியும் வேண்டி ஓரளவு வசதியாக வீடு வாசலையும் கட்டி ஒரு குறையும் இல்லாமல் நான்கு சீவன்களும் ஓரளவு மகிழ்வுடனே வாழ்ந்தன. இளையவன் திரவியம் வாய் பேசமுடியாது என்பதைத் தவிர எந்தக் குறையும் இல்லாமலேயே வாழ்ந்தனர்.

அப்படி இருக்கும் போதுதான் இல்லத்தரசி திடீரென மாரடைப்பால் மாண்டு போனாள். இவரே தாயும் தந்தையும் ஆக வேண்டியவரானார். இதனால் கடை திறந்து தொழில் நடத்துவது என்பது சிரம சாத்தியமான ஒன்றாகிவிட்டது. ஆகையால் வீட்டுவளவின் முன்னால் தெருவைப் பார்த்தவாறு ஒரு கொட்டிலைப் போட்டு தன் தொழிலை நடத்தி வந்தார். அப்பகுதியில் குடிசன நெருக்கம் கொஞ்சம் அதிகம் தான். சின்னஞ்சிறுகள் வயோதிபர் வருத்தக்காரர் என்று பிரதான வீதிக்கோ நகர்ப்புறத்துக்கு கொண்டு போவதில் மிகவும் சிரமும் செலவும் உண்டு. இவர் அயலிலே இக்கைங்கரியத்தைச் செய்வது கன பேருக்கு வசதியாக போய்விட்டது...... ஆகையால் முன்னர் போல் இல்லாவிட்டாலும் வருமானம் குடும்ப சீவியத்துக்கு போதுமென்று ஆகிவிட்டது. அதிகாலையில் துயில் எழுவார். முதல் வேலையாக பக்கத்தில் இருக்கும் மாதா கோவிலுக்குப் போய் சரியான நேரம் பார்த்து மணி அடித்து சுற்றுவட்டாரத்தையே துயில் எழுப்பி விடுவார். இல்லை இறை சிந்தனையை ஏற்படுத்தி விடுவார். பிறகு கோவில் சுற்று வட்டத்தை எல்லாம் சுத்தப்படுத்தி துப்பரவுப் பணி செய்வதில் ஈடுபடுவார். ... அதன் பிறகு வீடு வந்தால் பிள்ளைகள் இருவரும் இன்னும் கண் மலராமலே ஆழ்துயிலில் கிடப்பர். இவர் காலைச் சாப்பாட்டுக்கான ஆயத்தங்களைச் செய்வார். புட்டோ இடியப்பமோ அவிப்பார். சம்பலோ சொதியோ பருப்புக்கறியோ ஆக்கிப் படைத்து பிள்ளைகள் இருவரையும் மனம் குளிர சாப்பிடச் செய்தார். மூத்தவன் தன் பாட்டுக்கு எல்லாம் செய்வான், ஏன் தகப்பனுக்கு ஒத்திசைவாகவும் அதையிதை செய்து கொடுப்பான். தன் காரியங்களையும் தானே பார்த்துக் கொள்வான். அவனால் பிரச்சினை ஒன்றுமில்லை.

இளையவன் திரவியம் சிறுப்பத்தில் வாய் பேச முடியாத ஒரு இக்கட்டே தவிர, அவனும் வீட்டிலுள்ளோர்க்கு ஒரு பிரச்சினையே இல்லை. அவன் அபிநயப் பாஷையை சர்வ சாதரணமாக எல்லோரும் புரிந்து அவனுக்கேற்ற மாதிரி நடந்தே கொள்வர். குழந்தையாய் இருக்கும் போது கொஞ்சம் சிரமப்பட்டார் தான் என்றாலும் வளர வளர தன் காரியங்களை தானே நிறைவேற்றிவரானான். பக்கத்தில் ஊனமுற்றோர் (காதுகேளாதோர்) பாடசாலை அமைந்திருப்பது இவர்களுக்கு பேரதிர்ஷ்டமாகிவிட்டது. சகாதேவன் தன் வாய் பேச முடியாத மகனை அங்கே சேர்த்தான். அப்போதெல்லாம் தன் தேவைகளை எல்லாம் தானே நிறைவேற்றிக் கொள்ளும் சுயபுத்தி உள்ளவனாகத்தான் இருந்தான். எப்படியோ அங்கு போனதால் தமிழில் எழுத வாசித்து புரிந்து கொள்ளும் படியும் ஆகிவிட்டான்.

அதுமட்டுமா, தகப்பனின் அலங்கரிப்பு கொட்டகையில் கூடமாட ஒத்தாசையாக நின்று சிகை அலங்கரிப்புக் கலையை கற்று தேர்ந்து விட்டான். என்ன வருகிறவர்கள் என்ன சொல்கிறார்கள், எப்படி தொழில் செய்ய வேண்டும் என்பதை தகப்பன் மொழிபெயர்ப்பாளராய் இருந்து விளக்க வேண்டும். அவ்வளவு தான். மற்றப்படி நல்ல கைத்திறமை சுறுசுறுப்பு. தகப்பனை விட கைதேர்ந்த தொழிலாளி.

பக்கத்தில் இருக்கும் ஒரு பெரியவர் இவர்களின் கடைக்கும் வீட்டுக்குமாக வந்து இங்கிதமாக பழகுவார். அவர் ஒரு நாள் சகாதேவனிடம் சொன்னார். 'எனக்கும் வாய் பேச ஏலாத ஊமை பிறவிகளில் எத்தனையோ பேரைத் தெரியும். ஆனா உம்மிட மகன் நல்ல புத்தி சித்தமாக பழகுறான். ஆக்களுக்கேற்ற மாதிரி மரியாத வைச்சி நடக்கிறான், எப்போதும் சிரித்த முகம், அவன்பால் எம்மை ஈர்க்கச் செய்கிறது. என்ன அவன் என்ன சொல்கிறான் என்பதை எம்மால் முழுமையாக புரிந்து கொள்ளமுடியாததே பெரும் குறை'

மூத்தவன் நல்ல புத்திசித்தமாகவே வளர்ந்து வந்தான்.நல்லாக படித்தும் வந்தான். நல்லொழுக்கமாக இருந்து தகப்பனுக்கும் தம்பிக்கும் உதவியாகவே இருந்தும் வந்தான். அப்பாவுக்கு பாரமாக சிரமமாக இருக்கக் கூடாது என்று நினைத்தானோ என்னவோ, படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு மேசன்மாரோடு கூலிக்காரனாக இணைந்து கட்டிடக் கலையில் நிபுணனாகிவிட்டான். 'கொன்றாக்ற்' எடுத்து வேலை செய்து நல்ல முன்னேற்றமடைந்தும் வந்தான். இதனால், நல்ல இடத்தில் இருந்து கலியாணம் கேட்டு வந்தார்கள். திருமணமும் இனிதே நிறைவேறி விட்டது. இரண்டு பிள்ளைகளுக்கும் தந்தையாகிவிட்டான். வீட்டையும் கொஞ்சம் வசதியாக கட்டி முடித்திருந்தான். அப்பா தம்பி மனைவி மக்கள் என்று நல்லபடியாக வாழவே வழியும் செய்திருந்தான். ஏன் திரவியத்தின் ஊமை அபிநயப் பாஷையை புரிந்து நடக்க சின்னப் பிள்ளைகளும் கற்றுக் கொண்டுவிட்டனர் என்றுதான் சொல்ல வேண்டும். இல்லை இவரின் அபிநயம் குழந்தைகளுக்கு சுவாரஸ்ஸியம் என்றுதான் சொல்ல வேண்டும். இப்படியாக ஊனமுற்றவனோடு எல்லோரும் ஐக்கியமாக நிம்மதியாக வாழ்ந்தே வந்தனர்.

இப்படியாக வாழ்ந்து வரும் போதில்த் தான் அன்று அந்த அவலச்சம்பவம் நடந்தது. சகாதேவனுக்;கு இடைக்கிடை தொலைபேசி அழைப்பு வரும் முடி திருத்த வருமாறு ஈருருளியை உழக்கி அங்கு போய் தன் பணியை முடித்துக் கொண்டு படலையைத் திறந்தவர், அதிர்ந்துவிட்டார். மகன் திரவியம் தடியொன்றை ஏந்திக் கொண்டு மருமகளையும் பிள்ளைகளையும் படாத பாடுபடுத்திக் கொண்டிருந்தான். அவர்கள் கத்திக் குளறிக் கொண்டு பாதுகாப்புத் தேடி வீட்டைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தனர். இவன் பாவி கத்திக் குளறி கூக்குரலிட்டு அவர்களை கிலி கொள்ளச் செய்து கொண்டிருந்தான்..... இந்த எதிர்பாராத கோரவத்தாண்டத்தை அவர் வாழ்நாளில் கண்டதே இல்லை. ஆனால் இப்போது அதுதான் வீட்டுக்குள்ளேயே நடந்தேறுகிறது. எப்படியிருக்கும் அவருக்கு!

மிதிவண்டி எங்கு போனதோ தெரியாது. தள்ளி விழுத்திவிட்டு தன் மகனை இறுக்கிப்பிடித்துக் கொண்டார். அபினய பாஷையால் ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டார் அவன் அதற்குப் பதில் சொல்லும் நிலையில் அப்போது இல்லை. ஒரு தள்ளு தள்ளிவிட்டான். இவர் அலங்கமலங்க விழுந்து போனார்.

நல்லவேளை, என்றுமில்லாதவாறு இப்படியான அவலச்சத்தம் கூக்குரல் கேட்கிறதே என்று அயற்சனங்கள் அங்கு சூழ்ந்து கொண்டன. நிலைமையை சுலபமாகவே புரிந்து கொண்டுவிட்டனர். எல்லோரும் சேர்ந்து கட்டிப் பிடித்து மடக்கிப் போட்டனர். கயிறால் கட்டி விட்டனர். அவனை செயலிழந்தவனாக்கினர்.... பலரும் பலவிதமாக கதை பேசினர். 'வாய் பேச ஏலாது எண்டாலும் நல்ல திறமான பொடியானாத்தானே இருந்தவன்! இப்ப ஏன் இப்பிடி ஆச்சுது?'' பொடியனுக்கு பேய் புடிச்சிருக்கு! அடிவளவுக்க பெரிய புளிய மரமிருக்கு அதத் தறிக்காம வைச்சிருந்தவங்கள். இவன் பொடியன் அதுக்கீழ நெடுகப் போய் நிக்கிறவன்!

அதுதான் பொல்லாத பேய் தொத்தியிருக்கு' இப்படியாக பல கதைகள்...... சிலர் சகாதேவனுக்கு தங்களுக்குத் தெரிந்த நல்லாலோசனைகளையும் வழங்கினர். 'முத்துக்குமாரசாமி கோவிலுக்குப் பின்னால ஒரு ஐயர் இருக்கிறார். அவர் திறமா சாத்திரம் குறிப்பு பார்ப்பார். அவரிட்ட பிறந்த நாள் நட்சத்திரத்தைச் சொன்னா, நல்ல குறிப்புக்கள் சொல்வார். 'இங்கால மேற்கால ஏத்தம் ஏறி போனீங்க எண்டா பத்தக்காட்டுக்க சாமி ஆடி குறி சொல்லுறவன் இருக்கிறான். அவன்

**சூசை எட்வேர்ட் ...**

கலையாடி ஏன் இப்பிடி வந்தது எண்டு சரியாகச் சொல்லிப் போடுவான். 'ஏனப்பா அங்க இங்க அலையுறாய்? நம்ம தெருவுக்கு அடுத்த தெருவில் மை போட்டு பார்க்கிறவன் இருக்கிறான் சரியான மூலாதாரத்தச் சொல்லிப் போடுவான்.' இவ்வாறாக பல ஆலோசனைகள்.

சகாதேவன் ஒரு கிறிஸ்தவன் பக்கத்திலேயே தேவாலயம். அங்கு திருப்பணியும் செய்து போதகரின் வாழ்த்தைப் பெற்று வருபவர். தேவாலய பூசை புனக்காரம் ஒன்றும் தவறாது. பூசை முடிந்து சனம் வெளியேறினாலும் இவர் போகார். எல்லா திருச்சொருவங்களையும் கரங்களால் தழுவி மன்றாடி விட்டுத்தான் வருவார். அப்படிப்பட்டவர் மகன் எப்படியும் சுகம் பெற வேண்டும் என்ற ஆதங்கத்தில் குறி சொல்வார். பேயோட்டுவார் மை பார்ப்பார் என்று மகனையும் கூட்டிக் கொண்டு தான் சென்றார்.... எல்லாம் அந்தா வருகிறது, இந்தா காட்டுகிறது என்று ஆவலைத் தூண்டி அலைக்கழிய வைத்தனரே அல்லால், காசை செலவாக்கினரே அல்லால் கண்ட சுகம் ஒன்றும் இல்லை. நம்பிக்கையைப் பொறுத்தோ என்னவோ சிலருக்கு பலன் கிடைத்துத்தான் இருக்கிறது.

மூத்தவன் தகப்பனைப் பார்த்து பேசினான். 'ஏனப்பா அங்கேயும் இங்கேயுமாக வீணாக அலைந்து காசையும் செலவழிச்சுக் கொண்டிருக்கீங்க! திரவியத்தையும் கூட்டிக் கொண்டு வாங்கப்பா ஆசுப்பத்திரிக்கு போவம்' என்று கண்டிப்புடன் கூறினான். அவனே தம்பியையும் தகப்பனையும் அரசாங்க பொது வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்றான்... வைத்தியர்கள் கவனமாக பரிசோதித்தனர் அவனை. அவர்கள் சொன்ன முடிவு எதிர்பாராததொன்று. 'இவருக்கு உடலில் எந்தக் குறையும் இல்லை, நோயும் இல்லை, இவருக்கு இருப்பது மனநோய்' என்று சொன்னவர்கள் திரவியத்தை மனநோய் மனையில் சேர்த்துவிட்டனர்.

வாய் பேச இயலாத பிறவிக்கு பைத்தியமும் பிடித்து விட்டதா! சகாதேவனுக்கும் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. என்ன செய்வது எல்லாம் இறைவன் சோதனை தான் என்று ஆக வேண்டியதை கவனிக்கலானார். தன் வீட்டு தொழில் கருமங்களை அரைகுறையாக முடித்துக் கொண்டு அவசர அவசரமாக மகனைத் தேடி போவார். மனநோயாளர் பிரிவை கொஞ்சம் தள்ளித் தனித்தேதான் அமைத்துள்ளார்கள். அதன் காரணம் எல்லோருக்கும் புரியும். இவர் அவ்விடத்தை அணுகுமுன்னமே மனக்கிலேசமாகவே இருக்கும்.! கத்தல், குளறல் ஆர்ப்பரிப்பு, அடித்தல், விரட்டல் கட்டல் புலம்பல் என்று எத்தனையோ அவலக்காட்சிகளை கண்டு கொண்டே செல்வார்.

ஆரம்பத்தில் மகனின் கத்தல், கதறல் சகிக்கவொண்ணாததாகவே இருந்தது. நாலு நாளில் அடங்கி அமைதியாகிவிட்டான். அனேகமாக நித்திரையாகியே கிடப்பான். இந்நோயாளிகளுக்கு தூக்க மாத்திரை கொடுப்பதாக கேள்வி. ஒரு மாதமாக மனநோய் பிரிவில் வைத்து சுகமென்று அனுப்பி விட்டனர்.

மாதமொருமுறை காட்டி மருந்தெடுக்க வேண்டும். அதுவும் ஒழுங்காக நடந்தேறியே வந்தது. முன்னர் இருந்த உற்சாகம் சுறுசுறுப்பு சிரித்த முகம் எல்லாம் காணாமல் போய்விட்டது. தகப்பனுக்கு உதவியாக கடையிலே வேலை செய்தவன், இப்போ முன்னர் போல் செயல்படுகிறானில்லை. சோர்ந்து போய் இருப்பான். எங்கேயோ வெறித்தபடி பார்ப்பான். அபிநயம் பிடித்து முணுமுணுப்பான். கீசல் சத்தம் கேட்கும்.

இப்படியே நெடுகிலும் இருந்தால் பரவாயில்லையே இடைக்கிடை அட்டகாசக்காரனாய் ஆகிவிடுகிறானே! தடியெடுத்து கூக்குரலிட்டு மருமகள் பிள்ளைகளை கலைத்துக் கலைத்து விரட்டுகிறானே! அவர்கள் பாவம் பயந்தொடுங்கி அறைக்குள் கிடப்பர்... மூத்தவனுக்கு கொஞ்சம் மடக்கம். ஆவன தைரியசாலியும் கூட.


அவனை மடக்கி கட்டி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த விடுவான். ஆனால் அவன் வீட்டில் இல்லாத நேரம்?

மருமகள் பிரச்சினை எடுத்தாள். இவனை வெளியேற்ற வேண்டும், இல்லாவிட்டால் நான் வெளியேறுகிறேன் என்று, நியாயமானதும் தான். 'ஒரு பைத்தியகாரனை நடு வீட்டுக்குள் வைத்துக் கொண்டு ஒரு மணி நேரம் கூட நிம்மதியாய் சீவிக்க முடியாமல் போயிற்றே. என்பது அவள் ஆதங்கம். மூத்தவனுக்கு தன் மனையாளின் நிலைப்பாடு சரியென்றே பட்ட அவனுக்கு மேசன் தச்சு எல்லா வேலைகளும் தெரியும். அடி வளவில் ஒரு அறை, திண்ணை தாவரக் கொட்டிலில் சமையல் என்று கட்டிக் கொடுத்து அவர்களை புறம்பாக்கி விட்டான். அவன் நிலையில் யாரிருந்தாலும் அப்படியே செய்திருப்பர். தகப்பனுக்கும் இது சரியென்று பட்டாலும் மனதை நெருடிக் கொண்டே இருந்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 19



திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................
..............................
..............................
.................... ....................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 19**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :19

**இடமிருந்து வலம்**

(01) பேரொளி.
(05) ஒரு தமிழ் மாதம்.
(07) ஒன்றோடொன்று இணையாமல் தனித்திருப்பது. (திரும்பியுள்ளது)
(08) மன்மதன் மனைவி திரும்பிவிட்டாள்.
(09) ஒன்றை அடைந்துவிட வேண்டும் என்ற தீவிர விருப்பம் அல்லது விழைவு.
(11) ஜன்னல். (குழம்பியுள்ளது)
(12) எப்போதும்.
(13) ஒரு விஷ ஜந்து.
(14) பேரழிவு, சேதம். (திரும்பியுள்ளது)
(16) நிலம், வீடு முதலான பெறுமதிமிக்க உடமை.
(18) பிறந்தநாளிலிருந்து கணக்கிடப்படும் கால அளவு. (குழம்பியுள்ளது)
(20) வானத்து நட்சத்திரம் குழம்பிக் காணப்படுகிறது.
(23) தாய். ஒருவகை நோயையும் குறிக்கும்.
(24) நெற்றிப் பொட்டு.

**மேலிருந்து கீழ்**

(01) உள்நுழைவு.
(02) பெண்.
(03) தீய செயல்களுக்கான மறைமுகத் திட்டம்.
(04) மனம் குழம்பிவிட்டது.
(05) மட்டும் என்பதை இப்படியும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
(06) தரம்.
(10) மனிதாபிமான ரீதியிலான பரிவு. (குழம்பியுள்ளது)
(15) பேச்சாற்றல்.
(16) வார்த்தை.
(17) ஒரு கருமத்தை நிறைவேற்றுவதற்கான உதவி அல்லது ஆதரவு.
(19) இரண்டு.
(21) எஞ்சியிருப்பது.
(22) மகிழ்ச்சி. (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 18

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வெசாக் 04. வருமதி 08. குன்று
09. சுருட்டு 10. கறுப்பு 12. தடு
13. கயல் 16. தையல் 19. கமுகு
21. ஆவல் 23. சித்தி 24. வணிகம்
25. பனித்திரை 26. சாலை

**மேலிருந்து கீழ்**

01. வெறுப்பு 02. சான்று 03. குக்கல்
04. வடு 05. ருசு 06. மருதம்
07. திட்டு 11.புயல் 14. கதை
15. முத்திரை 17. வயல் 18. ஆசாரம்
19. கதிரை 20. குசினி 22. கவலை
24. பணி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 17

### பரிசு பெறுவோர்

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
| --- | --- | --- |
| **நி. வினோமதிவதனி,** இல. 54A, அத்தனகொல்ல வீதி, லுனுகலை. | **எஸ்.எச்.எம். ஜிப்ரி,** இல. 258/21, டாம் வீதி, கொழும்பு 12. | **ஏ.எல். அப்துல் ஜலீல்,** 191/3, மூர் வீதி, மன்னார். |

### பாராட்டு பெறுவோர்

**1. திருமதி. ரஞ்சினி சிவஞானம்,**
இல. 43. புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.

**2. எம்.எல்.எம். அஷ்வர்,**
இல. 60,
தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை,
மருதானை.

**3. திருமதி சித்தி சம்சுல் ஜன்,**
இல. 02, புதுப்பள்ளிவாசல் வீதி,
அக்கரைப்பற்று 18.

**4. டி.எஸ். மாக்ரெட்,**
இல. 37, கரவகெட்டிய,
பலாங்கொடை.

**5. எஸ். நாகராஜா,**
சாரதா வீதி,
காரைதீவு 02.

**6. எம்.ஏ. அத்தாஸ்,**
141/1,
குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

**7. எம். அப்லால் அஹமட்,**
337, மங்கெதர,
துல்ஹிரிய.

**8. ஆர். கீர்த்தனா,**
பனன்ன,
மித்தெனிய,
வரகாப்பொல.

★ ★ ★

# மங்கையர் முற்றம்

சுகந்தி



## ரோஸ் வோட்டர் டோனர்

ஒரு கப் ரோஜா இதழ்களை எடுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் அதே கப் அளவில் தண்ணீர் ஊற்றி ரோஜா இதழ்களை நன்கு கொதிக்க விடவும். 10 நிமிடம் கொதித்ததும், ரோஜாவின் நிறம் வெளிர்ந்து அதன் நிறங்கள் தண்ணீரில் கரைந்திருக்கும். இப்போது அடுப்பில் இருந்து இறக்கவும்.

சூடு தணிந்ததும் ஒரு போத்தலில் ஊற்றி முகத்திற்கு ஸ்பிரே செய்து பயன்படுத்தலாம்.



## பெண்களை பாதிக்கும் ஒற்றைத் தலைவலி

தலைவலியில், நமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது 'மைக்ரேன்' என அழைக்கப்படும் 'ஒற்றைத் தலைவலி'தான்.

ஒற்றைத் தலைவலி ஏற்படுவதற்கு ஹோர்மோன் பிரச்சினை அல்லது மூளையில் நரம்பி யல் செயல்பாடுகளில் ஏற்படும் அசாதாரண செயற்பாடுகளே முக்கிய காரணமாக இருக்கலாம் என்று நம்புகின்றனர்.

சிறிய செயற்பாடுகளைக் கூட செய்ய முடியாத அளவுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது இத் தலைவலி. சைனஸ், மனச்சோர்வு, அழுத்தம், மிக்ரேன் மற்றும் கிளஸ்டர் என தலைவலியில் பல வகை உள்ளது.

மேலும், தலைப் பகுதியில் வலிக்கும் இடத்தைப் பொறுத்தும் அதற்கான சிகிச்சை முறை மாறுபடும். இதை நரம்பியல் பிரச்சினை என்றும் குறிப்பிடுகிறார்கள். ஒற்றைத் தலைவலி குறித்த ஆய்வில் இதுவரை அதற்கு உறுதியான காரணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

உலக அளவில் பலரை பாதிக்கும் இரண்டாவது பெரிய உடல்நல பிரச்சினையாக 'ஒற்றைத் தலைவலி' இருப்பதாக பல்வேறு மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆண்களை விட, பெண்களையே ஒற்றைத் தலைவலி அதிகம் பாதிக்கிறது. இது குறித்த மருத்துவ ஆய்வுகளின் அடிப்படையில், அதிக ஈஸ்ட்ரோஜன் அளவுக்கும், குறைவான சோடியம் புரோட்டன் எக்ஸ்சேஞ்சர் அளவுக்கும் உள்ள தொடர்பே இந்த மாறுபாட்டுக்குக் காரணமாக இருக்கலாம் என கூறப்படுகிறது.

மேலும், 'பைபோலர் குறைபாடு' எனப்படும் இரு துருவ மனச்சோர்வு, மனஅழுத்தம், தீவிர யோசனை, அதீத உணர்ச்சி வெளிப்பாடு, பருவநிலை மாற்றம், சுவாசத் தடை, தொடர்ந்து ஒரு வேளை உணவைத் தவிர்த்தல், அதிக அளவு டீ, காபி குடித்தல், நீண்ட நேரம் வெப்பச் சூழலில் இருப்பது, உடல் நீர்வறட்சி குறைவது, அதீத இரைச்சல், தொடர் உடல் சோர்வு, அழற்சியை ஏற்படுத்தும் வாசனையை நுகருதல், அதீத புழுக்கம், சீரற்ற உணவு முறை, மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலி போன்ற வாழ்வியல் காரணங்களாலும் ஒற்றைத் தலைவலி ஏற்படலாம்.

கடுமையான தலைவலி, ஒளியால் ஏற்படும் உணர்திறன், காதில் இரைச்சல் மற்றும் துர்நாற்றம், குமட்டல், வாந்தி, வயிற்று வலி போன்ற வயிற்று கோளாறுகள், பசியின்மை, அதீத குளிர்ச்சி அல்லது வியர்வை, சருமம் வெளிர்தல், அசதி, மங்கலான பார்வை மற்றும் காய்ச்சல் போன்றவை ஒற்றைத் தலைவலிக்கான அறிகுறிகள் ஆகும். ஒற்றைத் தலைவலி சில நிமிடங்களில் தொடங்கி சில நாட்கள் வரை நீடிக்கும்.

**ஒற்றைத் தலைவலிக்கான தீர்வு**

★ உடலில் சீரான இரத்த ஓட்ட செயற்பாடு, மக்னீசியம், ஒமேகா 3, விட்டமின் பி2, தாதுக்கள் மற்றும் நுண் சத்துக்கள் நிறைந்த உணவுகளைச் சாப்பிடலாம்.

★ சற்று குளிர்ந்த, அமைதியான இருள் நிறைந்த அறையில் ஓய்வு எடுக்கலாம்.

★ தலைவலி உள்ள இடத்தில் குளிர்ந்த அல்லது சூடான பருத்தித் துணியைக்கொண்டு ஒத்தடம் கொடுக்கலாம்.

★ கழுத்துக்குப் பின்புறம் லேசான அழுத்தம் கொடுக்கும் வகையில் மசாஜ் செய்யலாம்.

இவ்வாறு செய்தும் ஒற்றைத் தலைவலி குறையவில்லை என்றால், மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதே சிறந்த தீர்வாகும்.




## மழைக்கால மூச்சு பயிற்சி 'பிராணாயாமம்'

**பிராணாயாமம் செய்யும் முறை**

விரிப்பில் நிமிர்ந்து அமரவும். முதுகெலும்பு நேராக இருக்கட்டும். விரிப்பில் அமர முடியாதவர்கள் ஒரு நாற்காலியில் அமரவும். இடது கை சின் முத்திரையில் வைக்கவும். பெருவிரல் ஆள்காட்டி விரல் நுனியை இணைக்கவும். மற்ற விரல்கள் தரையை நோக்கி இருக்கட்டும். வலது கை பெருவிரலால் வலது நாசியில் அடைக்கவும். இடது மூக்கு துவாரத்தின் வழியாக மெதுவாக மூச்சை இழுத்து மிக மெதுவாக மூச்சை வெளிவிடவும்.பைத்து முறைகள் செய்யவும்.

பின்பு, வலது கை மோதிரவிரலால் இடது நாசியை அடைத்து வலது நாசி வழியாக மெதுவாக மூச்சை இழுத்து வலது நாசி வழியாக மெதுவாக மூச்சை வெளிவிடவும். பத்து முறைகள் செய்யவும்.

வலது நாசியை பெருவிரலால் அடைத்து இடது நாசியில் மூச்சை மெதுவாக இழுக்கவும். உடன் இடது நாசியை மோதிர விரலால் அடைத்து வலது நாசியில் மெதுவாக மூச்சை வெளிவிடவும். மீண்டும் இடதில் இழுத்து வலது நாசியில் மூச்சை மெதுவாக வெளிவிடவும். பத்து முறைகள் பயிற்சி செய்யவும்.

இடது நாசியை மோதிர விரலால் அடைத்து, வலது நாசியில் மூச்சை மெதுவாக இழுத்து உடன் வலது நாசியை அடைத்து இடது நாசியில் மூச்சை வெளிவிடவும். பத்து முறைகள் பயிற்சி செய்யவும்.

**மழை, குளிர் காலத்திலும் அதிகாலை 4 மணி முதல் 5 மணிக்குள் எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு சிறிய முத்திரை, யோகா, மூச்சுப்பயிற்சி செய்தால் உடல் சுறுசுறுப்பாக இயங்கும்.**





## TATTOO பராமரிப்பு முறை

இன்றைய இளம் யுவதியினர் முதல் இளைஞர்கள் வரை அனைவரும் கைகளிலும், உடல் பாகங்களிலும் விதவிதமான டெட்டூக்களை பதித்துக் கொள்ள ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களின் இரசனைக்கேற்ப கருப்பு நிறம் மட்டுமின்றி வண்ணமயமான நிறக்கலவையிலும் டெட்டூக்கள் ஜொலித்துக்கொண்டிருக்கின்றன. இந்த டெட்டூக்களை முறையாக பராமரிக்காவிட்டால் சில மாதங்களிலேயே பொலிவை இழக்கத் தொடங்கி விடும்.

**டெட்டூவை எவ்வாறு பராமரிப்பது?**

★ டெட்டூக்கள் வரைந்த பிறகு ஒரு வாரம் கூடுதல் கவனம் செலுத்தி பாதுகாக்கவேண்டும். நீச்சல் பயிற்சியை தவிர்க்க வேண்டும்.

★ மதுப்பழக்கம் உடையவர்கள் மூன்று, நான்கு நாட்களாவது மது அருந்துவதை தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் மதுவில் இருக்கும் அல்கஹோல் இரத்தத்தில் கலந்து டெட்டூக்களின் நிறத்தில் மாற்றத்தை ஏற்படுத்திவிடக் கூடும்.

★ ஒரு வாரம் கழித்து 'டாட் வெக்ஸ்' எனப்படும் மொய்ஸ்டரைசரை கொண்டு அதன் மீது மசாஜ் செய்ய வேண்டும். அது டெட்டூக்களுக்கு கூடுதல் அழகு சேர்க்கும்.

★ சூரிய கதிர்கள் டெட்டூக்களுக்கு எதிரானவை. அவை டெட்டூக்கள் மீது நேரடியாக படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சூரிய கதிர்களில் இருந்து வெளிப்படும் புற ஊதாக்கதிர்கள் டெட்டூக்களின் பொலிவை குறைக்கும். அது மட்டுமல்லாது, டெட்டூக்கள் மூலம் ஊடுருவி சருமத்திற்கும் கேடு விளைவிக்கவும் செய்யும்.

★ உடலில் டெட்டூக்கள் வரைந்திருப்பவர்கள் இறுக்கமான ஆடைகளை அணியக்கூடாது. அவை டெட்டூக்களில் உராய்வை ஏற்படுத்தி அதன் நிறத்தை மங்க செய்துவிடும்.









## பன்னீர் POPCORN

**தேவையான பொருட்கள்**

பன்னீர் -160 கிராம்
கோர்ன் பிளக்ஸ் - 100 கிராம்
கோதுமை மாவு - 2 தே. கரண்டி
சோள மாவு - 3 தே.கரண்டி
மிளகு தூள் - 2 தே. கரண்டி
பூண்டு -4 பற்கள்
உப்பு தேவையான அளவு

**செய்முறை**

பூண்டை அரைத்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் ஊற்றி கோதுமை மாவு, சோள மாவு, மிளகு தூள், பூண்டு விழுது அனைத்தையும் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும்.

பன்னீரை அக் கலவையில் தோய்த்து சிறிது பொடியாக்கிய கோர்ன் பிளக்ஸில் பிரட்டி எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

# Hybrid வாகனங்களுக்கான Panasonic Japan VRLA Starter மின்கலம் அறிமுகம்

வாகன மின்கலத்துறையில் 30 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட, இலங்கையின் முன்னணி இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களுமான, டக்ளஸ் அண்ட்சன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (Douglas & Sons DSL), Panasonic Japan Valve Regulated LeadAcid (VRLA) starter மின்கலத்தை இலங்கையின் Hybrid வாகனசந்தையில் அண்மையில் அறிமுகப்படுத்தியிருந்தது. புதியPanasonic Japan VRLA மின்கலமானது, பிரத்தியேகமாக Toyota, Mitsubishi, Mazda and Nissan ஜப்பானிய ஹைப்ரிட் வாகன மாதிரிகளான Aqua, Axio, Prius, Outlander, Mazda 3, CX5, XTrail ஆகியவற்றின் மின்கலத் தேவையினை பூர்த்திசெய்ய வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், வீதியில் வலம் வரும் அனைத்து Hybrid கார்கள் மற்றும் SUV களின் மின்கலமாற்றீட்டுக்கான அசல் மின்கலமாகவும் இது அமைந்துள்ளது.

Panasonic Japan VRLA மின்கலமானது, மிகவும் நம்பகமான ஜப்பானிய தொழில்நுட்பத்தை உள்ளடக்கியது என்பதுடன், இது பல தசாப்தங்களாக இலங்கையர்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளது. மிகநீடித்த, முழுமையாக சீல்செய்யப்பட்ட, பராமரிப்பு அவசியமற்ற மின்கலமாக இதுதரப்படுத்தப்பட்டுள்ளதுடன், Hybrid மின்கலத்துக்கு மிதமாக சக்தியை வழங்குவதுடன், பயணிகளுக்கு 100% பாதுகாப்பையும் வழங்குகிறது. இதன்ஆயுள் தொடர்பில் கவனிக்கும்போது, Panasonic Japan VRLA மின்கலமானது, எந்தவொரு பராமரிப்பும் இல்லாமல் 3 4 ஆண்டுகள் வரை நீடித்து நிலைக்கக்கூடியன. ஒரு வால்வின் ஊடாக காற்றை வெளி




யிடும் வகையில் முழுமையாக சீல்செய்யப்பட்ட இம்மின்கலம், அதன் நேர்த்தியான வடிவமைப்பு காரணமாக, சாதாரண மின்கலங்களில் காணப்படும் பிரச்சினையான, அமிலம் கசியாமல் இருப்பதை உறுதிசெய்கிறது. வாயுசீராக்கி (A/C), சென்சர்கள் மற்றும் மிகமுக்கியமாக Hybrid மின்கலம் உள்ளிட்ட முக்கிய உட்புறபாகங்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு என்பன தொடர்பில் மிகக்கரிசனையாக செயற்படும்வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது. மின்கல வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்பம் என்பன வாகனத்தின் ஆரம்பமின்கலம்போன்றவகையில் அமைக்கப்பட்டிருக்கும். எனவே இம்மின்கலம் வாகனம் மற்றும் Hybrid மின்கலம் ஆகிய இரண்டிற்கும் ஏற்றதாக அமைகின்றது. அத்துடன்ஒரு starter மின்கலத்தை, சாதாரணஈயஅமிலமின்கலத்தை கொண்டு மாற்றீடு செய்வது பொருத்தமானதல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

# Asian Chill Equipment நிறுவனத்துக்கு ப்ளெடினம் விருது



வணிக குளிரூட்டிகள் மற்றும் ஹோட்டல்களுக்கான சமையலறை சாதனங்கள் உற்பத்தி துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் AsianChill Equipment நிறுவனத்துக்கும் அதன் ASPARAI வர்த்தக நாமத்துக்கும், கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் (IDB) ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கும் விழாவில் இலத்திரனியல் மற்றும் எலெக்ட்ரானியல் சார்ந்த உற்பத்தி பிரிவின் மத்திய அளவிலான பிரிவின் ப்ளெடினம் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற விருது விழாவில் முகாமைத்துவப் பணிப்பாளர் வஜிர குமார டீ சில்வா விருதை பெற்றுக்கொண்டார்.

1990 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட Asian Chill Equipment நிறுவனம் அனுபவமிக்க பொறியியலாளர்கள், புத்தாக்க தொழில்நுட்பவியலாளர்களை கொண்டு ASPARAI வர்த்தக நாமத்தின் கீழ் உயர்தரத்திலான வணிக குளிரூட்டிகள் மற்றும் ஹோட்டல்களுக்கான சமையலறை சாதனங்களை உற்பத்தி செய்து இலங்கை சந்தைக்கு விநியோகிப்பதோடு டுபாய், மாலைத்தீவு, அவுஸ்திரேலியா, சீசெல்ஸ் உள்ளிட்ட ஏராளமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

இறைச்சி, மீன் போன்றவற்றை காட்சிப்படுத்தும் குளிரூட்டிகள், கேக் வகைகளை காட்சிப்படுத்தும் குளிரூட்டிகள், ஐஸ்கிறீம் காட்சிப்படுத்தல் குளிரூட்டிகள், மரக்கறி காட்சிப்படுத்தல் குளிரூட்டிகள், உணவு வகைகளை காட்சிப்படுத்தும் குளிரூட்டிகள், வெள்ளை இரும்பிலான அப்ரயிட் குளிரூட்டிகள், வெள்ளை இரும்பிலான அன்டர் கவுன்டர் குளிரூட்டிகள், வயின் கூலர்கள் மற்றும் பியர் கூலர்கள் போன்ற பல்வகை வணிக குளிரூட்டிகளோடு கொத்து ப்ளேட், ப்ரைட் ரயிஸ் அடுப்புகள், BBQ இயந்திரங்கள், செலமென்டர்கள், ஆழ்ந்த எண்ணெயில் பொறிக்கும் தட்டுகள், ரயிஸ் ஸ்டீமர்கள், வெள்ளை இரும்பிலான சிங்க் வகைகள், கொதிநீர் இயந்திரங்கள் மற்றும் கெனப்பி போன்ற பல்வேறு சமையலறை சாதனங்களையும் இந் நிறுவனம் உற்பத்தி செய்கிறது.இலங்கையின் முன்னணி நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் பல்வேறு கம்பனிகளுக்கு தமது உற்பத்திகளை விநியோகிக்கும் Asian Chill Equipment நிறுவனம் அடுத்த சில ஆண்டுகளில் வணிக குளிரூட்டிகள் மற்றும் ஹோட்டல்களுக்கான சமையலறை சாதனங்களை ஏற்றுமதி செய்வதில் முதல்வனாகும் நோக்கத்தில் மேலும் பல புதிய உற்பத்திகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது.

# அவசர தேவையுடையோருக்கு உதவுவதற்காக 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டம்

டயலொக், MAS, Hemas மற்றும் சர்வோதயம் ஆகியன ஒன்றிணைந்து அவசரத் தேவையுடையோருக்கு உதவுவதற்காக 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றன. இதன்படி 100,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், டயலொக் ஆசிஆட்டா, MAS Holdings Pvt Ltd, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன இணைந்து 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டமொன்றை கூட்டாக ஆரம்பித்துள்ளன .




இடமிருந்து வலமாக சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு,பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ரவி சிறிவர்தன, Voice of Asia Network இன் தலைமை நிர்வாக அதிகாரி அஜாஸ் ஷபீக், PwC ஸ்ரீலங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுஜீவ முதலிகே, சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Hemas Holdings PLC இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன், MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ, EAP வலையமைப்பு பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தின் அலைவரிசை பிரிவு தலைவர் ரங்கன டி சில்வா, பவர் ஹவுஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் சந்தைப்படுத்தல் குழும பணிப்பாளர் துஷார பெரேரா.

பாதிப்பிற்குள்ளாகியுள்ள சமூகங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் நோக்கில் தொலைநோக்குப் பார்வையுடன், 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக சர்வோதயம் உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்ட மேற்படி பெருநிறுவன கூட்டணியுடன் டயலொக் கைகோர்த்துள்ளது. இதற்கமைய, இந்த பெருநிறுவன கூட்டு நிறுவனங்கள் நாட்டில் 100,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டுள்ள மற்றும் வறுமையில் உள்ள குடும்பங்களை அடையாளம் கண்டு அவசரகால நிவாரணங்களை வழங்கவுள்ளன.

குறித்த பெருநிறுவன கூட்டாளர்களின் இணக்கத் தேவைகளின்படி நிதி நிர்வாகத்தையும் அறிக்கையிடலையும் கண்காணிக்கும் முயற்சியை PwC மேற்கொண்டுள்ளது. மேலும், ITN, Siyatha Swarnawahini, TV Derana மற்றும் வசந்தம் ஆகியன ஊடக பங்காளிகளாக இந்த முயற்சியில் இணைந்துள்ளன. மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிகழ்வானது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி செயற்படத் தொடங்கியது. அதற்கமைய அனைத்து 25 மாவட்டங்களிலும் அவசர நிவாரணம் தேவைப்படும் இடங்களில், குடும்பங்களுக்கு இதனூடாக அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படும். டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், “100,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் இந்த முயற்சியில் எம்முடன் இணைந்து செயற்படுகின்ற MAS, Hemas நமது செயற்றிட்ட செயற்பாட்டு பங்காளியான சர்வோதய மற்றும் பொறுப்புக்கூறல் பங்குதாரரான PwC ஆகியோருக்கு நாம் நன்றி கூறுகின்றோம். நாடு முழுவதும் 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களின் நம்பகமான டிஜிட்டல் பங்காளியாக உள்ள டயலொக் நிறுவனமாகிய நாம் நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் அத்தாக்கங்களிலிருந்து விடுபடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம். விளிம்பு நிலை சமூகங்களுக்கு அவர்களின் மிகப் பெரிய தேவைகளின் போது அவர்களுக்கு உதவ இதுபோன்ற நிவாரண முயற்சிகளை நாங்கள் எப்போதும் முன்னெடுத்து வருகின்றோம். இந்த முயற்சியில் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு இலங்கை பெருநிறுவனங்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்"என்றார்.

மேற்படி நிவாரண திட்டம் குறித்த அறிமுக விழாவில் உரையாற்றிய MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ “இதுபோன்ற சந்தர்ப்பங்களில் MAS நிறுவனமும் முக்கிய பங்காளராக செயற்பட கிடைத்துள்ளதை பெரும் பாக்கியமாக நாம் கருதுகின்றோம். இலங்கையில் உள்ள ஏனைய பெருநிறுவனங்களும் இவ்வாறே எம்முடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இந்த வேலைத்திட்டத்தினூடாக நம்முடன் ஒன்றிணைந்து இக்கட்டான சூழ்நிலையில் இந்நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளிலிருந்து அவர்களை மீளச்செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான வழிகளைக் கண்டறிய உத்வேகம் பெறுவார்கள் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன்" என்றார்

Hemas Holdings பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் கருத்து தெரிவிக்கையில் “இலங்கை நிறுவனம் என்ற வகையில் நாடு முழுவதிலுமுள்ள எமது மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவது எமது கடமையாகும். எனவே, அடுத்து வரும் மாதங்களில், நாம் நமது பங்காளிகளுடன் தொடர்ந்து பணியாற்றுவதுடன் நமது சமூகங்கள் மற்றும் சேவையாளர்களின் சுமையை குறைக்கும் பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குவோம்" என்றார்..

# நம்பகமான கார்ட் உரிமையாளர்களுக்கு பண்டிகைக்காலத்திற்கான மதிப்புமிக்க தள்ளுபடிகளை வழங்குகிறது HNB



HNB தனது நம்பகமான டெபிட் மற்றும் கிரெடிட்கார்ட் உரிமையாளர்களுக்கு இந்த பண்டிகைக்காலத்தில் தங்களுக்கும் தங்கள் குடும்ப அங்கத்தினரையும் உபசரிப்பதற்காக எண்ணற்ற சலுகைகளை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது–இதன்மூலம் எலக்ட்ரானிக் சாதனங்கள் முதல் அன்றாட மளிகை பொருட்கள் வரை பல்வேறு தயாரிப்புகளில் பெரும்தள்ளுபடிகளை வழங்குகின்றது.

HNBஇன் பங்காளர் பிராண்டுகள், ஆன்லைன் மற்றும்ஃபேஷன் சில்லறை விற்பனை நிலையங்கள், உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், ஹோட்டல்கள், கல்வி, மருத்துவ மனை மற்றும் காப்பீட்டுக் கட்டணங்கள் ஆகியவற்றுக்கு ஏப்ரல் 2022 வரை தள்ளுபடிகள் செல்லுபடியாகும். கூடுதலாக, எரிபொருள் பரிவர்த்தனைகள் மற்றும் ரொக்க முன்பணங்கள் தவிர, 30,000/ரூபா முதல் ஒருமில்லியன் ரூபா வரையிலான எந்தவொரு பரிவர்த்தனைக்கும் 12 மாதங்கள்வரை 0% வட்டி எளிதான கட்டணத்திட்டத்தை HNB வழங்குகிறது.எலக்ட்ரோனிக் மற்றும் எலக்ட்ரிக்கல் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் பிறவாழ்க்கைக்கு தேவையான பொருட்கள், நகைகள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை தேர்ந்தெடுக்கப்பட்ட வணிகர்களிடம் வாங்கும்போது கூடுதல் கையாளுதல் கட்டணங்கள் இல்லாமல் சிறப்பு தள்ளுபடிகள் மற்றும் தவணை திட்டங்களில்இருந்து வாடிக்கையாளர்கள் பயனடைய முடியும்.

“பண்டிகைக்காலம் காலம் எப்போதுமே அனைத்து இலங்கையர்களுக்கும் மகத்தான கலாச்சார மற்றும் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தது. அதேநேரம் தயாரிப்புகள் மற்றும் செலவுகளின் பட்டியலும் நீண்டுகொண்டு செல்கிறது, குறிப்பாக நாம் அனைவரும் எதிர்கொள்ளும் கடினமான நேரங்களைக் கருத்தில் கொண்டு, எங்கள் நம்பகமான எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் அதிகபட்ச மதிப்பை வழங்குவதற்கான மிகப்பெரிய அளவிலான தள்ளுபடிகள் மற்றும் பருவகால சலுகைகளை நாங்கள் வழங்க உத்தேசித்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறோம்.” என HNB கார்ட் பிரிவு தலைவர் கௌதமி நிரஞ்சன் தெரிவித்தார்.

# சிறந்த கைத்தொழிலுக்கான வெங்கல விருது AGM Products நிறுவனத்துக்கு



முதன்மை வாசனைத் திரவியப் பொருள் உற்பத்தி நிறுவனமான AGM Products நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) ஏற்பாடு செய்த சிறந்த கைத்தொழில்களுக்கான விருது விழாவில் சிறியளவிலான பிரிவின் வாசனைத் திரவியப் பொருட்கள் மற்றும் அதுசார்ந்த உற்பத்திபிரிவின் வெங்கலப் பதக்க விருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடபெற்ற விருது வழங்கும் விழாவில் மேற்படி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அப்துல் வாஹிட் மொஹமட் பாருக் விருதை பெற்றுக்காண்டார்.

1990 ஆம் ஆண்டு சிறியளவில் மிளகு, சாதிக்காய், கொரக்காய்,வசாவாசி, கறுவா, கராம்பு, கோப்பி, மஞ்சள் போன்ற பொருட்களின் விற்பனையின் மூலம் தொடங்கப்பட்ட AGM Products நிறுவனம் உயர் தரத்திலான வாசனைத் திரவியப் பொருள் சார்ந்த பெறுமதி சேர்த்த ஏராளமான உற்பத்திகளை மேற்கொள்கிறது. மிளகுத் தூள், மிளகு சோஸ், கறுவாத் தூள், கறுவா டீ, ஏலம் தூள், கிராம்புத் தூள்,வெனிலாத் தூள், வெனிலா டீ, கொரக்காய் பேஸ்ட் போன்ற உற்பத்திளோடு சமையலுக்குத் தேவையான சரக்குத் தூள் மற்றும் தானிய வகைகள், மா வகைகள் பலவற்றை AGM Products உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைக்கு வழங்குகிறது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற AGM Products நிறுவனம் GMP தரச் சான்றிதழையும் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான ஏராளமான விருதுகளையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை SOS சிறுவர் கிராமங்களுக்கு கௌரவிப்பு





இலங்கை SOS சிறுவர் கிராமங்கள் அண்மையில் இடம்பெற்ற Women in Management (WIM) மற்றும் இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்தின் (SLIM)SLIM DIGIS 2.1 விருதுகள் வழங்கும் நிகழ்வுகளில் விருதுகளை சுவீகரித்திருந்தது. 40 வருட காலப்பகுதியில் பின்தங்கிய நிலையில் காணப்படும் குடும்பங்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் என அனைவரினது வாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்திவரும் நிலையில் இந்த விருதுகளை சுவீகரித்துள்ளமை மற்றுமொரு மைல்கல்லாகும். பெண்கள் வலுவூட்டலில் சிறந்த அரசசார்பற்ற நிறுவனம் / சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் எனும் விருதை சுவீகரித்திருந்ததுடன், அரசசார்பற்ற நிறுவனங்கள் வரிசையில் வர்த்தகநாம விழிப்புணர்வுக்கான வெண்கலவிருதையும்,முறையே சுவீகரித்திருந்தது.

இந்தவிருதுகளை சுவீகரித்திருந்தமை தொடர்பில் இலங்கை SOS சிறுவர் கிராமங்கள் தேசிய பணிப்பாளர் திவாகர் ரட்ணதுரை கருத்துத் தெரிவிக்கையில், “இரு சிறந்த விருதுகள் பற்றிய அறிவிப்புடன் வருடத்தை ஆரம்பிக்க முடிந்தமை உண்மையில் மிகவும் பெருமையாக உள்ளது. நிறுவனம் எனும் வகையில், பின்தங்கிய குடும்பங்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் தொடர்பில் பாரிய எதிர்பார்ப்புகளை நாம் கொண்டுள்ளோம். எமது புத்தாக்கத்தில் ஒன்றான சமூக நிகழ்ச்சிகளினூடாக, இலங்கை SOS சிறுவர் கிராமங்கள் பின்தங்கிய பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுவதில் முன்னணியில் திகழ்கின்றது. இந்தநிகழ்ச்சிகளில், குடும்பத்தைப் போன்ற பராமரிப்பு, குடும்பவலுவூட்டல் மற்றும் தொழிற்பயிற்சி போன்றனஅடங்கியுள்ளன. எமதுமுயற்சிகளுக்கு கௌரவிப்பு கிடைத்துள்ளமை உண்மையில் பெருமைசேர்ப்பதுடன், சமூகத்திற்கான எமது சேவைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதில் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.” என்றார்.

இலங்கை SOS சிறுவர் கிராமங்களின் தொழிற்பயிற்சி நிகழ்ச்சிகளினூடாக, இளம்வயதைச் சேர்ந்த இருபாலாருக்கும் இலவச தொழிற்கல்வி வழங்கப்படுகின்றது. அதனூடாக அவர்களுக்கு தமக்கு வேண்டிய தொழில்நிலையை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.




# அத்தனையும் அற்புதமாய் மாறும்

அறூபா அஹ்லா
கல்முனை

எண்ணங்களும் எழுத்தாகும்...
வண்ணங்களும் இரசனையாகும்...
தின்பண்டங்களும் அமுதமாகும்...
சொந்தங்களும் சந்தோஷங்களாகும்...
கஷ்டங்களும் இஷ்டங்களாகும்...
துன்பங்களும் தூசிகளாகும்...
பலவீனங்களும் பலமாகும்...
அவநம்பிக்கைகளும் நம்பிக்கைகளாகும்...
இகழ்ச்சிகளும் புகழ்ச்சிகளாகும்...
தட்டிக்கழித்தல்களும் கைதட்டல்களாகும்...

அத்தனையும் அற்புதமாய் மாறும்
நாம் பார்க்கும் பார்வையிலும்
மனம் ஏற்கும் தன்மையிலும்...





# வரமாய் வந்த ரமழான்

வரக்காமுறையூர் ராசிக்

புது நிலவொன்று பூக்கும்
புதுமைகளை யது ஆக்கும்
மதியொளி வந்து பரவும்
மனித மனங்களை யது கவரும்
பிறை யொன்று தெரியும்
பாவக்கறை மண்ணில் மறையும்
பேரருள் மழை பொழியும்
பிழைக ளெல்லாம் அழியும்
பேரொளி வந்து பிறக்கும்
பெருமை மண்ணில் அழிக்கும்
அருள் மறை ஒலிக்கும்
அகில மதால் ஜொலிக்கும்
பசியின் கொடுமை யுணர்த்தும்
புசிப்பவர் மனதை உறுத்தும்
பாசமாய் கைகள் நீளும்
பால்நிலவே உல காளும்
கையின் சுடர் எரியும்
ஏழை வீடும் ஒளிரும்
பகையின் இடர் பறக்கும்
பரிவா லுலகம் சிறக்கும்

இரவும் பகலென மாறும்
இறையே பெரிதென ஆகும்
உறவும் உயிரென தோணும்
மானிய உலகிதை காணும்
ஆயிரம் மாதங்களை மிகைக்கும்
அரியதோர் இரவும் உதிக்கும்
பாவிகள் மனங்களை நசுக்கும்
பாவம் மண்ணில் பொசுக்கும்
ஏற்றம் எழுந்து துள்ளும்
ஏழ்மை வீழ்ந்து செல்லும்
மாற்றம் மனதை வெல்லும்
மனிதனாய் வாழச் சொல்லும்
தாழ்மை தாழ்ந்து போகும்
தரித்திரம் வீழ்ந்து சாகும்
வாழ்க்கை மலர்ந்து செல்லும்
வாய்மை வளர்ந்து வெல்லும்
இத்தனை இன்பங்கள் தரும்
இனிய ரமழானே வரம்
அத்தனையும் ஏற் றொழுகி
அமல்கள் செய்வோம் கல்புருகி

# ரமழான்...

நுஸ்ரத் மஹ்ரூப்ர்
மாதம்பை

ஸூஜூதுகள்
சுகமாகிப் போகும்
சுகமான மாதம்...
ரமழான்...

வறுமைக்குப் பயந்து
வாரிச் சுருட்டியதை..
வாரி வழங்கிடும்
வசந்த மாதம்...
ரமழான்....

மறையோடு
மனம் லயிக்கவித்து
மாண்புமிகு
மனிதனாய் மாற்றிவிடும்
மகோன்னத மாதம்...
ரமழான்...

சிரமங்களை
சிரமேற்கொண்டு
சிரம்பணிந்து
சீர்பெறும் மாதம்..
ரமழான்....

கல்லான
கல்பும்
கண்ணீர் சிந்தி
கரமேந்திடும்
கணிவான மாதம் ...
ரமழான்...

கரு மேகங்களின்றி
அருள் மழை பொழிந்திடும்
அருள் பொங்கும்
புனித மாதம்...
ரமழான்...

இரவிரவாய்
இறைவனோடு
உறவாடி
இறை உவப்பை
பெற்றிடும் இனிய மாதம்...
ரமழான்...

அச்சமூட்டி
எச்சரிக்கை செய்த...
விரட்டப்பட்டவன்
விலங்கிற்குள் இருக்கும்
விஷேட மாதம்...
ரமழான்...

அலங்கரிக்கப்பட்ட சுவனத்தை
அன்பளிப்பாய்
அள்ளித்தந்திட
அன்போடு வந்த மாதம்...
ரமழான்...

இறை வரிகளில்
இன்பம் பெற்று...
இரவுகளை உயிர்ப்பித்து
இன்று பிறந்த பாலகனாய்
மாறிடவே இந்த...
ரமழான்...

# ஏழைத் தாய்

பொத்துவில் அஜ்மல்கான்

உறவினால் கை
விடப்பட்டு உணவுக்காய்
கை ஏந்தும்
பாசக்காரி நான்

நான் இங்கு
பஞ்சம் பிழைக்க
வரவில்லை நெஞ்சமெல்லாம்
நுழைந்து போன
வலிகளை தொலைக்க
வந்துள்ளேன்

காடுகளில் நடந்து
கால்கள் வெடித்துப்
போனதால் அளவாய்
நடக்க முடிகிறது
இந்த வயதிலும்
வறுமை பார்க்காது

பாசமாய் வளர்த்த
மகன்(ள்) பாரம்
என நினைத்து
பாதையில் விட்டுப்
போனது ஏனோ!

படைத்தவன் துணை
என்பதால் உடுத்துப்
போக எதுவும்
இல்லை எனக்கு

வரண்ட பூமியில்
இருள் சூழ்ந்த
மனமுள்ள மானிடர்களை
பார்க்க பார்வையிழந்த
கண்கள் தேவை
பாவம் இவள்
எனப் பார்க்காது
காமம் கொண்டு
பார்ப்பதால்

சுருண்டு போன
தோல் மறந்து
போன ஞாபகங்கள்
என உடைந்து
போயிருக்கின்றது இந்த
இதயம்

விடிய முன்பு
என் ஆயுள்
முடிந்திருக்க வேண்டும்
என்று கடவுளுடன்
கூறிக் கொண்டு
நகர்ந்து போகிறேன்
இன்று வரை

# பின்நோக்கிப் பாய்வதில்லை

மொழி

ஓடுகின்ற நதிகள் எல்லாம்
பின்நோக்கிப் பாய்வதில்லை
பாடுகின் பறவைகள் எல்லாம்
வாத்தியாரைவைத்து
கற்றுக்கொள்வதில்லை
தேடுகின்ற விழிகள் எல்லாம்
தேவதைகளை காண்பதில்லை
கூடுகின்ற கூட்டமெல்லாம்
இறுதி வரை நிற்பதில்லை

# கவிதை

என். பாரத்
மானிப்பாய்



நான்
சொன்ன கவிதை
உனக்கும் பிடித்துவிட்டதடி
அந்த கவிதை முழுவதும்
நீ தான் என
தெரியாமலேயே
ரசிக்கின்றாய்
உன் விழிகளை சிமிட்டியவண்ணம்
ஒவ்வொரு கவிதைகளாக...

# சங்கடம் மாறும்

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

காலம் என்பது பொன் போன்றதாகும்
கடமையை உணர்ந்தால் வாழ்வே செழிக்கும்
ஞாலம் இறைவனின் அன்புக் கொடையாகும்
நலமுடன் செயல்பட நிறைவுகள் கூடும்
ஓலத்தை மறந்தால் ஒழுங்குகள் வளரும்
ஊக்கமும் உற்ற நண்பனாய் இணையும்
பாலமாய் நட்புகள் பெருகிடதுவங்கும்
பார்ப்பவரெல்லாம் துணைவர நேரும்

தோழமை உணர்வுகள் சேர்ந்து வளரும்
சொந்தமாய் பந்தங்கள் நவமது கூடும்
கோலமுடனே வாழ்க்கையும் தொடரும்
கொழிக்கும் உறவுகள் தொடர்பில் இணையும்
சாலச்சிறந்த நிலை உருவாகும்
சங்கடம் மாறி மங்கலம் உறையும்

# புதுமைகள் படைப்போம்

"ஏரூர்க்கவி"
எச்.எம்.எம்.றசீம்
கிழக்குப்பல்கலைக்கழகம்

தோழமைகள் இன்மையால்
தோல்விகளில் தோற்றோம்
தூயவைகள் தொலைந்தமையால்
தீயவைகளில் குவிந்தோம்

கொள்ளைகள் பிடிப்பதனால்
கொள்கைகளில் நடித்தோம்
பிள்ளைகள் தவறியதனால்
பித்தன்கள் பிணக்கிட்டோம்

சதிகள், செயல்களினால்
சதிராடத் துடித்தோம்
உற்றார்கள் தீர்ப்பதனில்
கற்றோர்களொரு தலை சாய்ந்தோம்

சுற்றார்கள் படியதனால்
சுயநலம் கொண்டோம்
குற்றங்கள் கண்டதனால்
குரல்வளைகள் கடித்தோம்

உள்ளோர்கள் குணமதனால்
இல்லார்கள் பசித்திட்டோம்
குள்ளர்கள் மதியாததனால்
குவலயத்தில் மலிந்திட்டோம்

அறவழிகள் மறந்ததனால்
புறவழிகள் புறப்பட்டோம்
பெருமைகள் அளவின்மையால்
பெருவெளியில் கீழானோம்

சிறுமைகள் சிக்கியதனால்
சிறப்புகள் இழந்திட்டோம்
நடுநிலைகள் தவறியதனால்
நல்லவர்கள் பகைத்திட்டோம்

இனிமைகள் வேண்டியதனால்
இவை வேண்டாம்
தளிர்கள் வளர்வதனால்
தரணியினைத் தூர்வோம்

இளமைகள் இருப்பதனால்
பழமைகள் துறப்போம்
புதிரான மொட்டுக்களால்
புதுமைகள் படைப்போம்

# தாய்நாடு சிறக்க ...!

கவியரசி
எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால



அர்ப்பணிப்பு
உதிரத்தில்
ஊர
வேண்டும்!

தியாகம்
இதயத்தில்
உரைய
வேண்டும் !

நினைவு
நிஜத்தில்
நிறைய
வேண்டும்!

நிம்மதி சதா
ஒரு துளி
உறவில்
கலக்க வேண்டும்!

தூய்மையும்
தாய்மையும்
எண்ணத்தில்
நிரம்ப வேண்டும்!

இதயத்தில்
ஈதல் உதயமாகி
தாய்நாடு
சிறக்க வேண்டும்

# காதலிற்காகவே

ரதிதேவி, மானிப்பாய்



காதலில் விழும் போது
கவிதை தோன்றுமே
உயிர் தேடலில் விழும்போது
தேகம் தாண்டுமே

தீயினைத் தலைகீழாய்
நிறுத்தமுடியுமா
இதயத் தீயினை
உன் வழியில்
செலுத்த முடியுமா

கைகட்டி நில்
அது கண்கட்டிக் கூட்டிப்போகுமே
கதவைத்தட்டி வந்து
அழைத்துச் செல்லும்
காத்திரு
காதலிற்காகவே





அக்கரைப்பற்று பகுதி கருங்கொடித்தீவுறை அருள்மிகு பெரிய பிள்ளையார் ஆலய (ஸ்ரீ சித்தி விநாயகர் மகா தேவஸ்தானம்) சித்திரா பௌர்ணமி பிரம்ம மகோற்சவ திருவிழாவின் கொடியேற்றம் அண்மையில் நடைபெற்றது.
(படங்கள்: வாச்சிக்குடா விஷேட நிருபர்)



தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் 25வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கணபதி இந்து மகளிர் வித்தியாலய அதிபர் சாந்தினி பாபு சர்மா தலைமையில் வறுமை கோட்டின் கீழ் உள்ள கொ/கணபதி இந்து மகா வித்தியாலயம், கொ/மத்திய இந்து வித்தியாலயம், கொ/கலைமகள் வித்தியாலயம், கொ/ சென். மெதடிஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் தலா ஒவ்வொரு மாணவர்களை தேர்ந்தெடுத்து ஒரு வருடத்திற்கான கல்வி செலவிற்கு பணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் மன்ற பிரதித் தலைவர் லயன். ரவிந்திரன், முன்னாள் தலைவர் லயன். ராஜா, தலைவர் நிலாம், பொருளாளர் திருமதி ஆர். மணிமேகலாதேவி, பொதுச் செயலாளர் லயன். எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 'இறை சோதனை நன்மைக்கே'... (11ஆம் பக்கத் தொடர்)

இப்போது தேவசகாயத்துக்கு வேலையும் தொல்லையும் இரட்டிப்பாகியது. சமையல் செய்ய வேண்டும். இடைக்கிடை மகன் திரவியனை கண்காணித்தபடி இருக்க வேண்டும். அவனுக்கு சேவகம் புரிய வேண்டும். கடை திறந்து தொழில் புரிந்து வருமானத்துக்கு வழி செய்ய வேண்டும்.... இப்படியாக பல துன்பம் தொல்லைகள். மகன் குழப்படி பண்ணத் துவங்கினான். அவனை சங்கிலியால் காலிலே கட்டி முனையை வேறிடத்தில் பிணைத்து விடவேண்டும். இயற்கைத் தேவைகளை நிறைவேற்ற பிணைப்பை அவிழ்த்தெடுத்து இழுத்துக் கொண்டு போய் கடமைகளை செய்திட வேண்டும். குறிப் புணர்ந்தோ கூப்பாடு கேட்டோ தண்ணி வென்னி சாப்பாடு உவந்தூட்ட வேண்டும்.... பக்கத்தில் கோவில் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்..... இப்படியாக எத்தனை எத்தனையோ திருப்பாடுகள். இயேசு ஐந்து ஆணிகளில் அறையப்பட்டார். சகாதேவன் எத்தனை ஆணிகளில் அறையப்பட்டிருக்கிறான், இறைவா உன் பக்தனை ஏன் இன்னும் சோதிக்கிறாய்?

இப்படியிருக்கையில் வெளியில் அழைப்பு. வேலையை முடித்துக் கொண்டு வீடேகியதும் அதிர்ச்சி காத்திருந்தது. திரவியத்தை காணவில்லை. சில நாட்களாக கோளாறில்லாமல் அமைதியாக இருக்கிறான் என்று சங்கிலியால் பிணைக்கவில்லை, சுற்றுப்புறம் தேடியும் பயனில்லை. இப்படி நடக்கும் என்று நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.... மூத்தவன் தகப்பனை பின்னால் ஏற்றிக் கொண்டு உந்துருளியில் ஓடி தேடுதல் வேட்டை நடத்தினான். நகர்ப்பகுதி அயல் கிராமம் என்று மூன்று நாளாக தேடி விசாரித்து அலைந்தது தான் மிச்சம். கண்ட பலன் ஒன்றுமில்லை. தகப்பனுக்கு தீராத கவலை. அன்னந் தண்ணியின்றி ஆண்டவனிடம் பிரலாபிப்பதைத் தவிர அவருக்கு வேறொன்றும் தோன்றவில்லை.

நாலாம் நாள் இரவு நேரமிருக்கும் முச்சக்கர வண்டியொன்று வெளிப்புறமாக வந்து நின்று குரல் கொடுத்தது. அப்போதுதான் படுக்கையில் சோகத்தோடு சரிய இருந்த சகாதேவன் வெளியே போய் எட்டிப் பார்த்தார். ஏன்ன ஆச்சரியம்! திரவியம் முன்னால் நின்று கொண்டிருந்தான். பின்னால் ஆட்டோக்காரன் நின்றிருந்தான். திரவியம் தகப்பனை இனம் கண்டாலும் அவன் முகம் இருண்டே கிடந்தது. தகப்பன் பரவசத்தோடு அவனை ஆரத்தழுவிக் கொண்டார்..... முச்சக்கரவண்டிக்காரன் ஏற்கனவே இவர்களுக்குத் தெரிந்தவன் தான். இந்தப் பிரச்சினையையும் அறிந்தவன். அயல் கிராமமொன்றுக்கு சவாரி ஓடிப் போகும் போது, இடையில் ஒரு சிங்கள பிரதேசத்தில் திரவியத்தைக் கண்டான். அது வேற்றிடம் என்றாலும் ஒரு பேமன்ற் கடையில் ஒரு நோனா இவனுக்கு உணவு உவந்தளித்துக் கொண்டிருந்தாள். முச்சக்கரவண்டிக்காரன் அவளிடம் திரவியனை வீட்டுக்காரர் தேடித் திரிவதாக விபரங்களை விபரித்தான். அவளும் தனக்குத் தெரிந்ததை சொன்னாள். இவர் இரண்டு நாட்களாக தங்கள் கடைத்தெருவெல்லாம் திரிவதாகவும், பசியில் கடையில் கை நீட்டுவதாகவும், ஏதோ தானும் வேறு ஒன்றிரண்டு பேரும் உணவு கொடுத்து உதவுவதாகவும் கூறியிருக்கிறாள். இவர் அவளுக்கு 'போமஸ் துதி' சொல்லி திரவியத்தை ஏற்றிக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்.... அந்த ஆட்டோக்காரனுக்கு சொல்ல வேண்டிய நன்றி சொற்களை எல்லாம் சொல்லி, அவன் வேண்டாம் வேண்டாம் என்றாலும் விடாமல் கொஞ்சம் வெகுமதிகளையும் கொடுத்து அனுப்பினார்.

இதன் பிறகு மிகக் கவனமாகவே பராமரித்து வந்தார் தேவசகாயம். இப்போதெல்லாம் சங்கிலிப் பிணைப்பை அகற்றுவதில்லை. சுங்கிலிக் கட்டோடுதான் தன் பைங்கிளிக்கு சகல தேவைகளையும் நிறைவேற்றி வந்தார் சகாதேவன்!

ஆனால் இந்தச் சின்ன நிம்மதியும் அதிக நாள் நீடிக்கவில்லை. ஒரு நாள் தேவசகாயம் உடல் அலுப்பு, சோர்வு காரணமாக கொஞ்சம் தாமதித்தே கண் விழித்தார். வழமை போல் முதல் வேலையாக திரவியத்தையே எட்டிப் பார்த்தார். ஆனால், ஐயோ ஆளைக் காணவில்லை. அவர் போட்ட கூப்பாட்டில் அலறலில் மகன் குடும்பம் மட்டுமல்ல அயல் சனங்களும் கூடிவிட்டனர்.

பலரும் பல ஆலோசனைகளை சொல்லிப் போந்தனர். எல்லா வழிகளாலும் தேடுதல் வேட்டைகள் நடந்தேறிக் கொண்டே இருந்தது. குறி பார்த்தல், மை பார்த்தல் என்று அந்தக் காரியங்களும் நடைபெற்றுத்தான் வந்தன. சகாதேவன் தன் இஷ்ட தெய்வத்தை சதா நினைத்து மண்டியிட்டு வணங்கியபடி!..... என்ன முயற்சி எடுக்க வேண்டுமோ அவையெல்லாம் எடுத்துக் கொண்டே வந்தனர். பத்திரிகை அறிவித்தல் முகநூல் என்று எல்லா அறிவிப்புகளையும் செய்தாயிற்று. அயல் கிராம பட்டின நகரத்தில் இருக்கும் நண்பர்கள் உறவினருக்கும் அறிவித்தாயிற்று..... நாட்கள் நகர்ந்து கொண்டே இருந்ததே அல்லாமல் ஆறுதல் கண்டதில்லை. சகாதேவன் ஆண்டவனிடம் மண்டியிட்டு மன்றாடிக் கொண்டிருந்ததை தவிர பலனேதும் கண்டதில்லை. அட ஒரு அறிகுறி (சிக்னல்) தானும் தோன்றவில்லையே! இனி அவனைக் காண்பது முயல் கொம்பே!

சகாதேவனைப் பார்க்க பரிதாபமாகவே இருந்தது. ஆறுதல் சொல்வார் இருந்தாலும், ஆறுதலளிப்பார் யார்?.... ஒரு நாள் சகாதேவனைத் தேடி ஒருவர் வந்தார். அவர் அடுத்த தெருவில் இருப்பவர். அவர் ஒரு தமிழாசிரியர். இப்போது உபகார சம்பளம் பெற்று வருகிறார். அவர் பத்திரிகைகளுக்கு கதைகள் கட்டுரைகள் எழுதி வருவதாகவும் கேள்வி. சிகை அலங்கரிப்புக்காக இவரை தேடி வரும் வாடிக்கையாளனும் ஆவார் அவர். வாடிக்கையாளரின் வகைக்கேற்ற விதமாக கதைத்து புழங்குவது இவர்களின் தொழிலின் ஒரு பகுதி..... ஆனாலும் அந்த ஆசிரியரிடம் இவருக்கு ஒரு ஈர்ப்பு, பெருவிருப்பு. பொதுவான கதைகளை கதைப்பதோடு தன் சொந்த பிரச்சினைகளையும் சொல்லி அவர் ஆலோசனைகளையும் போதனைகளையும் கேட்டு வருவது அனுபவமாய் நிகழும் ஒன்று.

திரவியனைப் பற்றிய முழு விபரங்களையும் அவர் அறிவார். இன்றும் சகாதேவன் தன் சகபாடிக்கு கண்ணீர் மல்க கவலைகளை கூறிக் கொண்டிருந்தார். எல்லாவற்றையும் கேட்ட ஆசிரியர் இளநகையோடு பேசத் துவங்கினார்... 'இங்க பாரும் சகாதேவன், கஷ்ட துன்பங்கள் வாறது ஏதோவொரு நன்மைக்காகத்தான். கடவுளின் சோதனைதான் இவையெல்லாம். எல்லாம் நன்மைக்கே என்று நாம் அதை ஏற்க வேண்டும்.

நீர் காலம் முழுக்க பட்ட சித்திரவதை அவஸ்தைக்கு ஆறுதல் அளிக்கவே இந்த நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறார்.!..... நீயே உன் வாயால் என்னிடம் சொல்லி கதறியிருக்கிறாய். 'இவனோட காலம் முழுக்க உத்தரிப்பாக் கிடக்கு! செத்துத் தெரலைஞ்சு போனா நிம்மதியாயிருக்கும்.'என்றும் சொல்லியிருக்கிறாய்... இதைச் சொன்னதும் சகாதேவன் கூனிக்குறுகினார்.

ஆசிரியர் தொடர்ந்து சொன்னார்.:இனி நீங்கள் நிம்மதியாக சீவிக்கலாம். பெற்ற மகனையே சங்கிலியால் கட்டி அவருக்கேற்றதையெல்லாம் செய்து, அவருடைய அட்டகாசங்களை எல்லாம் சகிக்கவியலாமல் தொல்லைப்பட்டு நரக வேதனையை ஆயள் பூராவும் அனுபவிப்பது இன்னும் தேவையா? உனக்கோ வயதாகிவிட்டது. இன்னும் கொஞ்சக் காலமாவது நீ நிம்மதியாய் இருக்க வேண்டாமா?..... உன் மருமகள் பேரப் பிள்ளைகள் இனியென்றாலும் பயமின்றி நிம்மதி காண வேண்டாமா?..... இப்படியாக எல்லாவற்றிலுமிருந்து விடுதலையை ஆறுதலை அளிக்கவே தன் பக்தனுக்கு உதவியிருக்கிறார் இறைவனார்!'

சகாதேவன் இதை ஏற்றுக் கொண்டாலும், ஏற்று ஆறுதலடைய கொஞ்சக் காலம் எடுக்கும்.

## நெருக்கடியிலிருந்து...
(06ஆம் பக்கத் தொடர்)

அவர்களின் இந்தக் கருத்தை சந்தர்ப்பவாத அரசியலின் வெளிப்பாடாகவே பார்க்க முடியும். அவர்கள் கூறுவதைப் போல சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லாவிட்டால் அதற்கான மாற்றுத் தீர்வு என்ன? மாற்றுத் தீர்வை அவர்கள் முன்வைத்துள்ளனரா என்றால் அதற்கான பதில் இல்லையென்றே கூற வேண்டும்.

எனவே, நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு மத்திய வங்கி உரிய பாதையை காண்பிக்கும் போது அதற்கான கொள்கைகளைத் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறு அனைவரும் இணைந்து செயற்படுவதன் ஊடாகவே இந்தப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வரமுடியும். அதே நேரம், ஒரே இரவில் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிட முடியாது என்பதையும் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தற்போதுள்ள நிலையில் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டாலும் இவ்வாறான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாகவே முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

அதனால், வங்கித் துறையிலும், பொருளாதாரம் குறித்தும் நன்கு அனுபவம் மிக்க ஒருவர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கும் அதேநேரம், அனுபவம் மிக்க மற்றுமொரு வங்கியியலாளரான மத்திய வங்கியின் பிரதி ஆளுநராகப் பணியாற்றிய கே.எம்.எம்.சிறிவர்த்தன நிதியமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களின் சரியான வழிகாட்டுதல்களின் கீழ் நாடு பிரச்சினைகளிலிருந்து விடுபடும் என எதிர்பார்க்க முடியும்.


### மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவச் சபை

# பதவி வெற்றிடம்

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவச் சபையின் கீழ் காணப்படும், வெற்றிடமாகவுள்ள பதவிக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பராமரிப்பு உத்தியோகத்தர் (மின்னியல்) தரம் II (பதவிகள் 01)**

2022.04.30 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக தகவல்களிற்காக கீழ்க்கணப்படும் இணையத்தளத்தை நாடவும். https://www.moj.gov.lk/images/2022/sccbm/moelectrical.vacancy.pdf

**மார்ஷல்**
**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,**
**த.பெ.223, கொழும்பு -12.**
**தொலைபேசி: 011-2437501**






# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

309

**வெற்றிடங்கள்**
**கணக்கியல்/ நிதி**

Audit Trainee with A/L Commerce O/L Maths B Apply Agape Accounting Services, 89-1/ 2, Bankshall St reet, Colomb o-1 1. email: agapeaccservices@gmail.com whatsapp: 0755030954, Tel: 0777239397. 021522

## சொந்த விடயம்

528

**தங்குமிட வசதிகள்**

கொழும்பு-06 வெள்ளவத்த பெண்களுக்கான தளபாடங்களுடனான அறைகள், இணைந்த குளியலறை, உணவு அறை, சமையலறை குக்கர், வொசர், குளிர்சாதனத்துடன். 75/1, W.A. சில்வா மாவத்த, தொ.பே. 2591169, 075 5091379. 022269



# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்

**பொதி இல.: Gem/EP/G/2022/ELLE/01, Gem/EP/G/2022/EPSI/12, Gem/EP/G/2022/DLM/05**

### கிழக்கு மாகாணத்தின் மாகாணக் கல்விக்கு தொடர்பான உபகரணம் மற்றும் தளபாடங்களின் பெறுகை

1. கீழ் விபரிக்கப்பட்டவாறு, Smart Board வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதலுக்கான உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர்களிடம் இருந்து திருகோணமலை, கிழக்கு மாகாண, மாகாணக் கல்வித் திணைக்கள, மாகாணப் பணிப்பாளர் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பெறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. ஒரு பொதி அல்லது மூன்று பொதிகளையும் ஒன்று சேர்த்ததாக விலைமனு சமர்ப்பிக்க முடியும்.

| உருப்படி இல. | விபரம் | அளவு (மொத்த தொகை அடிப்படையில் மாற்றத்திற்கு உட்பட்டது) | செல்லுபடியாகும் விலைமனு பிணையின் பெறுமதி (இ.ரூபா) |
|---|---|---|---|
| 01 | Smart Board | 118 | 511,250.00 |
| 02 | மேசைக் கணினி | 150 | 260,000.00 |
| 03 | அலுவலக உபகரணம் | 24 மடிக்கணினிகள்<br>24 மேசைக் கணினிகள்<br>4 நிழற்பிரதி இயந்திரங்கள்<br>7 அச்சுப்பொறிகள் | 113,900.00 |

2. விலைமனு ஆவணத்தின் விநியோக அட்டவணை- பிரிவு VI இல் குறிப்பிடப்பட்டவாறு விநியோக இடம் மற்றும் திகதி.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் தலைமை கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (மின்னஞ்சல் - pdefin@gmail.com) என்பதோடு மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களின் கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. தேவையான தகைமையில் உள்ளடங்குவன:
   - 5.1. வர்த்தகப் பதிவு சான்றிதழ்
   - 5.2. நிதித்திறன்
   - 5.3. விலைமனுதாரர்கள் இலங்கையின் கம்பனிப் பதிவாளருடன் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனு உருப்படிகளின் வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக அங்கீகரிக்கப்பட்ட வணிகர் ஒருவராக செயற்படல் வேண்டும்.
   - 5.4. விலைமனுதாரர் விலைமனு உருப்படிகளின் வழங்கல் மற்றும் நிறுவுதலில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.
   - 5.5. விலைமனுதாரர் அவசியமான விற்பனைக்கு பின்னரான சேவைகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப அனுபவம் மற்றும் தகுதிபெற்ற ஊழியர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 5.6. கொள்வனவாளர் மூலம் ஏற்கின்ற திகதியில் இருந்து தொழில்நுட்ப விபரக்குறிப்புகளில் கோரப்பட்டுள்ளவாறு அனைத்து உருப்படிகளுக்கான விரிவான உத்தரவாதம்.
   - 5.7. விலைமனுதாரர் அடுத்து ஆறு ஆண்டுகளுக்காக பாகங்கள் இலவசமாகக் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

   விலைமனு ஆவணத்தின் பிரிவு-III இல் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன.
6. கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் ரூபா மூவாயிரம் (ரூபா 3,000.00) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2022.04.18 ஆம் திகதி தொடக்கம் 2022.05.12 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2022.05.13 ஆம் திகதி 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கீழுள்ள முகவரியில் நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 30 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்கள், திருகோணமலை, உட்துறைமுக வீதி, கிழக்கு மாகாண, மாகாணக் கல்வித் திணைக்கள, மாகாணப் பணிப்பாளரின் பெயருக்கு வரையப்பட்டதும் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கு புகழ்பெற்ற வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்டதுமான 2022.06.12 ஆம் திகதி வரை செல்லுபடியான விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

   6 மற்றும் 7 ஆவது பந்தியின் கீழ் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**முகவரி: தலைமை கணக்காளர்**
**மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்,**
**உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை**
**தொலைபேசி: 026 - 2220085**
**தொலைநகல் இலக்கம்: 026-2222110**

**என். புள்ளநாயகம்**
**தலைவர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**கிழக்கு மாகாணம்**
**திகதி:- 2022.04.11**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | 05 |
| | 06 | 07 | 08 | | 09 |
| 10 | | 11 | | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | | 18 |
| | 19 | | 20 | | |
| | | 21 | 22 | 23 | 24 |

பெயர் ..................................................

வகுப்பு ..................................................

தொலைபேசி இல ..................................................

பாடசாலை பெயர் ..................................................

வதிவிட முகவரி ..................................................

..................................................

............................ ..........................................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

01. இளைஞனையும், ஆண் மாட்டையும் (எருது) குறிக்கும் சொல்.
03. உணவில் சுவையூட்டியாகச் சேர்க்கப்படுவது, இத் தாவரத்தின் வேர்த்தண்டுப் பகுதியானது உணவின் சுவையூட்டியாகவும், தேநீருக்குச் சுவையூட்டவும் பயன்படுகின்றது.
06. வருமானம் பெறுவதற்கு உழைக்க வேண்டும், இல்லையேல் கையில் எதுவுமே இல்லாமல் இறுதியில் இதுதான் வந்து சேரும்.
12. நிறையுணவான திரவ ஆகாரம் தரும் மிருகம். (தலைகீழான சொல்)
14. புரியாத சொற்களுக்கு பொருள் தேடவேண்டுமானால் இப்புத்தகம் தேவை. (தலைகீழான சொல்)
21. வெண்ணிறமும், நறுமணமும் கொண்ட அழகிய மலர்.

**மேலிருந்து கீழ்**

02. எலியின் வசிப்பிடம் இது. (தலைகீழான சொல்)
03. கண்ணுக்கு பாதுகாப்பு தரும் கவசம்.
05. சிற்பிகளால் வடிக்கப்படும் கலைவடிவம், பண்டைக்கால கருங்கல் கலைப்படைப்புகளை இன்றும் எம்மால் காண முடிகின்றது.
07. மா, பலா, வேம்பு, மாடு போன்றவற்றின் இளைமைப் பருவ மரபுச் சொல் (தலைகீழான சொல்)
10. வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு பணிவிடை செய்யும் உத்தியோகத்தர்.
15. பறக்கவும், நீரில் நீந்தவும் கூடிய பறவையினம். (தலைகீழான சொல்)
17. முதுகில் மூன்று கோடுகள் கொண்ட பாலூட்டி உயிரினம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 06

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வெள்ளிழா 08. ஆவி 10. காலி 15. காலை 21. தலை 23. ஏழை 25. அம்பாறை

**மேலிருந்து கீழ்**

01. வெங்காயம் 03. வாளி 05. விழா 09. ஆவணி 12. இலை 15. காந்தம் 20. வாழை 21. பாலை 24. ஏணி

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 05

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**ராஷிட் வாஹிட்,**
தரம் 12, அல் அதான் ம.வி.,
26/2, பெரியபள்ளிவாசல் வீதி,பதுளை.

**இரண்டாம் பரிசு**
**எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்,**
தரம் 06, அலிப் சர்வதேச பாடசாலை,
41B, முஸ்லிம் வீதி, வெளிப்பன்னை.

**மூன்றாம் பரிசு**
**சாரான் அப்துல் றகீம்,**
அல் அமான் மு.ம.ம.வி,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

### பாராட்டு பெறுவோர்

1. **ஸீனத் தஹானி சாட்,** தரம் 09, பதியுதீன் மகளிர் கல்லூரி, டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, கண்டி.
2. **நி. இலக்கியா,** தரம் 06, கொ/சைவ மங்கையர் கழக பாடசாலை, கொழும்பு 06.
3. **எம்.ஐ. ஜனா,** தரம் 05, ப/பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, 45/15, தயாகுணசேகர வீதி, பதுளை.
4. **என். நிவேதிதா,** தரம் 04, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, கண்டி.
5. **ஜே. லிவிங்ஸ்ரன்,** தரம் 03, பாமஸ்ரன் தமிழ் வித்தியாலயம், லிந்துலை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 07
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :


அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

***தெளிவுரை :***

*நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள்.*

# பொறுமையுடன் கூடிய விடாமுயற்சி நிச்சயம் வெற்றியைத் தரும்

எடிசன் மின்சார மின்குமிழை கண்டுபிடித்த பிறகு தன் நண்பர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அந்த மின்குமிழை ஒளிர வைத்து காட்டுவதற்காக ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார். அவரது ஆய்வகத்தின் மேல் தளத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.




எடிசன் தனது உதவியாளரை அழைத்து மின்சார மின்குமிழை மேல் தளத்திற்கு கொண்டு வரச் சொன்னார். அந்த உதவியாளர் மின்குமிழை கொண்டு வருகையில் அது கை தவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது. அங்கிருந்த எல்லோரும் அதிர்ச்சி அடைந்தார்கள். உதவியாளரும் பதற்றம் அடைந்து விட்டார் ஆனால் எடிசனும் எந்த பதற்றமும் அடையவில்லை.

ஆயிரம் தோல்விகளை சந்தித்து மின்சார மின்குமிழை உருவாக்கிய அவருக்கு மீண்டும் ஒரு மின்சார மின்குமிழை உருவாக்குவது மிகவும் எளிதாக இருந்தது. சிறு முயற்சி செய்து மீண்டும் ஒரு மின்குமிழை உருவாக்கினார். அதை மீண்டும் அதே உதவியாளரிடம் கொடுத்து மேலே கொண்டு வரச்செய்தார்.

மின்குமிழை கீழே போட்டு உடைத்த அவரிடமே அதை மீண்டும் கொடுக்கிறீர்களே என்று சிலர் ஆச்சரியப்பட்டு எடிசனிடம் கேட்டார்கள்.

அந்த மின்குமிழை மீண்டும் உடைந்தாலும் என்னால் இன்னொரு மின்குமிழை உருவாக்க முடியும். ஆனால் என்னுடைய உதவியாளரின் மனதை உடைத்து விட்டால் அதை என்னால் சரிசெய்ய முடியாது. அதனால்தான் மீண்டும் அவரிடம் அதே பணியை கொடுத்தேன். அவர் அவரது பணியையும், அவரது பொறுப்பையும் என்னுடைய நம்பிக்கையும் நன்றாக உணர்ந்து மீண்டும் வேலை செய்வார். என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்றார் எடிசன்.

அப்போதுதான் எடிசனுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்த அந்த பொறுமையுடன் கூடிய விடா முயற்சியின் முக்கியத்துவத்தையும் அங்கிருந்த அனைவரும் உணர்ந்தார்கள்.

எடிசன் ஆயிரம் முறை தோல்வி கண்டு ஒரு மின்சார மின்குமிழை கண்டுபிடித்தார். அந்த மின்குமிழை தனது உதவியாளரின் கை தவறி விழுந்து உடைந்ததற்காக எடிசன் திகைக்கவில்லை. நொந்து போகவில்லை. அந்த அதிர்ச்சிகரமான நிமிடங்களில் கூட அமைதியாக நடந்து கொண்ட நேர்மறை சிந்தனை உள்ள ஒரு அற்புதமான மனிதர் எடிசன்.

**சோ.வினோஜ்குமார்,**
யாழ் பல்கலைக்கழகம்.

# இவ்வார மழலை



**ஹர்த்திக்ஷன்,**
முரளி - கோகிலப்பிரியா,
ஹேக்கித்த வீதி, வத்தளை.

# எனது பொழுதுபோக்கு

எமது வாழ்வில் கிடைக்கின்ற ஓய்வு நேரங்களை நாம் பயனுள்ளதாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அதுவே ஒரு நல்ல மனிதனுக்கு அழகு. நான் எனது பொழுதுபோக்காக நல்ல புத்தகங்களை வாசிப்பதை வழமையாகக் கொண்டிருக்கிறேன்.

எனக்கு நல்ல புத்தகங்களை வாசிப்பதில் அதிக ஆர்வம் இருக்கின்றது. ஓய்வு நேரங்களில் அருகில் உள்ள நூலகங்களுக்கு சென்று அங்கே காணப்படுகின்ற சிறந்த சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், அறிவியல் சார்ந்த புத்தகங்களை வாசிப்பேன்.

இது எனக்கு பல நல்ல அனுபவங்களை பெற்று தருகின்றது. நிறைய புதிய விடயங்களை என்னால் அறிந்து கொள்ள முடிவதுடன் சிறந்த ஆக்கங்களை எழுதவும் இது எனக்கு உதவியாக இருந்திருக்கின்றது.

நூலகங்களில் கிடைக்கின்ற அமைதி ஆத்மார்த்தமானது. அது மனதை ஒருநிலைப்படுத்துவதோடு நல்ல அறிவையும் எனக்கு பெற்று தருகின்றது. நூலகத்தில் இருந்து பல புத்தகங்களை வீட்டுக்கு கொண்டு சென்று ஓய்வு நேரங்களில் வாசிப்பது எனது வழக்கமாகும்.

சிறந்த புத்தகங்களை தேடுவது ஒரு சிறந்த உணர்வை எனக்கு தரும் இதுவே எனக்கு வாழ்வின் தேடலை உணர்த்தியிருக்கின்றது. அவ்வாறே நான் வாசித்த நல்ல புத்தகங்களை பற்றி எனது நண்பர்களோடு பகிர்வது ஒரு சிறந்த அனுபவமாகும்.

இவ்வாறான கலந்துரையாடல்கள் எனக்கு மிகவும் பிடித்தமானவை இது எனக்கு பல நண்பர்களை உருவாக்கி தந்திருக்கின்றது. எந்த இடங்களுக்கு சென்றாலும் நல்ல புத்தகங்களை தேடி சென்று வாங்குவது எனக்கு பிடித்தமான ஒன்றாகும்.

என்னுடைய நண்பர்களும் எனக்கு நல்ல புத்தகங்களை பரிசளிப்பார்கள். நான் புத்தகங்களை போலவே பத்திரிகைகளையும் அதிகம் வாசிப்பேன் அங்குள்ள நல்ல ஆக்கங்களை வாசிக்கின்ற போது சிறந்த எழுத்தாளர்களுடன் பழகியது போன்ற ஓர் உணர்வு எனக்கு கிடைக்கும். எனவே எனது பொழுதுபோக்கு எனக்கு மிகவும் பயனுள்ளதாய் உள்ளது.

**இரா. ராஹினி**
வெளிமடை.






**ஆர். யதுர்ஷினி,**
தரம் 08, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**பத்ரியா ஜெஹான்,**
தரம் 02B, கைரியா மகளிர் கல்லூரி,
கொழும்பு 10.

# நான் ஒரு ஆசிரியரானால்

நான் ஒரு ஆசிரியரானால் என்னை நம்பி வருகின்ற மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய அவர்களுக்கு கற்பிப்பேன். ஒரு மனிதனுடைய தலை எழுத்தை மாற்ற கூடியது கல்வி ஆகும். அதனை கற்பிக்கின்ற ஆசிரியர் தெய்வத்துக்கு நிகரானவர் ஆவார்.

ஆகவே நான் இந்த ஆசிரிய தொழிலுக்கு பெருமை சேர்க்கின்ற ஒரு ஆசிரியனாக மாணவர்களுக்கு கல்வி போதிப்பேன். பணம் சம்பாதிக்கின்ற ஒரு தொழிலாக ஆசிரிய தொழிலை பார்க்கின்ற இந்த காலகட்டத்தில் நான் ஏழை மாணவர்களுக்கும் தரமான கல்வியை இலவசமாக வழங்க வேண்டும் என்று கருதுகின்றேன்.

ஒரு ஏழை மாணவனுக்கு கல்வியை வழங்குவது ஒரு பாலைவனத்துக்கு மழை கிடைத்து பசுமை நிலமாகுவதற்கு சமனாகும் என்பதை நான் அறிவேன். என்னிடம் வருகின்ற மாணவர்களுடைய அறியாமை எனும் இருளை விரட்டி அவர்களுக்க நல்லறிவினை புகட்டி அவர்களை நல்வழிப்படுத்துவேன்.

தவறு செய்கின்ற மாணவர்களை கண்டித்து அவர்களை திருத்துவேன். மாணவர்களுக்கு கல்வியை விடவும் நான் ஒழுக்கத்தை அதிகம் போதிப்பேன். அவர்களிடத்து உண்மை, நேர்மை, கருணை, விட்டுக்கொடுப்பு, சகோதரத்துவம் போன்ற நற்பண்புகளை வளர்க்க உதவுவேன்.

மாணவர்களுக்கு தேவையான கல்வியினை பல வழிகளிலும் தேடி சேர்த்து அவர்களுக்கு நான் வழங்குவேன். என்னால் முடிந்த வரைக்கும் அவர்களுக்கு கல்வியை மட்டுமன்றி அவர்களுது வாழ்க்கைக்கு தேவையான ஆலோசனைகளையும் வழங்குவேன்.


ஏனெனில் இன்றைய உலகம் வெறுமனே கல்வியை மட்டும் சார்ந்தது அல்ல. தொழில்முறை, தொழில்நுட்பம் என வளர்ச்சி அடைந்து விட்டதனால் இந்த போட்டி மிகுந்த உலகில் எனது மாணவர்கள் வெற்றி அடையும் படியாக நான் அவர்களுக்கு கற்பிப்பேன்.

**என். பவித்திரன்,**
கொ/முகத்துவாரம் இந்துக்கல்லூரி,
கொழும்பு 15.

# நான் ஒரு கதைப்புத்தகம்

கதை கேட்பது என்பது குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமானது. அம்மா சொன்ன கதை, பாட்டி சொன்ன கதை, அப்பா சொன்ன கதை என்று நாம் பல கதைகளை கேட்டிருப்போம் இன்றுவரை எமக்கு அந்த கதைகள் மனதில் ஆழமாக பதிந்திருக்கும் அவ்வாறு வாழ்வை அழகாக்கும் கதைகள் ஏராளம்.

ஆம் நான் ஒரு கதைப்புத்தகம் நானும் பல கதைகளை என்னுள் சுமந்து உங்களுக்காக சொல்லுவேன். வரலாற்று கதைகள் அவை உங்களுக்கு வரலாற்றை கற்று கொடுக்கும் அது போல எதிர்காலத்தை எதிர்கொள்ளவும் உதவும். புதிர் கதைகள் அவை உங்களுக்கு புத்தி சாதுரியத்தை வழங்கும். நகைச்சுவை கதைகள் அவை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இவ்வாறு நான் பல வகையான கதைகளை என்னை வாசிப்பவர்களுக்கு கூறி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவேன்.



இந்த கதைகள் உங்கள் வாழ்வை மாற்ற வல்லது உங்களுக்கு பல புதிய அனுபவங்களை தரவல்லது. வாழ்வின் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இந்த கதைகள் உங்கள் ஞாபகத்துக்கு வரும் என நான் நம்புகின்றேன். என்னை வாசிக்க பலருக்கு ஆர்வம் இருக்கின்றது. குழந்தைகளுக்கென்றால் சொல்லவே தேவையில்லை மிகுந்த ஆர்வம் கதைகளை வாசிப்பதன் மூலம் அவர்கள் கற்பனை வளம் பெறுவார்கள் எதிர்காலத்தில் அவர்கள் ஒரு சிறந்த படைப்பாளிகளாக வருவார்கள். ஒரு கதைப்புத்தகமாகிய நான் என்னை வாசிப்பவர்களை மகிழ்ச்சியடைய செய்வதோடு அவர்களது வாழ்க்கைக்கும் உதவும் படியாக இருப்பேன். இதனால் அவர்களது வாழ்வும் ஒரு நல்ல கதையாக மாறும். ஒரு கதைப்புத்தகத்துக்கு இதனை விட பெருமை வேறு என்ன இருந்து விட போகின்றது.

**வி.அபிசாலினி,**
கிருலப்பனை,



**எஸ். திவ்யானி,**
தரம் 13, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.

## பார்!

வெள்ளைப் புறாக்கள் அழகை பார்
வெளிச்ச வீட்டில் நிலவைப் பார்
பள்ளம் மேடுகளை சமனாக்கிப் பார்
பசிக்கும் வயிறுகளை நிரப்பிப் பார்

கூடைக் கொழுந்துகள் முகத்தைப் பார்
கூவும் குயில்களின் தோப்பைப் பார்
வாடைக் காற்றின் வாசத்தைப் பார்
வனப்பான இலங்கையின் பாசத்தைப் பார்..!

**வாலிதாசன்,** கொழும்பு.



**வை.ஏ.எப். ஜாஷி,**
தரம் 06, பொல/முஸ்லிம் தேசிய பாடசாலை,
பொலன்னறுவை.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.